THRU the BIBLE

வாக்குத்தத்தமும் சுதந்தரமும்

பகுதி 5 - ஆதியாகமம் 25 to 36



சந்தியுங்கள் பகிருங்கள் வளருங்கள்

ஒன்றாகக் கூடுங்கள், படித்ததைப் பகிர்ந்துகொள்ளுங்கள்,
ஒருவருக்கொருவர் உற்சாகமூட்டுங்கள்



வாரம் ஒருமுறை

கூடிவரும்போது செய்ய வேண்டியவை



“வேதவாக்கியங்களுடன் உறவாடுதல்” என்னும் இந்தப் பாடத்தை பயன்படுத்துவது எவ்வாறு?



ஜெபத்துடன் தொடங்குங்கள்: நீங்கள் ஒவ்வொரு பாடத்தையும் படிக்கத் தொடங்குவதற்கு முன்னும், “கர்த்தாவே, இதைப் படிப்பதின் வாயிலாக, கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அறிவிலும் வளர உதவுங்கள்” என்று ஜெபியுங்கள்.



கொடுக்கப்பட்ட வேதபகுதியை வாசியுங்கள்: தேவனுடைய வார்த்தையின் ஆழமான அர்த்தத்தைப் புரிந்துகொள்வதற்காக உங்கள் கண்களைத் திறக்கும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.



“வேதவாக்கியங்களுடன் உறவாடுதல்” என்னும் வழிகாட்டியைப் படியுங்கள்: நீங்கள் படித்த பகுதியின் பொருள், பின்னணி, மற்றும் தனிப்பட்ட நடைமுறைச் செயல்பாடுகள் குறித்து சிந்திப்பதற்காக வழங்கப்பட்ட வேதவாக்கியங்களுடன் உறவாடுதல் என்னும் வழிகாட்டியைப் படியுங்கள்.



ஒவ்வொரு பாடத்தைப் படித்த பிறகும் கொடுக்கப்பட்டுள்ள சிந்தனைக் கேள்விகளுக்குப் பதிலளியுங்கள்: “வேதவாக்கியங்களுடன் உறவாடுதல்” வழிகாட்டியில் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைப் பற்றி சிந்தியுங்கள். ஒவ்வொரு போதனையைக் கற்றுக்கொண்ட பிறகும் தனிப்பட்ட சிந்தனைக் கேள்விகள் மற்றும் நடைமுறைக் கேள்விகளைப் பற்றி உங்கள் குழுவினருடன் கலந்து ஆலோசியுங்கள்.



டாக்டர் வெர்னோன் மெக்கியின் போதனைகளைக் கேளுங்கள்: டாக்டர் வெர்னோன் மெக்கியின் அனைத்துப் போதனைகளையும் படிக்க விரும்பினால் TTB.org என்று இணையதளத்துக்குச் சென்றோ அல்லது கைபேசி செயலியை பதிவிறக்கம் செய்தோ அல்லது யூடியூப்-ல் சென்றோ கேட்டும் வாசித்தும் கற்றுக்கொள்ளலாம்.



பரிந்துரைக்கப்படுகிற இடைநிறுத்தம் மற்றும் மறுதொடக்க ஐகானைப் பயன் படுத்தவும். இது அதனுடைய உள்ளடக்கத்தை கருத்துடனும் அதேவேளையில் உங்கள் சொந்த விருப்பத்திற்கு ஏற்றாற்போல் தொடர்ந்து படிக்கவும் வழிகாட்டும்.

உங்களுடைய சிந்தனைக்கு

பக்கம்

வேத வாக்கியங்களுடன் உறவாடுதல் என்னும் இந்தப் பாடத்தை பயன்படுத்துவது எவ்வாறு? 2

பக்கம்

ஒரு சீர்குலைந்த குடும்பத்தில் தேவனுடைய கிருபை (ஆதியாகமம் 25 - 29:30) 7

பக்கம்

தேவனுடைய கரத்தில் சிட்சையை எதிர்கொள்ளுதல் (ஆதியாகமம் 29:30 - 36) 61


இரட்டையர்கள்
ஆதியாகமம் 25

இரட்டையர்கள்

ஜெபத்துடன் தொடங்குங்கள்
வேதபகுதி: ஆதியாகமம் 25
கேளுங்கள் THRU the BIBLE: ஆதியாகமம் 25

அன்புள்ள பரலோகப் பிதாவே,

நாங்கள் வேதாகமத்தைக் கற்றுக்கொள்ளும்படி ஒன்றாகக் கூடிவர உதவியதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். நாங்கள் உமது வார்த்தையைத் தியானிக்கும்போது எங்கள் இதயங்களையும் மனதையும் திறந்தருளும். உமது சத்தியத்தை எங்களுக்குக் கற்றுத்தாரும், நாங்கள் அவற்றைச் சரியாகப் புரிந்துகொள்ள வழிகாட்டும். உமக்குச் சித்தமானபடி நாங்கள் ஞானத்திலும், விசுவாசத்திலும் வளர எங்களுக்கு உதவி செய்யும்.

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் பிதாவே. ஆமென்.

மாம்சத்துக்கும் ஆவிக்குமான போராட்டம்

ஆதியாகமம் 25

ஈசாக்கும் ரெபெக்காளும் தங்கள் **வாழ்க்கையை ஒன்றிணைந்து தொடங்கி** மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள். ஆனால், சாராளைப் போலவே ரெபெக்காளுக்கும் குழந்தை பாக்கியம் இல்லை. **தன் மனைவிக்காக ஈசாக்கு 20 ஆண்டுகள் தேவனிடம் மன்றாடி ஜெபித்தான்.** இறுதியில், கர்த்தர் அவனது வேண்டுதலைக் கேட்டருளினார். நேரம் வந்தபோது, அவள் கர்ப்பமாகி **இரட்டைக் குழந்தைகளைச் சுமந்தாள்!** ஆனால், அவளது **கர்ப்பகாலம்** அவளுக்கு எளிதாக இருக்கவில்லை. அந்த **இரண்டு குழந்தைகளும்** அவளது **வயிற்றுக்குள்ளேயே** தங்களுக்குள் முட்டிக்கொண்டு **போராடின.** இதை உணர்ந்த ரெபெக்காள், இதைப் பற்றி தேவனிடம் கேட்டாள். ஏதோ ஒரு **முக்கியமான காரியம் நடக்கப்போகிறது என்பதை அவள் புரிந்துகொண்டாள்.**

பிறப்பதற்கு முன்பாகவே தொடங்கிய இந்த இரண்டு பிள்ளைகளின் போராட்டம், இன்றும் உலகத்தில் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும் ஒரு போராட்டத்தை நமக்கு எடுத்துக்காட்டுகிறது. இது ஒளிக்கும் இருளுக்கும், நன்மைக்கும் தீமைக்கும், மற்றும் ஆவிக்கும் மாம்சத்திற்கும் இடையிலான போராட்டமாகும். தேவனுடைய ஒவ்வொரு பிள்ளைக்கும் இந்தப் போராட்டத்தைப் பற்றிய அனுபவம் நிச்சயம் இருக்கும். (இதைப் பற்றி ரோமர் 7-ஆம் அதிகாரத்தில் நீங்கள் வாசிக்கலாம்).

> அவர்கள் பிறப்பதற்கு முன்பாகவே தொடங்கிய இந்த இரண்டு பிள்ளைகளின் போராட்டம், இன்றும் இந்த உலகத்தில் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும் ஒரு போராட்டத்தை நமக்கு எடுத்துக்காட்டுகிறது.



குழப்பமும் சண்டையுமுள்ள குடும்பம்

தந்தை - ஈசாக்கு

ஏசா - தந்தைக்குப் பிரியமான மகன்

ஈசாக்கு ஏசாவை நேசித்தான்

- ஏசா எப்போதும் வெளியிலும் காடுகளிலும் சுற்றித்திரிகிற ஒரு திறமையான வேட்டைக்காரனாகவும், பலசாலியாகவும், சாகசக்காரனாகவும் இருந்தபடியால் அவன் ஈசாக்குக்கு மிகவும் பிரியமான மகனாக இருந்தான்.
- ஏசாவின் உடல் வலிமையையும் அவனது திறமையையும் ஈசாக்கு மிகவும் விரும்பினான். மேலும், ஏசா வேட்டையாடிக் கொண்டுவரும் இறைச்சியை அவன் மிகவும் விரும்பிச் சாப்பிட்டான்.
- ஒரு பிள்ளையின் மேல் மட்டும் காட்டப்பட்ட ஒருதலைப்பட்சமான அன்பு, அந்தக் குடும்பத்தில் ஒரு ஏற்றத்தாழ்வையும் பிரிவினையையும் உருவாக்கியது.

"ஏசா வேட்டையாடிக் கொண்டுவருகிறது ஈசாக்கினுடைய வாய்க்கு ருசிகரமாயிருந்ததினாலே ஏசாவின்மேல் பட்சமாயிருந்தான்" *(ஆதியாகமம் 25:28).*

ஏசாவின் சுபாவம்

- துணிச்சலும் கரடுமுரடான சுபாவமும் கொண்டவன்; தன் சரீரப் பசியால் உந்தப்பட்டவன்.
- உலகப்பிரகாரமான காரியங்களிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தியவன்.
- ஆவிக்குரிய சுதந்தரத்தை அசட்டைப்பண்ணியவன்.
- மாம்சத்தின் இச்சைகளுக்கு அடையாளமாக விளங்கியவன்.



தாய் - ரெபெக்காள்

யாக்கோபு - தாய்க்குப் பிரியமானவன்

ரெபெக்காள் யாக்கோபை நேசித்தாள்

- யாக்கோபு ரெபெக்காளுக்கு மிகவும் பிரியமானவனாக இருந்தான், அவன் வீட்டோடு தங்கி, அவள் வழிகாட்டுதலின்படி வளர்ந்தான்.
- அவன் பிறப்பதற்கு முன்பாகவே, யாக்கோபே தலைமையேற்பான் என்று தேவன் அறிவித்திருந்தார்.
- ஆனாலும், தேவன் வாக்குத்தத்தம் பண்ணி இருந்ததை அடைந்துகொள்ள, யாக்கோபு அநேக வேளைகளில் தந்திரத்தையும் வஞ்சகத்தையுமே சார்ந்து செயல்பட்டான்.



"ரெபெக்காளோ யாக்கோபின்மேல் பட்சமாயிருந்தாள்" *(ஆதியாகமம் 25:28).*

யாக்கோபின் சுபாவம்

- அமைதியானவனும், ஆழமாக சிந்திப்பவனும், ஆவிக்குரிய உணர்வுடையவனுமாக இருந்தான்.
- தேவனுடைய வாக்குத்தத்தங்களை விலையேறப்பெற்றதாக எண்ணினான்.
- தன்னையே சார்ந்திருக்கும் சுயபுத்தியோடும், வஞ்சக குணத்தோடும் அவன் போராடினான்.
- அவனிடம் குறைகள் இருந்தபோதிலும், தேவன் தமது நோக்கத்திற்காக அவனை உருவாக்கிக் கொண்டிருந்தார்.

சேஷ்டபுத்திரபாக சம்பவம்:
பாவம் அழிக்க வகைதேடுகிறது

ஏசா வயலிலிருந்து வந்தான். அவன் வெளியே நீண்டநேரம் வேலை செய்தபடியால், **களைப்பாகவும் பசியாகவும்** இருந்தான். அந்தநேரத்தில் யாக்கோபு கூழ் காய்ச்சிக் கொண்டிருந்தான். அவன் நன்றாய் சமைக்கக்கூடியவன். "**நான் களைப்பாயிருக்கிறேன், அந்தச் சிவப்பான கூழிலே சாப்பிடக் கொஞ்சம் தா**" என்று ஏசா கேட்டான். யாக்கோபு இதை ஒரு நல்ல வாய்ப்பாகக் கண்டான். **அவன் தந்திரமுள்ளவன். மூத்த மகனுக்குச் சட்டப்பூர்வமாகச் சொந்தமான சேஷ்டபுத்திரபாகத்தை (தலைமகன் உரிமையை) குறுக்கு வழியில் அடைய விரும்பினான்**. யாக்கோபு அவனை நோக்கி: "உன் சேஷ்டபுத்திரபாகத்தை இன்று எனக்கு விற்றுப்போடு, அதற்குப் பதிலாக இந்தக் கூழைத் தருகிறேன்" என்றான்.

சேஷ்டபுத்திரபாகம் என்பது, அதைக் கொண்டிருப்பவர் **குடும்பத்தின் தலைவராகவும், ஆசாரியராகவும்** இருப்பதைக் குறிக்கும். இந்தக் குடும்பத்தைப் பொறுத்தவரை, சேஷ்ட புத்திரபாகத்தைக் கொண்டிருப்பவரின் **சந்ததியிலேயே இயேசு கிறிஸ்து வருவார்** என்பதே அதன் பொருள். ஆனால் ஏசா அதற்கு **எந்த முக்கியத்துவமும் கொடுக்க வில்லை**. அவன் தங்கள் **குடும்பத்தின் ஆசாரியனாக இருக்கவும் விரும்பவில்லை. தேவனுக்குரிய காரியங்களில் தனக்கு விருப்பம் இருப்பதைப்போல காட்டிக்கொள்ளக் கூட அவன் விரும்பவில்லை.** இயேசு கிறிஸ்து பிறக்கப் போகிற அந்த தலைமுறை வரிசையில் வருவதில் அவனுக்கு எவ்வித அக்கறையும் இருக்கவில்லை.

யாக்கோபு இதைக் கவனித்து, "**நீ உன் சேஷ்டபுத்திரபாகத்தை எனக்குத் தந்தால், நான் உனக்கு ஒரு கிண்ணம் கூழ் தருகிறேன்**" என்று தந்திரமாகச் சொன்னான். **ஏசாவும்** இந்த **ஒப்பந்தத்திற்கு சந்தோஷமாக** சம்மதித்தான்.

யாக்கோபு தேவனை எவ்வளவு மதித்தானோ, அதே அளவுக்கு அவன் செய்த இந்தக் காரியமும் தவறானதாகவே இருந்தது. "**மூத்தவன் இளையவனுக்கு ஊழியஞ்செய்வான்**" என்று தேவன் ஏற்கனவே வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார். **தேவனுடைய ஏற்றவேளையில் சேஷ்டபுத்திரபாகம் யாக்கோபுக்கு நிச்சயமாகக் கிடைத்திருக்கும்**. ஆனால் யாக்கோபால் பொறுத்திருக்க முடியவில்லை. எனவே அதை அவன் தன் சொந்த முயற்சியால் எடுத்துக் கொண்டான். தேவன் அதைத் தனக்குக் கொடுக்கும்வரை காத்திருந்திருப்பதற்குப் பதிலாக, தனக்குத் தேவையானதைத் தானே எடுத்துக்கொள்ளலாம் என்று யாக்கோபு நினைத்தான். தான் எடுத்துக்கொள்கிற அளவுக்கு புத்திசாலியாக இருக்கிறேன் என்று எண்ணினான். ஆனால் "**ஒருவன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்!**" என்கிற பாடத்தை பிற்காலத்தில் யாக்கோபு தேவனிடத்திலிருந்து **மிகவும் கடினமான வழியில் கற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று**.

"**ஏசா தன் சேஷ்டபுத்திரபாகத்தை அலட்சியம்பண்ணிவிட்டு**" உட்கார்ந்து அந்தக் கூழைச் சாப்பிட்டான். **அது அவனுக்கு ஒரு பொருட்டாக இல்லாததால், தன் விலைமதிப்பற்ற உரிமையை அவன் அற்பமாக விட்டுக் கொடுத்துவிட்டான்**.



> "தேவனுடைய ஏற்ற வேளையில் சேஷ்டபுத்திரபாகம் யாக்கோபுக்குக் கிடைத்திருக்கும். ஆனால் யாக்கோபால் பொறுத்திருக்க முடியவில்லை. ஆகையால், தேவன் அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணியதை அவன் தன் சொந்த முயற்சியால் எடுத்துக்கொள்கிறான்."





தேவனுடைய மாறாத சத்தியங்கள்

ஆதியாகமம் 25-ம் அதிகாரத்திலிருந்து நமக்கான பாடங்கள்

1

மாம்சத்துக்கும் ஆவிக்கும் இடையிலான இந்த இடைவிடாத போராட்டம், நம் வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் ஒரு யுத்தமாகும். தாயின் கர்ப்பத்திலேயே தொடங்கி, யாக்கோபுக்கும் ஏசாவுக்கும் இடையே வாழ்நாள் முழுவதும் நடந்த இந்தப் போராட்டம்; ஒளியும் இருளும், நன்மையும் தீமையும், ஆவியும் மாம்சமும் ஒன்றோடு ஒன்று எதிர்த்துநிற்கும் நீடித்த போராட்டத்தை நமக்கு எடுத்துக்காட்டுகிறது. **உண்மை என்னவென்றால், தேவனுடைய ஒவ்வொரு பிள்ளையும் இந்தப் போராட்டத்தைத் தங்கள் வாழ்வில் நிச்சயமாகச் சந்திப்பார்கள்** (*கலாத்தியர் 5:16-17; ரோமர் 7:22-23; ரோமர் 8*).

2

உலகப்பிரகாரமான காரியங்களைவிட, கிறிஸ்துவைப்போல மாறவேண்டும் என்ற நமது வாஞ்சையையே தேவன் மதிப்புமிக்கதாக எண்ணுகிறார். ஏசா மாம்சத்தின் அடையாளமாக இருக்கிறான். அவன் வனசஞ்சாரியும் வேட்டைக்காரனுமாக இருந்தான். தேவனை அறிந்துகொள்ளவும் அவருக்காக வாழவும் அவனுக்கு விருப்பமில்லை. அவன் முற்றிலும் இவ்வுலக மனிதனாக வாழ்ந்து, "தன் சேஷ்ட புத்திர பாக்கியத்தை அசட்டைப் பண்ணினான்". அந்தப் பாக்கியம் குடும்பத்தின் ஆவிக்குரிய தலைமையையும், கிறிஸ்து வரப்போகிற வம்ச வரிசையையும் குறிக்கிறது. ஆனால் யாக்கோபு பல குறைகளும் தந்திரமும் உடையவனாயிருந்தாலும், வாழ்க்கையில் இவ்வுலக காரியங்களைவிட மேலான ஒன்று உண்டு என்பதை உணர்ந்தவன். அவன் தேவனுக்குரிய காரியங்களை மதித்தான். யாக்கோபுக்கு தேவனுக்காக வாழ வேண்டும் என்ற வாஞ்சை இருந்தபடியால், **அவர் அவனுடைய குறைகளின் மத்தியிலும் கிரியைசெய்து, அவனைச் சுத்திகரித்து மாற்றினார்** (*எபிரெயர் 12:16-17; 1 யோவான் 2:15-17*).

3

மனுஷருடைய தந்திரங்களைச் சார்ந்திருக்காமல், தேவனுடைய ஏற்ற வேளையை நாம் நம்பியிருக்க வேண்டும். இரட்டைப் பிள்ளைகள் பிறப்பதற்கு முன்பாகவே, மூத்தவன் (ஏசா) இளையவனுக்கு (யாக்கோபுக்கு) ஊழியஞ்செய்வான் என்று தேவன் ஏற்கனவே வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார். சேஷ்டபுத்திரபாகம் யாக்கோபுக்கு உரியதாகவே இருந்தது. ஆனால் தேவனுடைய வேளைக்காகக் காத்திருக்காமல், அவன் தவறான விதத்தில் காரியங்களைத் தன் கைகளில் எடுத்துக்கொண்டு, தந்திரத்தினால் அதை அடைந்தான். **நம்முடைய சொந்த தந்திரத்தினாலும் சுயபுத்தியினாலும் காரியங்களைச் சாதிக்க நினைப்பதற்குப் பதிலாக, தேவன் தமது வாக்குத்தத்தங்களை நிறைவேற்றும்வரை நாம் அவருக்காகக் பொறுமையாய்க் காத்திருக்க வேண்டும் என்பதே இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாகும்** (*ரோமர் 9:10-12; யாக்கோபு 4:13-15*).

சிந்தனைக்கான கேள்விகள்

கேள்வி 1

என் வாழ்க்கையில், மாம்சத்தின் ஆசைகளுக்கும் தேவனுடைய வார்த்தையின்படி நடக்க வேண்டும் என்ற விருப்பத்திற்கும் இடையே தற்போது எந்தப் போராட்டம் நடைபெறுகிறது?

கேள்வி 2

என் அன்றாட பழக்கவழக்கங்களில், நான் மாம்சத்தைப் பேணி வளர்க்கிறேனா? அல்லது தேவனை அறிந்து அவருடைய சித்தத்தின்படி வாழும் ஆவிக்குரிய வளர்ச்சியை ஊக்குவிக்கிறேனா?

கேள்வி 3

ஏசாவைப் போல, உடனடி உலகப் பயன்களுக்காக என் நீண்டகால ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை விட்டுக்கொடுக்கிற பகுதிகள் ஏதேனும் உள்ளனவா?

கேள்வி 4

யாக்கோபைப் போல என்னிடத்தில் குறைகளும் தோல்விகளும் இருந்தாலும், தேவன் என்னைச் சுத்திகரித்து, அவருக்குரிய காரியங்களில் உண்மையான வாஞ்சையை வளர்க்க அனுமதிக்கிறேனா?

கேள்வி 5

தேவனுடைய வேளைக்காகக் காத்திருக்க முடியாததால், ஒரு முடிவை என் விருப்பப்படி அடைய தந்திரமாகச் செயல்பட வேண்டும் என்ற சோதனை எந்தச் சூழ்நிலைகளில் எனக்கு வருகிறது?

கேள்வி 6

எனக்கே நான் உதவிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை விட்டுவிட்டு, தேவன் தமது வாக்குத்தத்தங்களைத் தமது பரிபூரண காலத்தில் நிறைவேற்றுவார் என்று இன்னும் அதிகமாக எவ்வாறு நம்பலாம்?


ஈசாக்கின் வாழ்க்கை
ஆதியாகமம் 26

ஈசாக்கின் வாழ்க்கை

ஜெபத்துடன் தொடங்குங்கள்
வேதபகுதி: ஆதியாகம் 26
கேளுங்கள் THRU the BIBLE: ஆதியாகமம் 26

அன்புள்ள பரலோகப் பிதாவே,

"உமது உண்மையின்மேல் ஈசாக்கு வைத்த விசுவாசம், அவனுடைய பொறுமை மற்றும் கீழ்ப்படிதலின் முன்மாதிரிக்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் உமது வார்த்தையைத் தியானிக்கும்போது, எந்தச் சூழ்நிலையிலும் உம்மை விசுவாசிக்கவும், கீழ்ப்படிதலோடே நடக்கவும், உமது வாக்குத்தத்தங்களைச் சார்ந்துகொள்ளவும் எங்களுக்குக் கிருபை செய்யும். பிரச்சினைகளின்போது உமது சமாதானத்தை வெளிப்படுத்தவும், உம்மை உண்மையாய்ப் பின்பற்றவும் எங்கள் இருதயங்களை வனைந்தருளும்."

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் பிதாவே. ஆமென்.

ஈசாக்கின் விசுவாசப் பயணம்

ஆதியாகமம் 26

கர்த்தர் ஆபிரகாம், யாக்கோபு, தாவீது போன்ற வீரமும் செயல்திறனும் மிக்கவர்களை அழைத்தார். அதேவேளையில் அமைதியான மனிதனாகிய ஈசாக்கையும் அவர் அழைத்தார். ஈசாக்கின் வாழ்க்கை நமக்குச் சொல்லும் மிகப்பெரிய செய்தி பொறுமை என்பதாகும்.

அவர்களுடைய இரட்டைப் பிள்ளைகள் வளர்ந்து வரும் காலகட்டத்தில், ஈசாக்கும் ரெபெக்காளும் தேவனோடு தங்களுக்கு இருந்த தனிப்பட்ட உறவில் தொடர்ந்து வளர்ந்து வந்தார்கள். முன்னர், ஈசாக்கின் தகப்பனாகிய ஆபிரகாமின் நாட்களில் உண்டான பஞ்சத்தைப் போலவே, **ஈசாக்கின் நாட்களிலும் ஒரு பஞ்சம் உண்டாயிற்று. ஆபிரகாமின் காலத்தில் பஞ்சம் வந்தபோது அவரும் லோத்தும் எகிப்துக்குப் புறப்பட்டுச் சென்றிருந்தார்கள்** என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் தேவன் ஈசாக்குக்குத் தரிசனமாகி, **எகிப்துக்குப் போகவேண்டாம்** என்று திட்ட வட்டமாகக் கூறினார். அவர் அப்படிச் சொல்லியிருக்காவிட்டால், "**தந்தையைப் போலவே மகனும்**" என்ற நிலை ஏற்பட்டிருக்கும். **பாவம் செய்வதற்கு தலைமுறை இடைவெளி கிடையாது. அது ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு தொடர்கிறது.** தேவன் தலையிடாவிட்டால், தந்தை செய்த அதே தவறுகளையே மகனும் செய்திருப்பான். ஆகையால்தான் தேவன் இடைபட்டார். மேலும் பஞ்ச காலத்தில் எப்படித் தப்பிப் பிழைக்க வேண்டும் என்பதற்கான தெளிவான கட்டளைகளையும் ஈசாக்குக்கு வழங்கி, ஆபிரகாமோடு தான் செய்த உடன்படிக்கையை அவனுக்கும் உறுதிப்படுத்தினார்.

தேவன் ஈசாக்கை நோக்கி, "**நீ இந்தத் தேசத்தை விட்டுச் செல்லவேண்டாம்; எகிப்துக்குப் போகாமல், இந்தத் தேசத்திலே குடியிரு. உன் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு நான் இட்ட உடன்படிக்கையை உன்னோடு உறுதிப்படுத்த விரும்புகிறேன்**" என்றார்.

அவர் அளித்த **மூன்று வகையான வாக்குத்தத்தங்களை** அவனுக்கு மீண்டும் கூறினார்:

1. **தேசம் – "நான் உனக்கும் உன் சந்ததிக்கும் இந்தத் தேசங்கள் யாவையும் தருவேன்"**
2. **சந்ததி – "உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப்போல பெருகப் பண்ணுவேன்"**
3. **ஆசீர்வாதம் – "உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்"** (ஆதியாகமம் 26:3-5 பார்க்கவும்).

ஆபிரகாம் தேவனுடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டபடியினாலேயே தேவன் இதைச் செய்தார். **தேவன் ஆபிரகாமுக்கு ஒரு காரியத்தைச் சொன்ன போது, அவன் தேவனை விசுவாசித்து அதன்படி செயல்பட்டான். அவன் தமது விசுவாசத்தை செயல்களின் மூலம் வெளிப்படுத்தினான். விசுவாசம் என்பது முழு நம்பிக்கையோடு நாம் எடுத்துவைக்கும் ஓர் அடியாகும்.** ஆபிரகாம் **தேவனை விசுவாசித்தான்,** அது அவனுக்கு **நீதியாக எண்ணப்பட்டது.** ஈசாக்கும் தன் **தகப்பனைப் போலவே விசுவாசமுள்ளவனாக** இருக்க வேண்டும் என்று **விரும்பி** தேவன் **அவரிடம் கூறுகிறார்.**



தந்தையைப் போல மகனும்

ஆபிரகாமும் ஈசாக்கும் இஸ்ரவேல் தேசத்தின் தென்பகுதியில் வாழ்ந்து வந்தார்கள். ஈசாக்கு தேவனுக்குக் கீழ்ப்படிந்து எகிப்துக்குப் போகவில்லை; ஆனால், அவன் தன் குடும்பத்தோடு தெற்கே கேராருக்குப் பயணம்பண்ணினான்.


பார்வைக்கு அழகியாயிருந்த ரெபெக்காளைக் கேரார் ஊர் மனுஷர்கள் உற்றுப்பார்க்க அதிக காலம் எடுக்கவில்லை. **அவளை அடைவதற்காக அவர்கள் தன்னைக் கொன்றுபோடுவார்கள் என்று ஈசாக்கு பயந்தான்; அதனால், தன் தகப்பன் செய்த அதே பாவத்தைச் செய்து, "இவள் என் சகோதரி" என்று சொன்னான்.** ஆபிரகாம் செய்த பாவத்திற்கும் ஈசாக்கு செய்த பாவத்திற்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், **ஆபிரகாம் பாதிப் பொய்யைச் சொன்னான்;** ஆனால் **ஈசாக்கோ முழுப் பொய்யைச் சொன்னான்.** ஆனாலும் **அவர்கள் மறைத்த ரகசியம் வெளிப்பட்டது.** அவர்கள் அங்கே சிலகாலம் இருந்தபின்பு, பெலிஸ்தரின் ராஜாவாகிய அபிமெலேக்கு, ஈசாக்கு **ரெபெக்காளோடு அன்பாய் விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டான். அவர்கள் உடன் பிறந்தவர்கள் அல்ல, கணவன் மனைவி என்பதை அவன் உடனே அறிந்துகொண்டான்.**

அபிமெலேக்கு அவனை அழைத்து, **"ஏன் எங்களை இப்படிப்பட்ட பயங்கரமான ஆபத்திற்குள் சிக்கவைத்தாய்? ஜனங்களில் ஒருவன் அறியாமையினால் இவளைச் சேர்ந்திருக்கக்கூடுமே!"** என்று கடிந்துகொண்டான். அபிமெலேக்கு **ஈசாக்கிற்கும் ரெபெக்காளுக்கும் ஒரு பாதுகாப்பை ஏற்படுத்தி, "இந்த மனுஷனையாகிலும் இவன் மனைவியையாகிலும் தொடுகிறவன் நிச்சயமாகவே கொல்லப்படுவான்"** என்று தன் ஜனங்களுக்கு கட்டளையிட்டான். **அபிமெலேக்கு ஈசாக்குக்கு நல்ல நண்பனானான்.** தன் தகப்பனாகிய **ஆபிரகாம் நற்பெயரைச் சம்பாதித்தது போலவே, ஈசாக்கும் அந்த மக்களின் மத்தியில் நல்ல மதிப்பைப் பெற்றான்.**

கர்த்தர் ஈசாக்கை ஆசீர்வதித்தார்

தேவன் ஆசீர்வதித்தபடியினால் ஈசாக்கு கேராரிலே செழித்தோங்கி, நூறுமடங்கு பலனடைந்து, நற்பெயரோடு பூமிக்குரிய ஆசீர்வாதங்களை அனுபவித்தான். **அவன் தேவனோடு ஐக்கியமாய் நடந்ததால் அவ்வாக்குத்தத்தம் நிறைவேறியது. ஆனால் இன்று தேவன் நமக்கு பூமிக்குரியவைகளை அல்ல, "கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும்" வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்** (*எபேசியர் 1:1-14*). தேவனோடு நாம் நடக்கும் நடையைப் பொறுத்தே இது நமது பங்காகிறது. நீங்கள் தேவனுக்கு இடமளித்தால், அவர் **உங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தைப் பரிபூரணமாக ஆசீர்வதிப்பார். அப்போது கிறிஸ்து நமக்குள் வாழ்ந்து, அவருடைய நற்குணம் நம் மூலமாக வெளிப்படும்.**

ஈசாக்கின் நிலம் நூறுமடங்கு பலனைத் தந்தது. அவனுடைய வாழ்க்கை தன் தந்தையின் வாழ்க்கையைப் போலவே மிகவும் மேன்மையானதாக இருந்தது. ஆகையால், அவர்கள் இருவருடைய வாழ்க்கையையும் ஒன்றோடொன்று இணைத்துப் பார்ப்பது மிகவும் பொருத்தமானதே. ஈசாக்கின் பிறப்பும் அவனுடைய வாழ்க்கையும் ஆபிரகாமின் அனுபவங்களோடு பிரிக்கமுடியாதபடி பின்னிப்பிணைந்திருக்கிறது.



"கிறிஸ்து நமக்குள் வாழ்ந்து, நாமும் அவருடைய நற்குணங்களை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும் படியாக, தேவன் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் உங்களைப் பரிபூரணமாக ஆசீர்வதிக்க விரும்புகிறார்."

ஈசாக்கு பலிபீடத்தின் மேல் அர்ப்பணித்தபோது அவன் முக்கியத்துவம் வாய்ந்தவனாக இருந்தபோதிலும், அங்கே ஆபிரகாமும் ஈசாக்கும் இணைந்தே செயல்பட்டார்கள்.

அவர்கள் இணைந்து கடந்துவந்த இந்த அனுபவங்கள் நமக்கு ஒரு சிறந்த உதாரணமாகத் திகழ்கின்றன. **இது பிதாவாகிய தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் இடையேயான நெருக்கமான உறவை நமக்கு அழகாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.** இயேசு, "**என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்**" *(யோவான் 14:9)* என்று கூறினார். மேலும், **இயேசு தம்முடைய பிரதான ஆசாரிய ஜெபத்தில்,** "**பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்**" *(யோவான் 17:4)* என்றார். அதுமட்டுமல்லாமல், "**என் பிதா இதுவரைக்கும் கிரியைசெய்துவருகிறார், நானும் கிரியைசெய்துவருகிறேன்**" *(யோவான் 5:17)* என்றும் அவர் கூறினார். ஆகையால், **ஈசாக்கின் சரித்திரமும்** ஆபிரகாமின் சரித்திரமும் பிரிக்கப்படாமல் ஒன்றாகச் சேர்த்துச் சொல்லப்படுவது மிகவும் பொருத்தமானதே.

ஈசாக்கும் அவன் வெட்டிய கிணறுகளும்

இப்போது ஈசாக்கு **தன் சொந்தப் பெலத்தில் பெலிஸ்தியரைத் தனியாக எதிர்கொள்கிறான்;** ஆனால் அது அவனுக்கு எளிதாக அமையவில்லை. **ஈசாக்கின் செழிப்பைக்** கண்ட பெலிஸ்தியர் அவன்மேல் **பொறாமைகொண்டு,** அவனுக்குத் தொல்லை கொடுக்க ஆரம்பித்தார்கள். தன் மந்தைகளுக்குத் தண்ணீர் காட்டுவதற்காக ஆபிரகாம் அந்தத் தேசத்தில் பல கிணறுகளை வெட்டியிருந்தான். ஆனால் **பெலிஸ்தியர் அவற்றையெல்லாம் மண்ணைப் போட்டு மூடினார்கள்** (பெலிஸ்தியருடனான இந்தப் பகை தாவீது ராஜாவின் காலம்வரை நீடித்தது).

அபிமெலேக்கு ஈசாக்கிடம் வந்து, "**நீ எங்களுக்குத் தொந்தரவாக இருக்கிறாய், ஆகையால் நீ எங்களைவிட்டுப் போய்விடுவதே நல்லது**" என்றான். அங்கே தண்ணீருக்காக இரு சாராரின் மேய்ப்பர்களுக்கும் இடையே தொடர்ந்து சண்டை மூண்டது. ஈசாக்கின் வேலைக்காரர்கள் ஒரு கிணற்றை வெட்டுவார்கள், ஆனால் பெலிஸ்தியர்கள் வந்து அதை அபகரித்துக்கொள்வார்கள். **அவன் சற்று தள்ளிப்போய் வேறொரு கிணற்றை வெட்டுவான்; அதையும் அவர்கள் பிடுங்கிக்கொள்வார்கள்.** இப்படியே அவன் அவர்களோடு சண்டையிடாமல் தொடர்ந்து வேறு இடங்களுக்கு நகர்ந்து சென்றுகொண்டே இருந்தான்.

உண்மையிலேயே, ஈசாக்கு மிகவும் பொறுமையுள்ளவனாகவும் சமாதானத்தை விரும்புகிற மனிதனாகவும் இருந்தான்! ஒருகட்டத்தில், அவன் வெட்டிய ஒரு கிணற்றுக்காக அவர்கள் சண்டையிடவில்லை. அப்போது அவன், நாம் தேசத்தில் பலுகும்படிக்கு, "கர்த்தர் நமக்கு இடமுண்டாக்கினார்" என்று சொல்லி அதற்குக் ரெகொபோத் என்று பெயரிட்டான்.



"ஈசாக்கு மிகவும் பொறுமையுள்ளவனாகவும்
சமாதானத்தை விரும்புகிற மனிதனாகவும் இருந்தான்!"

கர்த்தர் ஈசாக்குக்குத் தரிசனமளித்தல்

இறுதியாக, ஈசாக்கு இன்னும் தெற்கு நோக்கிப் பயணம் செய்து பெயர்செபாவுக்குச் சென்றான். அங்கேதான் கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி அவனைத் தேற்றினார் (தேவன் ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், ஈசாக்கின் மகனான யாக்கோபுக்கும் அடுத்தடுத்துத் தரிசனமானார்). பெலிஸ்தர்களின் எல்லையை விட்டு வெளியேற வேண்டும் என்ற ஈசாக்கின் முடிவு நிச்சயமாக தேவனுக்குப் பிரியமானதாகவே இருந்திருக்க வேண்டும்.

"அன்று ராத்திரியிலே கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி: நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவன், பயப்படாதே, நான் உன்னோடேகூட இருந்து, என் தாசனாகிய ஆபிரகாமினிமித்தம் உன்னை ஆசீர்வதித்து, உன் சந்ததியைப் பெருகப்பண்ணுவேன் என்றார்" *(ஆதியாகமம் 26:24).*

அந்த இடத்திலே ஈசாக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, தேவனுடைய நாமத்தைத் தொழுது கொண்டான். அவனுடைய வேலைக்காரர்கள் அங்கே ஒரு கிணற்றையும் வெட்டினார்கள் (நாம் எப்போதுமே ஈசாக்கின் பெயரோடு ஒரு 'கிணற்றை' இணைத்துப் பார்க்கமுடியும். அதுபோலவே ஆபிரகாமோடு ஒரு 'பலிபீடத்தையும்', இனிவரும் பகுதிகளில், யாக்கோபோடு ஒரு 'கூடாரத்தையும்' இணைத்துப் பார்க்க முடியும்).



ஈசாக்கு தேவன்மேல் வைத்திருந்த விசுவாசம் மற்றவர்களைக் கவர்ந்தது

சீக்கிரத்திலேயே, கேரார்ின் ராஜாவாகிய அபிமெலேக்கு தன் ஆலோசகரான அகோசாத்தோடும், தன் சேனாதிபதியாகிய பிக்கோலோடும் ஈசாக்கைக் காண வந்தான். அவர்கள் **ஈசாக்கின்மேல் இருந்த தேவனுடைய ஆசீர்வாதத்தைக் கண்டு சாட்சிகூறி**, தேவனை மகிமைப்படுத்தினார்கள் *(வச. 28-29)*. ஈசாக்கு அவர்களை நோக்கி: "**நீங்கள் என்னைப் பகைத்து, என்னை அனுப்பிவிட்டீர்களே, இப்போது ஏன் என்னிடத்தில் வந்தீர்கள்?**" என்று கேட்டான்.

ஈசாக்கு தங்களைத் தாக்கக்கூடும் என்று அவர்கள் பயந்ததால், அவனோடு ஒரு சமாதான உடன்படிக்கை செய்துகொள்ள விரும்பினார்கள். அவர்கள் அவனிடம்: "எங்களுக்கும் உமக்கும் ஒரு ஆணை உண்டாகவேண்டும் என்று நிர்ணயம் பண்ணினோம். நாங்கள் உம்மைத் தொடாமல், நன்மையையே உமக்குச் செய்து, உம்மைச் சமாதானத்தோடே அனுப்பிவிட்டதுபோல, நீரும் எங்களுக்குத் தீங்கு செய்யாதபடிக்கு உம்மோடே உடன்படிக்கைபண்ணிக்கொள்ள வந்தோம்; நீர் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவராமே" *(ஆதியாகமம் 26:28-29)* என்றார்கள்.

எனவே, ஈசாக்கும் அபிமெலேக்கும் ஒருவருக்கொருவர் தீங்கு செய்யக்கூடாது என்று ஒரு **சமாதான உடன்படிக்கையைச் செய்துகொண்டார்கள்**. அதை உறுதிப்படுத்தும் விதமாக **ஈசாக்கு அவர்களுக்கு ஒரு "விருந்தை" ஆயத்தம்பண்ணினான்**. பண்டைய மத்திய கிழக்கு நாடுகளில், ஒரு உடன்படிக்கையை உறுதிப்படுத்த இப்படி ஒன்றாக இணைந்து உணவருந்துவது ஒரு புனிதமான வழக்கமாகக் கருதப்பட்டது.

கேரார் தேசத்தின் மனிதர்களிடம் ஈசாக்கு நடந்துகொண்ட விதத்தைப் பார்க்கும்போது, அவன் சண்டையைத் தவிர்க்கும் ஒரு பலவீனமான மனிதனைப் போலத் தோன்றினாலும், அவனுடைய பரிசுத்தமான வாழ்க்கையும் தேவன்மேல் அவன் வைத்திருந்த விசுவாசமும் அவனுடைய அயலகத்தாரை வெகுவாகக் கவர்ந்தது. **ஈசாக்கின் உண்மையான பலம், சண்டையிடுவதில் அல்ல, மாறாக முற்றிலும் வித்தியாசமான ஒரு வழியில் வெளிப்பட்டது.**

ஏசா தேவனுக்கும் தன் பெற்றோருக்கும் விரோதமாகத் துணிகரமாய்ப் பாவஞ்செய்தான்

அதன்பின்பு, அவனுடைய மகனான ஏசாவுக்கு நாற்பது வயதானபோது, ஏத்தியர் வம்சத்தைச் சேர்ந்த இரண்டு கானானியப் பெண்களை அவன் திருமணம் செய்துகொண்டான் என்பதைப் பார்க்கிறோம். நிச்சயமாகவே, இந்த வம்சத்தார் தேவனால் சபிக்கப்பட்டவர்கள் ஆவர். **ஆனால் ஏசாவோ, தேவன் தன் குடும்பத்திற்கு அருளியிருந்த விசேஷித்த அழைப்பைக் குறித்துச் சற்றும் கவலைப்படாமல், இந்த உலகத்தின் பார்வையில் தன்னை ஒரு பெரிய மனிதனாக நிலைநிறுத்திக்கொள்ளவே விரும்பினான்.** அவனுடைய இந்த முடிவு **ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் மிகுந்த துக்கத்தை உண்டாக்கியது.**

கனத்தைப் பெற்றுத்தந்த சமாதானம்



தேவனுடைய மாறாத சத்தியங்கள்

ஆதியாகமம் 26-ம் அதிகாரத்திலிருந்து நமக்கான பாடங்கள்

1

பாவம் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குத் தொடரும் தன்மையுடையது, ஆனால் தேவனே அதிலிருந்து நமக்கு விடுதலையைத் தருகிறார். தன் மனைவி ரெபெக்காளைத் தன் சகோதரி என்று பொய் சொன்னதன் மூலம், ஆபிரகாம் செய்த அதே பாவத்தைப் பயத்தினால் ஈசாக்கும் செய்தான். **தேவன் தலையிடாவிட்டால்,** பாவம் இயல்பாகவே ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குத் தொடர்கிறது. **ஆனால், கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்கான தண்டனையை ஏற்றுக்கொண்டு கிரயம் செலுத்தியதால்,** தலைமுறை தலைமுறையாகத் தொடரும் பாவக்கட்டிலிருந்து நமக்கு விடுதலை கிடைக்கிறது. இந்தச் சத்தியம், நாம் புதிதான ஜீவனுள்ளவர்களாய் வாழும் சுதந்திரத்தை நமக்கு அளிக்கிறது *(1 பேதுரு 1:18-19; 2 கொரிந்தியர் 5:17)*.

2

தேவனோடிருக்கும் ஐக்கியம் நம்மை ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கு நேராக வழிநடத்துகிறது. ஈசாக்கு தேவனோடு ஐக்கியமாக நடந்தபோது, தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றி, அவனைப் பரிபூரணமாக ஆசீர்வதித்தார். இன்றைய விசுவாசிகளுக்கான **மாறாத சத்தியம் என்னவென்றால், கிறிஸ்துவுக்குள் நமக்குத் தேவையான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அபரிமிதமாகப் பொழிய தேவன் விரும்புகிறார். அவர்மேல் நாம் வைக்கும் ஐக்கியத்தில் மகிழ்ந்து, அவரோடு அனுதினமும் நடக்கும்போது வெளிப்படும் கிறிஸ்துவைப்போன்ற சுபாவமே அந்த ஆசீர்வாதமாகும்** *(எபேசியர் 1:1-14)*.

3

பொறுமையோடிருப்பதும் சமாதானம் பண்ணுவதும் இந்த உலகத்திற்குச் சொல்லப்படும் மிகவும் வல்லமையான சாட்சிகளாகும். பெலிஸ்தர் பொறாமையால், ஈசாக்கின் கிணறுகளை வன்மத்தோடு மண்ணைப் போட்டுத் தூர்த்தபோது, ஈசாக்கு அவர்களைப் பழிவாங்கவில்லை. சண்டையைத் தவிர்ப்பதற்காக, **அவன் அமைதியாக அங்கிருந்து விலகிச்சென்று புதிய கிணறுகளை வெட்டியதன் மூலம் மிகுந்த பொறுமையையும் சமாதானத்தையும் வெளிப்படுத்தினான்.** சண்டையிடாத அவனுடைய இந்தப் பலமும், கர்த்தர்மேல் அவனுக்கிருந்த மேன்மையான விசுவாசமும் இறுதியில் அவனுடைய சத்துருக்களைக் கவர்ந்தது. ஈசாக்கு கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவன் என்பதை உணர்ந்துகொண்ட அவர்கள், அவனோடு ஒரு சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளும்படிக்குத் தேடிவந்தார்கள் *(ரோமர் 12:17-21; 1 பேதுரு 2:23)*.

சிந்தனைக் கேள்விகள்

கேள்வி 1

பயத்தின் காரணமாக ஈசாக்கு தன் தந்தை செய்த அதே பொய்யை மீண்டும் செய்ததைப் போல, என் வாழ்க்கையிலும் என் குடும்பத்திலும் தலைமுறை தலைமுறையாகத் தொடரும் தவறான பழக்கங்கள் ஏதாவது உள்ளனவா? அவற்றிலிருந்து விடுதலைபெறுவதற்கு, எந்தப் பகுதிகளில் தேவனுடைய தலையீடு எனக்குத் தேவைப்படுகிறது?

கேள்வி 2

கிறிஸ்துவுக்குள் எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அனுபவிப்பதற்காக நான் என்ன செய்து வருகிறேன்? கிறிஸ்துவின் நீதியிலும் பரிசுத்தத்திலும் வாழ்ந்து, பரிசுத்த ஆவியின் கனிகளை என் அன்றாட வாழ்க்கையில் வெளிப்படுத்துகிறேனா?

கேள்வி 3

பெலிஸ்தியர் பொறாமையினால் ஈசாக்கின் கிணறுகளைத் தீங்கிழைக்கும் நோக்கத்துடன் மூடிவிட்டபோது, அவர் பழிவாங்காமல் சமாதானத்தின் பாதையைத் தேர்ந்தெடுத்தார். அதைப் போல, நான் பொறாமை, பகைமை அல்லது அநியாயத்தை எதிர்கொள்ளும்போது உடனடியாகப் பதிலடி கொடுக்க முயலுகிறேனா, அல்லது பொறுமையுடனும் சமாதான மனப்பான்மையுடனும் நடந்து கொள்ளத் தேர்ந்தெடுக்கிறேனா?


ஓர் உடைந்த குடும்பம்
ஆதியாகமம் 27

ஓர் உடைந்த குடும்பம்

ஜெபத்துடன் தொடங்குங்கள்
வேதபகுதி: ஆதியாகமம் 27
கேளுங்கள் THRU the BIBLE: ஆதியாகமம் 27

அன்புள்ள பரலோகப் பிதாவே,

நாங்கள் உமது சமுகத்தில் கூடிவந்திருக்கையில், எங்கள் சிந்தனைகள் சிதறாவண்ணம் இருதயங்களை ஒருமுகப்படுத்தும். உமது வாக்குத்தங்களை நம்பாமல் எங்களது சொந்த யோசனையைச் சார்ந்திருப்பதால் ஏற்படும் ஆபத்துகளையும், அதனிமித்தம் ஏற்படுகிற இழப்புகளையும் நாங்கள் உணர்ந்துகொள்ள எங்களுக்கு உதவிசெய்தருளும். நாங்கள் உண்மையோடும் விசுவாசத்தோடும் உமக்குக் காத்திருக்க எங்களுக்குப் போதித்தருளும்.

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் பிதாவே. ஆமென்.

மகிழ்ச்சியை இழந்த குடும்பம்

ஆதியாகமம் 27

ஈசாக்கு ஏசாவை அதிகமாய் நேசித்தான், ரெபெக்காளோ யாக்கோபை அதிகமாய் நேசித்தாள். இப்படியிருக்க, அவர்களுடைய குடும்பம் எப்படி மகிழ்ச்சியாக இருக்க முடியும்? **ஈசாக்கின் ஆசீர்வாதத்தை யார் பெற்றுக்கொள்வது என்பதே** அந்தக் குடும்பத்தின் பிரதான பிரச்சினையாக இருந்தது. "**மூத்தவன் இளையவனுக்கு ஊழியஞ்செய்வான்**" *(ஆதியாகமம் 25:23)* என்று தேவன் ரெபெக்காளுக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார். ஆகையால் அந்த ஆசீர்வாதம் யாக்கோபுக்கே உரியதாய் இருந்தது. இதை அறிந்திருந்தும், ஈசாக்கு யாக்கோபை புறக்கணித்துவிட்டு, தன் ஆசீர்வாதத்தை ஏசாவுக்குக் கொடுக்க முயன்றான். **யாக்கோபோ தன் சொந்தத் தந்திரத்தினால் அந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளத் திட்டமிட்டான்.**

குடும்பத்தாரில் ஒருவரும் தேவனுடைய வாக்குத்தத்தத்தை விசுவாசிக்கவில்லை. அந்தக் குடும்பம் வஞ்சனையினால் பிரிக்கப்பட்டுச் சிதைந்துபோனது. அதன்பின்பு அந்தக் குடும்பம் ஒருபோதும் பழையபடி ஒன்றாகச் சீர்பொருந்தவே இல்லை.

"குடும்பத்தாரில் ஒருவரும் தேவனை விசுவாசிக்க வில்லை. அந்தக் குடும்பம் வஞ்சனையினால் பிரிக்கப்பட்டு உடைந்துபோனது. அதன்பின்பு அது ஒருபோதும் பழையபடி ஒன்றுசேரவே இல்லை."



யாக்கோபு, ஏசாவின் சேஷ்டபுத்திரபங்கை எடுத்துக்கொண்டான்

ஈசாக்கு பிறருடன் நல்லுறவில் இருந்தான் என்றும், அநேகக் கிணறுகளை வெட்டினான் என்றும் நாம் அறிந்திருக்கிறோம். **அவன் சமாதானமும் பொறுமையுமுள்ள சிறந்த ஒரு மனிதனாக விளங்கினான் என்பது மட்டுமின்றி, அவன் கனமும் அதிகாரமுள்ளவனாகவும் இருந்தான். இப்பொழுதோ அவன் முதிர்வயதானவனாகவும், பார்வை மங்கினவனாகவும் இருக்கிறான். தன் வாழ்க்கையின் முடிவை நெருங்குகிறான் என்பதை அவன் அறிந்திருந்தான்.**

அவனுடைய வாழ்நாளெல்லாம் ஏசாவே அவனுக்குப் பிரியமான குமாரனாக இருந்தான். அவன் வனசஞ்சாரியாக இருந்து, மானையோ அல்லது எதாவது ஒரு விலங்கையோ வேட்டையாடிக் கொண்டுவந்து, தன் தகப்பனுக்குச் சமைத்துக் கொடுப்பான். எனவே ஈசாக்கு ஏசாவை ஆசீர்வதிக்க விரும்புகிறான். **"மூத்தவன் இளையவனுக்கு ஊழியஞ்செய்வான்" என்று தேவன் உரைத்ததை அறிந்திருந்தும், வேண்டுமென்றே ஏசாவை ஆசீர்வதிக்க முடிவெடுக்கிறான்.** அவன் ஏசாவை நோக்கி: நீ வெளியேபோய் எனக்காக வேட்டையாடிக்கொண்டுவா; அதினிமித்தம் நான் உன்னை ஆசீர்வதிப்பேன் என்று சொல்லுகிறான்.

ஆதியாகமத்தின் இந்தக் கடைசிப் பகுதியில் சொல்லப்பட்டுள்ள அந்த குடும்பத்தில் உருவான பகையை நீங்கள் கவனித்தீர்களா? முதலாவதாக, ஆகார் நிமித்தம் ஆபிரகாமின் குடும்பத்தில் குழப்பம் உண்டாயிற்று. இப்பொழுதோ, இந்த **இரட்டைக் குழந்தைகளினிமித்தம்** குடும்பத்தில் **வாக்குவாதம்** உண்டாகிறது.

ஈசாக்கு ஏசாவிடம் சொன்னதை ரெபெக்காள் கேட்டாள். யாக்கோபு அவளுக்குப் பிரியமானவனாக இருந்தபடியால், **வஞ்சனையான ஒரு மாற்றுத் திட்டத்தை** அவள் உருவாக்கினாள். இது ஒரு வரலாற்று உண்மை என்பதினால், தேவன் இதைத் தமது வார்த்தையில் சேர்த்துள்ளாரே தவிர, இது **முற்றிலும் வஞ்சனையானது, இதை ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது.**

ரெபெக்காள் யாக்கோபை நோக்கி: நீ போய் **இரண்டு வெள்ளாட்டுக்குட்டிகளைக் கொண்டுவா,** உன் தகப்பனுக்கு இஷ்டமானபடி நான் அவைகளைச் சமைப்பேன் என்று சொல்லுகிறாள். பின்பு அவள்: **"உன் தகப்பன் மரணமடையுமுன்னே உன்னை ஆசீர்வதிக்கும்படிக்கு, அவர் புசிப்பதற்கு நீ அதை அவரிடத்தில் கொண்டுபோகவேண்டும்"** *(வசனம் 10)* என்கிறாள்.

> அதற்கு யாக்கோபு: "என் சகோதரனாகிய ஏசா ரோமமுள்ளவன், நான் ரோமமில்லாதவன். ஒருவேளை என் தகப்பன் என்னைத் தடவிப்பார்ப்பார்; அப்பொழுது **நான் அவருக்கு எத்தனாகக் காணப்பட்டு,** என்மேல் ஆசீர்வாதத்தையல்ல, சாபத்தை வரப்பண்ணிக்கொள்வேன்" *(வசனம் 11-12)* என்றான்.

ரெபெக்காள் அவனை நோக்கி: தன் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து தான் சொல்வதின்படியே செய்யும்படியும், தான் அதைப் பார்த்துக்கொள்வதாகவும் சொன்னாள். **அவள் ஏசாவின் வஸ்திரங்களை எடுத்து, யாக்கோபுக்கு உடுத்தி, வெள்ளாட்டுக்குட்டிகளின் தோலினால் அவன் கைகளையும் கழுத்தையும் மூடினாள்.** பின்பு தான் சமைத்த இறைச்சியையும் அப்பத்தையும் அவள் அவனிடத்தில் கொடுத்து, யாக்கோபை ஈசாக்கின் அறைக்குள் அனுப்பினாள். **அவனுடைய தகப்பன் அவனுடைய கைகளையும் கழுத்தையும் தடவிப்பார்க்கும்போது, அவனை ஏசா என்று நினைத்துக்கொள்வார். ஏசாவின் வஸ்திரங்கள் யாக்கோபுக்கும் அவனைப் போன்ற வாசனையை உண்டாக்கும்.**

அப்படியே யாக்கோபு ஈசாக்கினிடத்தில் சென்று, ஏசாவைப் போல நடித்தான். **அவன் தந்தையிடம் நல்லவிதமாகப் பேசி, ஒரு பக்திமானைப்போல நடித்து அவரை ஏமாற்றினான். இந்த ஏமாற்றுதலுக்கும் கர்த்தருக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.**



> "யாக்கோபு தந்தையிடம் நல்லவிதமாகப் பேசி, ஒரு பக்திமானைப்போல நடித்து அவரை ஏமாற்றினான். இந்த வஞ்சகத்துக்கும் கர்த்தருக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை."

அவன்: “என் தகப்பனே,” என்றான்.
அதற்கு அவர்: “நீ யார்?” என்று கேட்டார்.
“உம்முடைய ஆத்துமா என்னை ஆசீர்வதிக்கும்படி, நீர் விரும்பிய வேட்டை இறைச்சியோடு வந்திருக்கும் உமது மூத்தமகனாகிய ஏசா நான்” என்றான்.
“என் மகனே, இத்தனை சீக்கிரமாய் உனக்கு எப்படி அகப்பட்டது!”
“உம்முடைய தேவனாகிய கர்த்தர் எனக்குச் சீக்கிரமாய் அகப்படப்பண்ணினார்!”

பின்பு ஈசாக்கு, யாக்கோபை கிட்டவரச் சொல்லி, அவனைத் தடவிப்பார்த்து: “சத்தம் யாக்கோபின் சத்தம், கைகளோ ஏசாவின் கைகள்” என்றார். ஈசாக்கு அவனுடைய வஸ்திரங்களின் வாசனையையும் மோந்து பார்த்தார். **ஏதோ தவறாக நடக்கிறது என்று அவர் சந்தேகித்திருக்கலாம். ஆனால் ரெபெக்காள் அவரை நன்கு அறிந்திருந்தபடியால், ஒவ்வொரு காரியத்தையும் மிகத் துல்லியமாகத் திட்டமிட்டிருந்தாள்.**

அப்படியே ஈசாக்கு அந்த உணவைப் புசித்து, தம் குமாரனாகிய யாக்கோபை ஆசீர்வதித்தார். “தேவன் உனக்கு வானத்துப் பனியையும் பூமியின் கொழுமையையும் கொடுத்து, மிகுந்த தானியத்தையும் திராட்சரசத்தையும் தந்தருளுவாராக. ஜனங்கள் உன்னைச் சேவிக்கவும், ஜாதிகள் உன்னை வணங்கவுங்கடவர்கள்; உன் சகோதரருக்கு எஜமானாயிரு, உன் தாயின் பிள்ளைகள் உன்னை வணங்குவார்களாக; உன்னைச் சபிக்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்களும், உன்னை ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களுமாய் இருப்பார்கள்” *(ஆதியாகமம் 27:28-29)*.

உண்மையில், ஈசாக்கு தான் பெற்றுக்கொண்ட **அதே ஆசீர்வாதத்தையே யாக்கோபுக்கு** வழங்கி **ஆசீர்வதித்தார். இந்த ஆசீர்வாதம் ஏற்கனவே யாக்கோபுக்கு உரியதாகவே இருந்தது.** தேவன் முன்னமே அவனை ஆசீர்வதித்திருந்தார். இந்த வஞ்சகச் செயலை தேவன் சிறிதும் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்து முடித்தவுடனும், யாக்கோபு தன் தகப்பனை விட்டுப் புறப்பட்டவுடனும், அவனுடைய சகோதரனாகிய ஏசா வேட்டையாடித் திரும்பி வந்தான். அவனும் அந்த இறைச்சியைச் சமைத்துத் தன் தகப்பனிடம் கொண்டுவந்தான். **தாங்கள் ஏமாற்றப்பட்டுவிட்டோம் என்பதைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு நீண்ட நேரம் ஆகவில்லை.** இந்தச் சதியால் தான் எப்படி வஞ்சிக்கப்பட்டோம் என்பதை உணர்ந்து, ஈசாக்கு மிகவும் அதிர்ச்சியடைந்து நடுங்கினார்.

என்ன நடந்தது என்பதை ஏசா அறிந்துகொண்டபோது, அவன் மிகவும் மனங்கசந்து: “என்னையும் ஆசீர்வதியும்!” என்று கதறினான். ஆனால் ஈசாக்கு, “இல்லை, அவன் வஞ்சகமாய் வந்து, உன் ஆசீர்வாதத்தை வாங்கிக்கொண்டான்,” என்றார். அதற்கு ஏசா, “அவனுக்கு யாக்கோபு-**ஏமாற்றுகிறவன்**-என்று பேரிட்டது சரியாயிருக்கிறது; என் ஆசீர்வாதத்தையும் பறித்துக்கொண்டான்” என்று ஒப்புக்கொண்டான். ஈசாக்கு ஏசாவுக்குக் கூறிய வார்த்தைகள் தீர்க்கதரிசனமாக அமைந்தன: “உன் பட்டயத்தினாலே நீ பிழைத்து, உன் சகோதரனைச் சேவிப்பாய்” *(ஆதியாகமம் 27:40)*.

சேஷ்டபுத்திர உரிமையை பெறுவதற்கு யாக்கோபு கையாண்ட முறை மிகவும் அருவருப்பானது. அந்த உரிமை ஏற்கனவே அவனுடையதுதான்! தந்தை ஆசீர்வாதம் கொடுக்க வேண்டும் என்ற சம்பிரதாய முறை அவசியமே இல்லை. ஆபிரகாமும் சாராளும் ஆகார் மற்றும் இஸ்மவேலைக் கொண்டு தீட்டிய திட்டத்தை தேவன் எப்படி ஏற்றுக்கொள்ளவில்லையோ, அப்படியே யாக்கோபின் ஏமாற்றுவேலையையும் வஞ்சகத்தையும் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆபிரகாம் ஈசாக்கை ஆசீர்வதிக்கவில்லை; மாறாக, தேவனே அவனை ஆசீர்வதித்தார்! அதை யாக்கோபுக்குக் கொடுத்தவரும் தேவனே ஆவார். **யாக்கோபின் இந்தச் சூழ்ச்சி தேவையற்றது மட்டுமல்ல, இதற்காக தேவன் அவனைப் பிற்காலத்தில் தண்டித்துச் சரிசெய்தார்.**

யாக்கோபின் ஓட்டம்

யாக்கோபு செய்த காரியத்தினிமித்தம் **ஏசா அவனைப் பகைத்து**, தனக்குள் ஒரு திட்டமிட்டான். “என் தகப்பனுக்காகத் துக்கங்கொண்டாடும் நாட்கள் சீக்கிரத்தில் வரும்; அப்பொழுது என் சகோதரனாகிய யாக்கோபைக் கொன்றுபோடுவேன்” என்று அவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொண்டான். அவன் இந்தத் திட்டத்தைக் குறித்து யோசித்து, மற்றவர்களிடமும் பேசியிருக்க வேண்டும். மூத்த மகனாகிய ஏசாவின் இந்த வார்த்தைகள் ரெபெக்காளுக்கு அறிவிக்கப்பட்டபோது, அவள் மீண்டும் ஒரு திட்டத்தைத் தீட்டத் தொடங்கினாள். அவள் யாக்கோபை அழைத்து: **“நீ வீட்டை விட்டுப் போகவேண்டும்” என்றாள். இந்தப் பாவத்தில் தனக்கிருந்த பங்கிற்காகத் தானும் ஒரு பெரிய விலையைக் கொடுக்க வேண்டும் என்பதை அவள் அப்போது அறியவில்லை.**

யாக்கோபு **ஆரானிலிருக்கும்** தன் சகோதரனாகிய **லாபானிடத்துக்கு** ஓடிப்போக வேண்டும் என்பதே அவளுடைய திட்டமாக இருந்தது. “உன் சகோதரனுடைய கோபம் தணியுமட்டும் சிலநாள் அவனிடத்தில் தங்கியிரு” என்றாள். ஆனால், சில நாட்கள் என்று அவள் நினைத்தது இருபது வருடங்களாக நீடித்தது.

ஆபிரகாமின் வேலைக்காரன் தமக்காகப் பெண் தேடிச் சென்றதுபோல, யாக்கோபும் ஆரானுக்குச் சென்று ஒரு மனைவியைத் தேடவேண்டும் என்று ரெபெக்காள் ஈசாக்கைச் சம்மதிக்க வைத்தாள். **ஏசாவின் இரண்டு கானானிய மனைவிகளும் ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் மிகுந்த மனவேதனையை உண்டாக்கி வந்தார்கள்.** யாக்கோபு கானான் தேசத்தை விட்டுச் சென்று, தன் உறவினர்களிடையே தேவனுக்குப் பயப்படுகிற ஒரு பெண்ணை மனைவியாகத் தேடிக்கொள்ள வேண்டும், இல்லையென்றால் அவனும் ஏசாவைப்போலவே செய்துவிடுவான் என்று அவள் ஈசாக்கிடம் கூறினாள்.

யாக்கோபை ஆபத்திலிருந்து காப்பாற்றி விலக்கிவைப்பதற்கும், அவனுக்கு ஏற்ற ஒரு மனைவியைத் தேடுவதற்கும் இது ஒரு மிகச் சிறந்த வழியாக அமைந்தது. தன் குடும்பத்தாரிடமும் தன் சகோதரனாகிய லாபானிடமும் செல்லும்படி அவள் யாக்கோபைச் சம்மதிக்க வைத்து அனுப்பினாள். **ஆனால் துயரமான காரியம் என்னவென்றால், அவள் யாக்கோபை மீண்டும் பார்ப்பதற்கு முன்னதாகவே மரித்துப்போனாள்.**



தேவனுடைய மாறாத சத்தியங்கள்

ஆதியாகமம் 27-ம் அதிகாரத்திலிருந்து நமக்கான பாடங்கள்

தேவன் தமது இறையாண்மையினால் வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறார்; ஆயினும் தம் பிள்ளைகளின் மாம்சச் செயல்களுக்காக அவர் அவர்களைச் சிட்சித்துத் திருத்துகிறார்.

- **சத்தியம்:** யாக்கோபின் சூழ்ச்சியானது தேவன் விரும்பாத முழுமையான வஞ்சகமாகும். தேவனுடைய தீர்மானத்தின்படி ஆசீர்வாதம் ஏற்கனவே அவனுக்கே உரியது; அவன் ஏமாற்ற வேண்டிய அவசியமேயில்லை. தேவன் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினாலும், அவனுக்கு நேரிட்ட பிரிவையும் பாடுகளையும் அவனைச் சிட்சிக்கவே பயன்படுத்தினார்.



- **புதிய ஏற்பாட்டுத் தொடர்பு:** "கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார்" என்று *எபிரெயர் 12*-ம் அதிகாரம் நமக்கு நினைவூட்டுகிறது. நாம் தேவனுக்காக உறுதியாய் நிற்கும்படி, நம்மைப் பலப்படுத்தவும், தைரியப்படுத்தவும், நமது வஞ்சகமான சுபாவத்தை மாற்றவுமே, கர்த்தர் நமது வாழ்க்கையில் சோதனைகளை அனுமதிக்கிறார்.



சிந்தனைக்கான கேள்விகள்

கேள்வி 1

சூழ்ச்சியின் வலை: ரெபெக்காளும் யாக்கோபும் செய்ததுபோல, உங்கள் சொந்த சூழ்ச்சியாலும், திட்டத்தாலும், வஞ்சகத்தாலும் தேவனுடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற அவருக்கு "உதவிசெய்ய" உங்கள் வாழ்வின் எந்தக் காரியத்தில் நீங்கள் இப்போது முயற்சி செய்துகொண்டிருக்கிறீர்கள்?

கேள்வி 2

விசுவாச வாழ்க்கை: உண்மையான விசுவாசம் தேவனுடைய வார்த்தையின்மேல் உறுதியாகச் சார்ந்திருக்கும். உங்கள் சொந்த வழியில் சூழ்ச்சி செய்யாமல், தேவனுடைய திட்டத்தை முழுமையாய் நம்புவதற்கு, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்குக் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தங்கள் என்ன?


யாக்கோபின் கனவு
ஆதியாகமம் 28

யாக்கோபின் கனவு

ஜெபத்துடன் தொடங்குங்கள்
வேதபகுதி: ஆதியாகமம் 28
கேளுங்கள் THRU the BIBLE: ஆதியாகமம் 28

அன்புள்ள பரலோகப் பிதாவே,

நாங்கள் உமது சமுகத்தில் கூடிவரும்போது, கிறிஸ்துவே உம்மிடம் வருவதற்கான ஒரே வழி என்பதைக் காண எங்கள் கண்களைத் திறந்தருளும். எங்களுடைய சொந்த நிபந்தனைகளையும் பேரம் பேசுதலையும் விட்டுவிட்டு, உமது கிருபையிலும் இரக்கத்திலும் முழுமையாக இளைப்பாற எங்களுக்கு உதவியருளும். அன்பின் மூலமாக உமக்கு ஊழியம் செய்ய எங்களுக்குக் கற்றுத்தாரும்

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் பிதாவே. ஆமென்.

யாக்கோபு வீட்டைவிட்டுப் புறப்படுதல்

ஆதியாகமம் 28

யாக்கோபு தன் வீட்டை விட்டுப் புறப்படத் தயாரானபோது, ஈசாக்கு அவனை ஆசீர்வதித்து, கானானியப் **பெண்களில் யாரையும் திருமணம் செய்யக் கூடாது** என்று கட்டளையிட்டு அனுப்பிவைக்கிறார். பழைய ஏற்பாடு முழுவதிலும் நாம் பார்ப்பது என்னவென்றால், **தேவனைப் பின்பற்றுகிறவர்கள் தேவபக்தியில்லாதவர்களோடு திருமண உறவு வைத்துக்கொள்வதை தேவன் விரும்புவதில்லை. ஏனெனில், அத்தகைய கலப்புத் திருமணங்கள் எப்போதும் தேவபக்தியற்ற ஆன்மீக வீழ்ச்சிக்கே வழிவகுக்கும்.**

> "சர்வவல்லமையுள்ள தேவன் உன்னை ஆசீர்வதித்து, நீ பல ஜனக்கூட்டமாகும்படி உன்னைப் பலுகவும் பெருகவும் பண்ணி, தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்ததும் நீ பரதேசியாய்த் தங்கியிருக்கிறதுமான தேசத்தை நீ சுதந்தரித்துக்கொள்ளும்படி, ஆபிரகாமுக்கு அருளின ஆசீர்வாதத்தை உனக்கும் உன்னோடு கூட உன் சந்ததிக்கும் அருளுவாராக" *(ஆதியாகமம் 28:3-4)*.

தேவன் ஆபிரகாமை ஆசீர்வதித்தார் என்பதையும், அந்த ஆசீர்வாதம் தனக்குக் கடந்துவந்தது என்பதையும், இப்போது **அது தன் மகன் யாக்கோபுக்குக் கடத்தப்பட வேண்டும்** என்பதையும் ஈசாக்கு தெளிவாகப் புரிந்திருந்தார். எனவே, ஈசாக்கு இப்போது யாக்கோபை அவனுடைய மாமனான லாபனிடம் (ரெபெக்காளின் சகோதரன்) அனுப்பிவைக்கிறார். இவர்களது குடும்பம் சீரிய தேசத்தைச் சேர்ந்தது. இதைப் படிக்கும்போது, **"ஆபிரகாம் ஒரு யூதரா? அல்லது அவர் ஒரு இஸ்ரவேலரா?" என்று** சிலருக்கு ஒரு சந்தேகம் வரலாம்: **அதற்கான பதில்: ஆபிரகாம் அப்போது இத்தகைய பிரிவு எதனுள்ளும் இருக்கவில்லை என்பதே ஆகும்.**

சீக்கிரத்திலேயே தேவன் **யாக்கோபின் பெயரை இஸ்ரவேல் என்று மாற்றுவார்**. அவருடைய பன்னிரண்டு குமாரர்கள்தான் இஸ்ரவேலர்கள் ஆவர். இந்த வம்சாவளி ஆபிரகாமிலிருந்துதான் தொடங்கியது. **அவர் இந்த ஒட்டுமொத்த இனத்தின் தகப்பனாக இருந்தாலும், அவர் அப்போது இன்னும் "யூதர்" என்று அழைக்கப்படவில்லை.**

இங்கு நாம் மற்றொரு முக்கிய பாடத்தையும் கற்றுக்கொள்கிறோம். கானானியப் பெண்களைத் திருமணம் செய்வதை தன் தகப்பன் (ஈசாக்கு) எவ்வளவு வெறுக்கிறார் என்பதை ஏசா பார்க்கிறான். எனவே, தன் தகப்பனை **எப்படியாவது பிரியப்படுத்த வேண்டும்** என்று நினைத்து, அவன் புறப்பட்டுப் போய் **இஸ்மவேலின் குமாரத்தியைத் திருமணம் செய்கிறான். ஆனால், ஏசாவுக்கு எந்தவொரு ஆவிக்குரிய விவேகமும் இருக்கவில்லை.** ஏனென்றால், கானானியரையும் பெலிஸ்தியரையும் போலவே இஸ்மவேலர்களும் வாக்குத்தத்தத்தின் சந்ததிக்கு வெளியே தேவனால் புறக்கணிக்கப்பட்டவர்களாகவே இருந்தார்கள்.



யாக்கோபின் ஏணி

பயணத்தின் முதல் நாளிலேயே, யாக்கோபு சுமார் 64 கி.மீ. தூரத்தைக் கடந்திருந்தான். தன் சகோதரன் ஏசாவிடமிருந்து தப்பித்து ஓட வேண்டும் என்பதற்காக அவன் மிக வேகமாக வெகுதூரம் பயணம் செய்திருந்தான். இரவில் தங்குவதற்காக அவன் பெத்தேல் என்ற இடத்தில் நின்றான். "பெத்தேல்" என்பதற்கு, "தேவனுடைய வீடு" என்று பொருள்.

அன்று இரவு அவனுடைய மனநிலை எப்படி இருந்திருக்கும் என்று கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்? அவன் பயங்கரமான தனிமையையும், வீட்டின் ஞாபகத்தையும் உணர்ந்திருப்பான். நமக்குத் தெரிந்தவரை, **அவன் தன் குடும்பத்தை விட்டுப் பிரிந்து, தனியாகக் கழித்த முதல் இரவு இதுதான்**.


அவன் தூங்குவதற்காக அங்கிருந்த **ஒரு கல்லை எடுத்துத் தனக்குத் தலையணையாக** வைத்துக் கொண்டு படுத்தான். பெத்தேல் என்பது மலைப்பாங்கான, வெறும் கரடுமுரடான பாறைகள் நிறைந்த, வெறிச்சோடிய, பயமுறுத்துகிற ஓரிடமாக இருந்தது. பார்ப்பதற்கே ஒரு மோசமான சூழல் அது. ஆனால், யாக்கோபின் ஆவிக்குரிய வாழ்க்கையில், இப்போதும் சரி, பிற்காலத்திலும் சரி, மிக உன்னதமான ஆவிக்குரிய திருப்புமுனையை ஏற்படுத்திய இடம் இதுதான்! அந்தப் பாறை நிலத்தில்தான் அவன் தூங்குவதற்காகப் படுத்தான்.

அப்போது யாக்கோபு ஒரு சொப்பனம் கண்டான்: பூமியிலே வைக்கப்பட்டிருந்த ஒரு ஏணியின் நுனி வானத்தை எட்டியிருந்தது. தேவ தூதர்கள் அதில் ஏறுவதும் இறங்குவதுமாய் இருந்தார்கள். அந்த ஏணியின் உச்சிக்கு மேலே கர்த்தர் நின்று அவனிடம் பேசினார்:

"நான் உன் பிதாவாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர்; நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன். உன் சந்ததி பூமியின் தூளத்தனையாயிருக்கும்; நீ மேற்கிலும் கிழக்கிலும் வடக்கிலும் தெற்கிலும் பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். நான் உன்னோடேகூட இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, உன்னை இந்தத் தேசத்துக்குத் திரும்பிவரப்பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை" *(ஆதியாகமம் 28:13-15)*.

ஆபிரகாம் கானான் தேசத்திற்குள் நுழைந்தபிறகு, **தேவன் அவனுக்கு முதன்முதலில் காட்சியளித்த பகுதி இதுதான்**. இப்போது **அதே வாக்குத்தத்தத்தை தேவன் யாக்கோபுக்கும் கொடுக்கிறார்**. தேவன் இதை ஈசாக்கிடம் ஏற்கனவே கூறியிருந்தார், இப்போது **யாக்கோபுக்கும் அதை உறுதிப்படுத்தி, மீண்டும் நினைவூட்டுகிறார்**.

அவசர அவசரமாக வீட்டை விட்டு ஓடிவந்த, **தனிமையிலும் வீட்டின் ஏக்கத்திலும் வாடிய ஓர் இளைஞனுக்கு இந்தத் தரிசனம் எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்!** அவன் எங்கோ **ஒரு தூர தேசத்திற்குப் போய்க்கொண்டிருந்த** அந்த **முதல் இரவிலேயே** தேவன் அவனிடம், **"யாக்கோபே, நான் உன்னோடு இருப்பேன், உன்னைத் திரும்பவும் இதே தேசத்திற்கு அழைத்துவருவேன்"** என்று வாக்குக் கொடுத்தார்.



கிறிஸ்து:
சொப்பனத்தில் கண்ட ஏணி

யாக்கோபு சொப்பனத்தில் கண்ட அந்த ஏணி எதைக் குறிக்கிறது? இயேசு கிறிஸ்து நாத்தான்வேலைத் தம்முடைய சீஷனாக அழைத்தபோது, இதற்கு மிக அழகான ஒரு விளக்கத்தைக் கொடுத்தார்:

> "இயேசு அவனை நோக்கி: அத்திமரத்தின்கீழே உன்னைக் கண்டேன் என்று நான் உனக்குச் சொன்னதினாலேயா விசுவாசிக்கிறாய்? இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய் என்றார். பின்னும் அவர் அவனை நோக்கி: வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" *(யோவான் 1:50-51)*.

யாக்கோபு கண்ட ஏணி வேறு யாருமல்ல, இயேசு கிறிஸ்துவேதான்! தேவதூதர்கள் மனுஷ குமாரனிடத்திலிருந்து ஏறுகிறதும் இறங்குகிறதுமாய் இருந்தார்கள். தேவதூதர்கள் அவருக்கு ஊழியஞ்செய்தார்கள்; அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து சேவை செய்தார்கள். நாத்தான்வேல் பிற்காலத்தில் அந்த ஏணியின் உச்சியிலிருந்து, "இவர் என் நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" (மத்தேயு 3:17) என்ற பிதாவாகிய தேவனுடைய சத்தத்தைக் கேட்பார். நாம் நேரடியாகப் பிதாவினிடத்தில் சேர முடியாது; ஆனால் கிறிஸ்து என்ற ஏணியின் மூலமாக நமக்கு பிதாவினிடத்திற்குப் போகும் வழி கிடைக்கிறது.

> ஆண்டவராகிய இயேசு இதைத்தான் தெளிவாகக் கூறினார்: "இயேசு அவனுக்கு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" *(யோவான் 14:6)*.

இயேசு கிறிஸ்துவே அந்த ஏணி! இது நாம் ஏறிப்போகும் ஏணியல்ல, மாறாக நாம் முழுமையாக நம்பிக்கை வைக்கக்கூடிய ஓர் ஏணி.

இந்த உன்னத உண்மை, முதன்முதலில் ஏமாற்றுக்காரனாக இருந்த யாக்கோபுக்குத்தான் வெளிப்படுத்தப்பட்டது. ஆனால், நாத்தான்வேலைப் பற்றி நமது ஆண்டவர் கூறும்போது, "இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன்" *(யோவான் 1:47)* என்றார். அதாவது, நாத்தான்வேல் யாக்கோபைப்போல தந்திரக்காரனோ அல்லது ஏமாற்றுக்காரனோ அல்ல. **தேவன் யாக்கோபை அப்படியே விட்டுவிடவில்லை; அவனைச் சீர்ப்படுத்தப் போகிறார். யாக்கோபுக்கு அத்தனை பெரிய, மகிமையான வாக்குத்தத்தத்தை தேவன் கொடுத்திருந்தாலும், அவன் இன்னும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய இருந்தன!**

இன்றைக்கு நம்முடைய வாழ்க்கையிலும் இது உண்மையாயிருக்கிறதல்லவா? தேவன் ஏன் நமக்குக் கற்றுக்கொடுக்கிறார் என்றும், ஏன் நம்மைச் சிட்சித்து சீர்படுத்துகிறார் என்றும் ஆச்சரியமடையத் தேவையில்லை. **அவர் ஆபிரகாமையும், ஈசாக்கையும் கூட இப்படித்தான் வழிநடத்திச் சீர்படுத்தினார். இப்போது யாக்கோபுக்கும் அதையே செய்யப்போகிறார். இதுவரை யாக்கோபு நினைத்ததெல்லாம் அவனுக்குச் சாதகமாகவே நடந்துவந்தது.** ஆனால், இப்போது தேவன் யாக்கோபைச் சீர்படுத்த சில சோதனைகளையும் அனுமதிக்கிறார். **சோதனைகள் நமது குணாதிசயத்தை பலப்படுத்துகின்றன; அவை நமக்குத் தைரியத்தைத் தந்து, தேவனுக்காக உறுதியாய் நிற்க நமக்கு உதவுகின்றன.**



> "இயேசு கிறிஸ்துவே அந்த ஏணி! இது நாம் ஏறிப் போகும் ஏணியல்ல, மாறாக நாம் முழுமையாக நம்பிக்கை வைக்கக்கூடிய ஓர் ஏணி."



தேவபிரசன்னத்தை யாக்கோபு உணருதல்

"யாக்கோபு நித்திரைதெளிந்து விழித்து: மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார்; இதை நான் அறியாதிருந்தேன் என்றான். அவன் பயந்து, ... இது வானத்தின் வாசல் என்றான்" *(ஆதியாகமம் 28:16-17)*.

யாக்கோபு வீட்டை விட்டு ஓடிவந்தபோது, தேவனைப் பற்றிய அவனுடைய புரிதல் மிகவும் குறுகியதாகவே இருந்தது. தான் வீட்டை விட்டு ஓடிவந்துவிட்டதால், தேவனை விட்டும் தூரமாக ஓடிவந்துவிட்டதாக அவன் தவறாக நினைத்தான். ஆனால், தான் அவனை விட்டு விலகவில்லை என்பதையும், அவனோடு எப்போதும் இருக்கப்போவதாகவும் தேவன் யாக்கோபுக்கு அன்போடு நினைவூட்டுகிறார்.

அதிகாலையில் யாக்கோபு செய்த முதல் காரியம்: தன் தலைக்குத் தலையணையாக வைத்திருந்த கல்லை எடுத்து, அதை ஒரு தூணாக நிறுத்தி, அதன் மேல் எண்ணெய் வார்த்தான். "அப்பொழுது யாக்கோபு: தேவன் என்னோடு கூட இருந்து, நான் போகிற இந்த வழியிலே என்னைக் காத்து, உண்ண ஆகாரமும் உடுக்க வஸ்திரமும் எனக்குத் தந்து, என்னை என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பிவரப்பண்ணுவாரானால், கர்த்தர் எனக்குத் தேவனாயிருப்பார்" *(ஆதியாகமம் 28:20-21)*.

யாக்கோபு தேவனுடன் பேரம் பேசுதல்

யாக்கோபு இன்னும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய இருந்தன. அவன் தேவனிடம், "தேவனே, நீர் எனக்காக இதையெல்லாம் செய்தால், நான் உமக்குக் கீழ்ப்படிந்து உம்மைச் சேவிப்பேன்" என்று அவரிடம் பேரம் பேசினான். **ஆனால், தேவனோ அவனிடம் எந்த நிபந்தனையும் விதிக்காமல், ஏற்கனவே அவனுக்கு இவற்றையெல்லாம் தருவதாக வாக்குக் கொடுத்துவிட்டார்**: "நான் உன்னைக் காப்பேன்; உன்னைத் திரும்பவும் இந்தத் தேசத்திற்கு வரப்பண்ணுவேன்; இந்தத் தேசத்தை உனக்குத் தருவேன்; உனக்குச் சந்ததியைத் தருவேன்" என்று தேவன் அவனிடம் முன்பே சொல்லியிருந்தார்.

யாக்கோபு தேவனிடம் பேரம் பேச ஆசைப்பட்டான். ஆனால், தேவன் நம்மில் யாருடனும் இப்படிப் பேரம் பேசி வியாபாரம் செய்வதில்லை. ஒருவேளை தேவன் பேரம் பேசுதலின் அடிப்படையில் கிரியை செய்கிறவராக இருந்திருந்தால், யாக்கோபு ஒருபோதும் அந்த வாக்குத்தத்த தேசத்திற்குத் திரும்பி வந்திருக்கவே முடியாது!

தேவனுடைய கிருபையும் இரக்கமும்

தேவன் தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் யாக்கோபை வாக்குத்தத்த தேசத்திற்குத் திரும்பக் கொண்டுவந்தார். **பல ஆண்டுகளுக்குப் பிறகு யாக்கோபு பெத்தேலுக்குத் திரும்பிய போது, அவன் ஆவிக்குரிய ரீதியில் பக்குவப்பட்டவனாக மாறியிருந்தான்.** எனவேதான், அவன் தேவனுடைய இரக்கத்திற்காக அவரை ஆராதித்துத் துதிக்க அங்கு திரும்ப வந்தான்.

இன்றைக்கும்கூட, பலர், "தேவன் எனக்கு இந்த காரியத்தைச் செய்து கொடுத்தால் நான் அவரைச் சேவிப்பேன்" என்று பேரம்பேசுகின்றனர். ஆனால், தேவன் நம்முடன் அப்படி எந்த வியாபாரப் பேரமும் செய்வதில்லை. **அவர் உங்களிடமிருந்து கைமாறாக எதையும் எதிர்பார்க்காமல், உங்களுக்கு இரக்கம் பாராட்டி, தம்முடைய கிருபையை உங்களுக்கு வாரி வழங்குகிறார்.** அவர் உங்களிடம் திரும்ப எதையும் கேட்காவிட்டாலும், "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால், உண்மையிலேயே என்னைச் சேவிக்க விரும்புவீர்கள்" என்று அவர் கூறுகிறார். அதுதான் "**அன்பின் பிணைப்பு**" அதாவது கட்டாயத்தினால் அல்ல, அன்பினால் நாம் அவரோடு இணைந்திருப்பது.

ஒரு தாய் தன் பிஞ்சு குழந்தையிடம் வைத்திருக்கும் அதே போன்ற தூய்மையான அன்புதான் இது. அவள் தன் குழந்தைக்கு எப்போதும் நன்மையே செய்ய விரும்புவாள். நாமும் அவரிடம் இப்படிப்பட்ட அன்பை வைத்திருக்க வேண்டும் என்றே தேவனும் விரும்புகிறார். **கிறிஸ்துவின் மேலுள்ள நம்முடைய விசுவாசத்தின் மூலமாக, அவர் நமக்கு அன்பான தகப்பனாக மாறவே விரும்புகிறார்!**



"கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தின் மூலமாக அவர் நமக்கு அன்பான தகப்பனாக மாறவே விரும்புகிறார்!"

தேவனுடைய மாறாத சத்தியங்கள்

ஆதியாகமம் 28-ம் அதிகாரத்திலிருந்து நமக்கான பாடங்கள்

1 இயேசு கிறிஸ்துவே பிதாவாகிய நாம் தேவனிடம் செல்வதற்கான நேரடி வழி

- **சத்தியம்:** யாக்கோபு வானத்தைத்தொடும் அளவுக்குக் கண்ட அந்த ஏணி சாதாரண சொப்பனம் மட்டுமல்ல; அது இயேசு கிறிஸ்துவைக் காட்டும் ஒரு சித்திரம். நமது சொந்த சுயமுயற்சிகளினால் நாம் ஒருபோதும் தேவனிடம் செல்ல முடியாது. ஆகவே தேவனே நமக்கான ஒரு வழியை பரலோகத்திலிருந்து உருவாக்கித் தந்தார் என்பதை இது குறிக்கிறது.
- **புதிய ஏற்பாட்டுத் தொடர்பு:** யாக்கோபு கண்ட சொப்பனத்தின் உண்மையான அர்த்தத்தை இயேசு நாத்தான்வேலிடம் மிகத் தெளிவாகச் சொன்னார்: "வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள்" *(யோவான் 1:51)*. மேலும் இயேசு இதை, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" *(யோவான் 14:6)* என்று உறுதிப் படுத்தினார். இயேசு கிறிஸ்துவே பரலோகத்தை இணைக்கும் அந்த ஏணி என்று இதற்குப் பொருள். இது நமது சொந்த முயற்சியால் ஏறிச் செல்லும் ஏணி அல்ல; மாறாக, நம்மைப் பரலோகத்திற்குப் பாதுகாப்பாகக் கொண்டு சேர்ப்பார் என்று நாம் முழுமையாக விசுவாசிக்க வேண்டிய ஏணி.

2 தேவன் கிருபையினால் செயல்படுகிறாரே தவிர நம்மோடு பேரம் பேசி செயல்படுவதில்லை

- **சத்தியம்:** யாக்கோபு தேவனோடு பேரம் பேச முயன்றான். தேவன் தனக்கு உணவும், உடையும், பாதுகாப்பும் கொடுத்தால், அவரைச் சேவிப்பதாக வாக்களித்தான். ஆனால், தேவன் எவ்வித நிபந்தனையுமின்றி இவை அனைத்தையும் செய்வதாக அவனுக்கு முன்பே வாக்குத்தத்தம் செய்திருந்தார். தேவன் நம்மோடு வியாபார அடிப்படையில் செயல் படுவதில்லை; மாறாக, அவருடைய கிருபையினாலும் இரக்கத்தினாலுமே நம்மைத் தம்முடைய வாக்குத்தத்தங்களுக்குள் வழிநடத்துகிறார்.
- **புதிய ஏற்பாட்டுத் தொடர்பு:** இரட்சிப்பு என்பது கிறிஸ்துவின் மூலமாக நமக்கு இலவசமாகக் கொடுக்கப்படும் கிருபையின் ஈவு *(எபேசியர் 2:8-9)*. நம்முடைய பாவத்துக்கான முழுத் தண்டனையையும் கிறிஸ்து செலுத்திவிட்டதால், தேவன் நம்மிடம் திரும்பப் பெறுவதற்கு எதையும் எதிர்பாராமல், தமது இரக்கத்தையே நமக்குக் காட்டுகிறார். எனவே, நாம் தேவனுக்குச் செய்யும் சேவை என்பது பேரம்பேசுதலாக இல்லாமல், "அன்பின் பிணைப்பாக" இருக்க வேண்டும். கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதன் மூலம், அவர் நமக்கு இலவசமாக அளித்த கிருபைக்கு, நாம் காட்டும் அன்பே உண்மையான பதிலீடாக இருக்க வேண்டும்.

சிந்தனைக்கான கேள்விகள்

கேள்வி 1

சிட்சையின் நோக்கம்: உங்கள் வாழ்க்கையில் நீங்கள் கடந்து வந்த ஒரு கடினமான சோதனையை அல்லது "நாடுகடத்தப்பட்டது" போன்ற ஒரு தனிமையான சூழ்நிலையைத் திரும்பிப் பாருங்கள். தேவன் உங்களைத் திருத்தவும், உங்களுக்குள் இருக்கும் ஏமாற்றும் குணத்தை நீக்கவும், உங்கள் சுபாவத்தைப் பலப்படுத்தவும் அந்தச் சூழ்நிலையை எப்படிப் பயன்படுத்தியிருப்பார் என்று உங்களால் இப்போது உணர முடிகிறதா?

கேள்வி 2

ஏணியில் இளைப்பாறுதல்: பரலோகத்தையும் பூமியையும் இணைக்கும் ஏணி இயேசுவே. உங்கள் பாவங்களிலிருந்து உங்களை முழுமையாக இரட்சிக்க நீங்கள் இயேசுவை மட்டுமே விசுவாசிக்கிறீர்களா? இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்து முடித்த கிரியையை முழுமையாக விசுவாசித்து, உங்கள் ஆத்துமா நூறு சதவிகிதம் இளைப்பாறுதலைக் கண்டடைந்திருக்கிறதா?

கேள்வி 3

அன்பினால் சேவித்தல்: நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிவது என்பது ஒரு வியாபாரத்தைப் போல பேரம்பேசுவதாக இராமல், "அன்பின் பிணைப்பாக" இருக்க வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார். கர்த்தரோடு உங்களுக்கு இருக்கும் உறவை நீங்கள் எப்படி விவரிப்பீர்கள்? அது ஏதோ ஒன்றை எதிர்பார்த்துச் செய்யும் வியாபாரத்தைப் போல இருக்கிறதா? அல்லது, உங்கள் வாழ்க்கையில் அவருடைய அன்பையும் வழிநடத்துதலையும் எந்தெந்த வழிகளில் அனுபவித்து உணருகிறீர்கள்?

நற்செய்தி

கிறிஸ்து

பரலோகம் செல்வதற்கான உண்மையான ஏணி

1. **தரிசனம் விவரிக்கும் சத்தியம்:** இந்த பாடத்தில், வானத்தைத் தொடும் ஓர் ஏணியைப் பற்றி யாக்கோபு கண்ட சொப்பனத்தின் வாயிலாகக் நாம் கற்றுக்கொண்டோம். இந்தத் தரிசனத்தின் உண்மையான அர்த்தம், கர்த்தராகிய இயேசு தமது சீஷனாகிய நாத்தான்வேலை அழைக்கும் வரை மறைக்கப்பட்டிருந்தது. இயேசு அவனிடம், "வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இனிமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் *(யோவான் 1:50-51)*.

2. **கிறிஸ்துவே இணைப்புப்பாலம்:** பழைய ஏற்பாட்டிலுள்ள இந்த ஏணி தரிசனத்தை இயேசு தம்மோடு ஒப்பிட்டுக் காட்டியதன் மூலம், இயேசு ஒரு சிறந்த நற்செய்தியை நமக்கு வெளிப்படுத்துகிறார். **அந்த ஏணி வேறு யாருமல்ல, கிறிஸ்துவேதான்!** பரிசுத்தமுள்ள தேவனுக்கும் பாவமுள்ள மனிதர்களுக்கும் இடையே உள்ள எல்லையற்ற இடைவெளியை இணைக்கும் ஒரே மத்தியஸ்தர் அவரே. மேலும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்தில் ஏறுவதும் இறங்குவதும், அவர்கள் இயேசுவுக்குத் தீவிரமாக ஊழியஞ்செய்து, அவருடைய இறையாண்மைமிக்க கட்டளையின்படி செயல்பட்டார்கள் என்பதைக் காட்டுகிறது.

3. **பிதாவின் அங்கீகாரம்:** யாக்கோபு கண்ட அந்தக் கனவில், கர்த்தர் ஏணியின் உச்சியில் நின்றார். புதிய ஏற்பாட்டிலோ, பிதாவாகிய தேவனுடைய சத்தம் அந்த ஏணியின் உச்சியிலிருந்து இயேசுவை உறுதிப்படுத்தி, "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்று உரைத்ததைக் கேட்கிறோம் *(மத்தேயு 3:17)*. கிறிஸ்து பிதாவினுடைய முழுமையான அங்கீகாரத்தையும் அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார்.

4. **சுவிசேஷத்தின் தனித்துவம்:** மனிதகுலத்தின் அடிப்படைப் பிரச்சனையே தேவனை விட்டுப் பிரிந்திருப்பதுதான். நாம் நேரடியாகப் பிதாவினிடத்திற்கு வர முடியாது என்பதையும், கிறிஸ்து மூலமாக மட்டுமே அவரிடத்தில் வர முடியும் என்பதையும் இயேசு தெளிவுபடுத்துகிறார். பரலோகத்திற்குச் செல்ல மாற்று வழிகள் ஏதும் இல்லை என்பதை, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று இயேசு திட்டவட்டமாகக் கூறுகிறார் *(யோவான் 14:6)*.

5. **முக்கியமான நடைமுறை - விசுவாசமா? கிரியைகளா?:** நமது இரட்சிப்புக்கான மிக முக்கியமான படிப்பினையே, இந்த ஏணிக்கு நாம் எப்படிப் பதிலளிக்கிறோம் என்பதில்தான் அடங்கியிருக்கிறது. உலக மதங்கள், மனிதர்களைக் கடினமாக உழைத்து, சொந்த முயற்சியால் "ஏறி" தேவனுடைய தயவைப் பெறும்படி சொல்கின்றன. ஆனால் தேவனோ, **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே அந்த ஏணி என்று அறிவிக்கிறார். அது நாம் ஏறிப்போகும் ஏணியல்ல, மாறாக நம்மை இரட்சிப்பார் என்று நாம் முழுமையாக நம்ப வேண்டிய ஏணியாகும்.**

பரலோகத்தை அடைவதற்காக நாம் எடுக்கும் கடினமான, சோர்வூட்டும் முயற்சிகளால் நாம் இரட்சிக்கப்படுவதில்லை. மாறாக, **நம்மை மீட்கும்படி பரலோகத்திலிருந்து இறங்கி வந்தவர் மீது நமது முழு விசுவாசத்தையும் வைப்பதன் மூலமே இரட்சிக்கப்படுகிறோம்.** இயேசு சிலுவையில் உங்கள் பாவங்களுக்கான கிரயத்தைச் செலுத்தி, உங்களுக்காக மரித்து, உங்களை நீதிமான்கள் என்று அறிவிக்கவும், **உங்கள் பாவங்களை மன்னிக்கவும் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். நமது ஏணியாகிய இயேசுவின் மூலமாக,** அவர் நம்மை தேவனுக்கு மிக அருகில், நம்முடைய நித்திய வீடாகிய பரலோகத்திற்கு அழைத்துச் செல்வார்.


யாக்கோபின் திருமணம்
ஆதியாகமம் 29:1-30

யாக்கோபின் திருமணம்

ஜெபத்துடன் தொடங்குங்கள்
வேதபகுதி: ஆதியாகமம் 29:1-30
கேளுங்கள் THRU the BIBLE: ஆதியாகமம் 29:1-30

அன்புள்ள பரலோகப் பிதாவே,

ஆண்டவரே, நாங்கள் உம்முடைய வார்த்தையைத் தியானிக்கும் போது, எங்களை நாங்களோ அல்லது மற்றவர்களையோ ஏமாற்றிக் கொண்டிருந்தால் அதை உணரும்படி எங்கள் கண்களைத் திறந்தருளும். "மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" என்பதை நாங்கள் எப்போதும் மறக்காதிருக்க உதவி செய்யும். உம்முடைய சிட்சையை ஏற்றுக்கொள்ளும் மனத் தாழ்மையையும், உமக்கு முன்பாக உத்தமத்தோடும் உண்மையோடும் நடப்பதற்கான ஞானத்தையும் எங்களுக்குத் தந்தருளும்.

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் பிதாவே. ஆமென்.

புறப்பட வேண்டிய நேரம் வந்தது

ஆதியாகமம் 29:1-30

இதுவரை, **யாக்கோபு தன் பெருமையினாலும் தந்திரத்தினாலும் வாழ்க்கையை ஓட்டி வந்தான். ஏமாற்றுவதில் அவன் திறமையானவனாக இருந்தான்.** தன் சுயநல நோக்கங்களை நிறைவேற்ற எந்தவொரு அநீதியான வழியையும் பயன்படுத்த அவன் தயங்கவில்லை, அதைக் குறித்துப் பெருமையாகவும் நினைத்தான். ஆனால், இப்போது **அவன் விதைத்ததை அறுக்கும் காலம் வந்தது. வானத்திற்கு எட்டுகிற ஏணியாக இயேசு கிறிஸ்துவைச் சொப்பனத்தில் கண்ட** இடமாகிய பெத்தேலை விட்டுப் புறப்பட யாக்கோபு தயாரானான். அவன் தன் பிரயாணத்தைத் தொடர்ந்து, சில நாட்களுக்குப்பின் ஆரான் தேசத்திற்கு வந்து சேர்ந்தான்.

அவன் அங்கே முதலாவதாகக் கண்டது வெளியிலிருந்த **ஒரு கிணறும், அதன் வாயிலின் மேல் வைக்கப்பட்டிருந்த ஒரு பெரிய கல்லும்தான்.** அந்தப் பகுதியில் தண்ணீர் மிகவும் முக்கியமானது என்பதால், அது அந்தக் கல்லினால் மூடப்பட்டுப் பாதுகாக்கப்பட்டது. நாளின் ஒரு குறிப்பிட்ட நேரத்தில், கிணற்றின் வாயிலிலிருந்து கல் உருட்டப்படும்; அப்போது **எல்லாரும் தங்கள் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டுவார்கள்**. தண்ணீர் காட்டி முடித்த பின்பு, கிணற்றை மூடுவதற்காக அந்தக் கல் மீண்டும் அதன் வாயிலின் மேல் வைக்கப்படும்.

யாக்கோபு அங்கே வந்தபோது, கல் இன்னும் கிணற்றின் வாயிலிலேயே இருந்தது. அவன் அங்கிருந்தவர்களிடம், **"சகோதரரே, நீங்கள் எவ்விடத்தார்?" என்று கேட்டான். அதற்கு அவர்கள், "நாங்கள் ஆரான் ஊரார்" என்றார்கள். உடனே அவன், "நாகோரின் குமாரனாகிய லாபானை உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டான். அதற்கு அவர்கள், "தெரியும்; அதோ, அவனுடைய குமாரத்தி ராகேல் தன் ஆடுகளோடு வருகிறாள்" என்றார்கள்.**

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே, ராகேல் தன் ஆட்டுமந்தையோடு அங்கே வந்து சேர்ந்தாள். யாக்கோபு அவளைக் கண்டவுடனே, **கிணற்றின் வாயிலிலிருந்த கல்லை உருட்டி, அவளுடைய ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டினான்.** ராகேலின் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டும்படி அவனுக்கு யாரும் சொல்லவில்லை, ஆனால் அவனாகவே முன்வந்து அதைச் செய்தான். யாக்கோபு தன் வாழ்க்கையின் முற்பகுதியில், தன் இஷ்டப்படியும் சுய லாபத்திற்காகவும் விதிகளைத் தனக்கு சாதகமாக வளைத்துக் கொண்டான். ஆனால், இப்போது அவன் ஒரு **முக்கியமான பாடத்தைக்** கற்றுக்கொள்ளப் போகிறான். அதை அவனுக்குக் கற்றுக்கொடுக்கப் போவது அவனுடைய தாய்மாமனாகிய லாபான் தான்!



யாக்கோபு விதைத்ததை அறுவடை செய்தல்

யாக்கோபு தன் உறவினராகிய ராகேலைச் சந்தித்தபோது, **அவளை முத்தமிட்டு, உணர்ச்சிப் பெருக்குடன் சத்தமிட்டு அழுதான். யாக்கோபு ராகேலின் தகப்பனுடைய சகோதரியான ரெபெக்காளின் குமாரன்** ஆவான். இந்த சந்தோஷமான செய்தியைக் கேள்விப்பட்டவுடன், லாபான் யாக்கோபைச் சந்திக்க எதிர்கொண்டு ஓடிவந்து, அவனைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டு, தன் வீட்டுக்குள் அழைத்துக்கொண்டுவந்தான். அன்றிரவு சாப்பாட்டு நேரத்தில், யாக்கோபு தான் கடந்துவந்த பாதையைப் பற்றியும், **தன் அண்ணனை ஏமாற்றி எப்படி** சேஷ்டபுத்திரபாகத்தைப் பெற்றுக்கொண்டது பற்றியும், தன் தந்திரத்தினால் தந்தையிடம் **ஆசீர்வாதத்தை அபகரித்துக் கொண்டது பற்றியும்** கதைகதையாகச் சொல்லி லாபானை மகிழ்வித்திருப்பான்!

யாக்கோபு தன் சொந்தக்காரன்தான் என்பதை உறுதிசெய்துகொண்ட லாபான் அவனிடம், "**நீ என் எலும்பும் என் மாம்சமுமானவன்" என்று கூறி, தன் வீட்டிலேயே தங்கவைத்தான்**. ஒரு மாதம் கடந்தது. தூரதேசத்திலிருந்து வந்த உறவினன் என்பதால், யாக்கோபு எந்த வேலையும் செய்யாமல் ஓய்வாக இருந்தான். பெரும்பாலும் அவன் ராகேலோடு நேரத்தைச் செலவிட்டிருப்பான். ஒரு நாள் காலையில் லாபான் யாக்கோபை நோக்கி: **"நீ என் மருமகனாயிருப்பதால், சும்மா எனக்கு வேலைசெய்யலாமா? உனக்கு என்ன சம்பளம் வேண்டும்? சொல்" என்றான். லாபான் தன் மருமகனைத் தந்திரத்தால் கையாள்வதற்குத் திட்டமிட்டான்.**

லாபானுக்கு இரண்டு குமாரத்திகள் இருந்தார்கள்: மூத்தவள் லேயாள், இளையவள் ராகேல். யாக்கோபுக்கு ராகேலின் மேல் ஈர்ப்பு இருந்ததை லாபான் அறிந்தான். **ஏனெனில், ராகேல் ரூபவதியும் அழகானவளாயும் இருந்தாள். ஆனால் லேயாளோ அப்படி இருக்கவில்லை; அவள் கூச்சப்பார்வையுடையவளாயிருந்தாள்.** உனக்கு என்ன சம்பளம் வேண்டும் என்று லாபான் கேட்டபோது, **யாக்கோபு அவனுடைய இளைய குமாரத்தியாகிய ராகேலுக்காக ஏழு ஆண்டுகள் வேலை செய்கிறேன் என்றான்.** லாபான் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டான்.

வஞ்சத்தின் வலியை யாக்கோபு அனுபவித்தல்

அந்தப்படியே யாக்கோபு ராகேலுக்காக ஏழு ஆண்டுகள் வேலை செய்தான்: "**அவள்பேரில் இருந்த பிரியத்தினாலே அந்த வருஷங்கள் அவனுக்குக் கொஞ்சநாளாகத் தோன்றினது**" *(ஆதியாகமம் 29:20)*. யாக்கோபின் ஆரம்பகால வாழ்க்கையில், அழகாகவும் மரியாதைக்குரியதாகவும் இருந்த ஒரே விஷயம், ராகேல் மேல் அவன் வைத்த உண்மையான அன்புதான். ஏழு ஆண்டுகள் கடின உழைப்பு முடிந்ததும், யாக்கோபு ராகேலைத் திருமணம் செய்ய ஆவலோடு இருந்தான். லாபானும் ஊராரைக் கூட்டி, ஒரு பெரிய கல்யாண விருந்துக்கு ஏற்பாடு செய்தான். ஆனால், **சாயங்காலத்திலோ லாபான் தன் குமாரத்தியாகிய லேயாளைக் கூட்டிக்கொண்டுபோய் யாக்கோபிடம் விட்டான்.** அக்காலத்து வழக்கப்படி, மணமகள் முக்காடிட்டிருந்ததால் முகம் தெரியவில்லை. பாவம் யாக்கோபு! விடியற்காலம் வரை தான் யாரைத் திருமணம் செய்து கொண்டோம் என்று அவனுக்குத் தெரியவில்லை. காலையில் பார்த்தபோது, **அங்கே ராகேல் அல்ல, லேயாள் இருந்தாள்! பெரும் அதிர்ச்சியடைந்த யாக்கோபு லாபானிடம் கோபமாகச் சென்று: "நீர் எனக்கு ஏன் இப்படிச் செய்தீர்? ராகேலுக்காக அல்லவா உம்மிடத்தில் வேலைசெய்தேன்? பின்னை ஏன் எனக்கு வஞ்சகம்பண்ணினீர்?" என்று சண்டையிட்டான்.**

லாபான் யாக்கோபின் ஆட்சேபனையை நிராகரித்து, "**மூத்தவள் இருக்க இளையவளைக் கொடுப்பது எங்கள் ஊர் வழக்கமல்ல**" என்று சொன்னான். இந்த நிபந்தனையை அவன் யாக்கோபிடம் முன்னரே சொல்லாமல் ஏமாற்றிவிட்டான்.

தான் ஏமாற்றப்பட்டுவிட்டதை யாக்கோபு கண்டபோது, தான் மூத்த சகோதரனைப் போல நடித்தது அவனுக்கு நினைவுக்கு வந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தன் தகப்பனை ஏமாற்றியதால்தான் அவன் வீட்டை விட்டு வெளியேற நேரிட்டது. இப்போது யாக்கோபு தனக்கு இளையவள் கிடைப்பாள் என்று நினைக்கிறான், ஆனால் அதற்குப் பதிலாக மூத்தவளே அவனுக்குக் கிடைக்கிறாள். இப்போது நிலைமை அப்படியே தலைகீழாக மாறிவிட்டது, மேலும் இது யாக்கோபுக்கு வலி நிறைந்த ஒரு சோகமான நாளாகும்.

தேவசித்தத்திற்கு எதிராக முடிவெடுத்தல்

ஆனால் **லாபான் தன்னுடைய ஒப்பந்தத்தில், "தாராளமாக" நடந்துகொள்ள முன்வந்து,** ஒரு யோசனையைச் சொன்னான்: "இன்னும் ஏழு வருஷம் வேலை செய், ராகேலையும் நீ பெற்றுக்கொள்ளலாம்." இதன் அர்த்தம் யாக்கோபுக்கு இரண்டு மனைவிகள் இருப்பார்கள், இதை அவன் செய்திருக்கவே கூடாது. இது முடிவடைவதற்குள் அவன் பெரிய சிக்கலில் மாட்டுவான். **அப்படியே யாக்கோபு இன்னும் ஏழு ஆண்டுகள் வேலைசெய்து, ராகேலையும் தன் மனைவியாக ஆக்கிக்கொண்டான்.**

"**ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவிகளை வைத்துக்கொள்வதைத் தேவன் ஏற்றுக் கொள்கிறாரா?**" என்று சிலர் கேட்பதுண்டு. இல்லை, வேதாகமத்தில் நடக்கும் எல்லாவற்றையுமே தேவன் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் அது வரலாற்றைப் பற்றிய உண்மையை உள்ளபடியே சொல்கிறது. யாக்கோபுக்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள், அது இப்படித்தான் நடந்தது. **இதுமுதற்கொண்டு யாக்கோபு தன் குடும்பத்தில் ஏராளமான பிரச்சனைகளைச் சந்தித்தான். தனக்கு வேண்டியதை அடைய அவன் தன் சொந்த வழிகளையே பயன்படுத்தியதுதான் இதற்கெல்லாம் மூலகாரணம் என்பதை நாம் தெளிவாகக் காண முடியும்.**



> "யாக்கோபு தன் சொந்த புத்தியையும் தந்திரத்தையும் நம்பியே வாழ்ந்து வந்தான். அவன் கர்வமும் கெட்டிக்காரத்தனமும் கொண்டவனாகவும், மற்றவர்களை ஏமாற்றுவதில் கைதேர்ந்தவனாகவும் இருந்தான். ஆனால் இப்போது, அவன் தான் விதைத்ததையே அறுக்கப்போகிறான்."

தேவனுடைய மாறாத சத்தியங்கள்

ஆதியாகமம் 29-ம் அதிகாரத்திலிருந்து நமக்கான பாடங்கள்

விதைப்பதும் அறுப்பதும் பற்றிய பிரமாணம்:

- **சத்தியம்:** இந்தக் கதையின் மையக்கருத்து, **"மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்"** *(கலாத்தியர் 6:7)* என்பதேயாகும். யாக்கோபு தன் இளமைக் காலத்தில், தன் தகப்பனின் ஆசீர்வாதத்தையும் தன் சகோதரனின் சேஷ்டபுத்திரபாகத்தையும் பெற்றுக்கொள்ள, தனது ஏமாற்று வழியையும் நேர்மையற்ற தந்திரங்களையும் சார்ந்திருந்தான். அவன் வஞ்சகத்தை விதைத்தபடியால், வஞ்சகத்தையே அறுத்தான். ராகேலுக்குப் பதிலாக மூத்தவள் லேயாளைத் திருமணம் செய்யும்படி அவனுடைய மாமன் லாபானால் அவன் ஏமாற்றப்பட்டான். **யாக்கோபைச் சிட்சிப்பதற்காகவும், அவன் தன் கடந்தகாலப் பாவங்களை எண்ணிப்பார்த்து, ஏமாற்றப்படுதலின் வலியை அனுபவிப்பதற்காகவும் தேவன் இவ்வாறு அனுமதித்தார். இது எல்லாத் தலைமுறையினருக்கும் எக்காலத்திற்கும் பொருந்துகிற அடிப்படையான மாறாத சத்தியமாகும்.**



- **புதிய ஏற்பாட்டுத் தொடர்பு: "மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" *(கலாத்தியர் 6:7)*.**



சிந்தனைக்கான கேள்விகள்

கேள்வி 1

விதைப்பதும் அறுப்பதும் குறித்து சிந்தித்துப் பார்த்தல்: யாக்கோபைப் போலவே, என் இலக்குகளை அடைவதற்காக நேர்மையற்ற வழிகளைப் பயன்படுத்தியதையோ அல்லது "எனக்கு ஏற்றபடி விதிகளை வளைத்துக்கொண்டதையோ" எனக்கு நானே நியாயப்படுத்திய பகுதிகள் என் வாழ்க்கையில் உள்ளனவா? என்னுடைய தற்போதைய போராட்டங்கள், நான் கடந்த காலத்தில் விதைத்தவைகளின் அறுவடையா?

கேள்வி 2

நடத்தையை மாற்றுதல்: எனது வாழ்வில் கசப்பான அறுவடையைத் தவிர்ப்பதற்காக, நான் இன்றே அறிக்கைசெய்து விட்டுவிட வேண்டிய ஒரு "கெட்டிக்காரத்தனமான" அல்லது வஞ்சகமான பழக்கம் எவையேனும் இருக்கின்றனவா?

கேள்வி 3

நேர்மையான சுயபரிசோதனை: யாக்கோபு தன் தகப்பனை ஏமாற்றிய காரியம், லாபான் மூலமாக அவனுக்கே திரும்பக் கிடைத்தது. நீங்கள் தற்போது மற்றவர்களையோ அல்லது உங்களையோ ஏமாற்றிக் கொண்டிருக்கும் ஏதாவது ஒரு பகுதியை வெளிப்படுத்தும்படி பரிசுத்த ஆவியானவரிடம் கேளுங்கள். தேவனுக்கு முன்பாக நீங்கள் நேர்மையாய் நடப்பதற்கு, இந்த வாரம் என்னென்ன முயற்சிகளை எடுக்கலாம் என்று சிந்திக்கிறீர்கள்?


யாக்கோபின் குடும்பம்
ஆதியாகமம் 29:30 - 31:6

யாக்கோபின் குடும்பம்

ஜெபத்துடன் தொடங்குங்கள்
வேதபகுதி: ஆதியாகமம் 29:30 - 31:6
கேளுங்கள் THRU the BIBLE: ஆதியாகமம் 29:30-31:6

அன்புள்ள பரலோகப் பிதாவே,

எங்கள் பிரயாசங்களைவிட உம்முடைய கிருபை மேலானதாக இருப்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் பெற்றிருக்கிற நன்மைகள் யாவும் எங்களுடைய சொந்தப் புத்தியினால் அல்ல, அவை உம்மிடமிருந்தே வருகின்றன என்பதை நாங்கள் தெளிவாய் உணர்ந்துகொள்ளச் செய்யும். எங்கள் சொந்தத் திட்டங்களை நம்பியிருப்பதைவிட, உமது வல்லமையுள்ள கரத்திற்குள் எங்களை முழுமையாக ஒப்புவிக்கவும், எங்களது வழிநடத்துதலுக்காக உமது அன்பான பராமரிப்பையே நம்பியிருக்கவும் எங்களுக்குக் கற்றுத்தாரும்.

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் பிதாவே. ஆமென்.

யாக்கோபின் குமாரர்கள்

ஆதியாகமம் 29:30 - 31:6

இந்த இளம் குடும்பமே வேதாகமத்திலேயே மிகவும் முக்கியமான ஒரு குடும்பமாக மாறப்போகிறது என்பது அப்போதைக்கு அவர்கள் அறிந்திருக்கமாட்டார்கள். ஆனால் இந்த **இரண்டு பெண்கள் மற்றும் அவர்களுடைய வேலைக்காரிகள் மூலமாகத்தான் யாக்கோபின் பன்னிரண்டு குமாரர்களும்** பின்னாளில் இஸ்ரவேலின் 12 கோத்திரங்களாக உருவாகப் போகிறார்கள். யாக்கோபின் முதல் மனைவியான லேயாள், தான் நேசிக்கப்படவில்லையே என்பதை நினைத்துத் துக்கப்படுகிறாள். தன் மூத்த மகனாகிய ரூபனைப் பெற்றெடுத்தபோது, இனி யாக்கோபின் அன்பு தன் பக்கம் திரும்பும் என்று நம்பினாள். ஆயினும், யாக்கோபோ தொடர்ந்து ராகேலையே நேசித்தான்.

ரூபன் யாக்கோபின் முதல் மகனாக இருந்தபோதிலும், கிறிஸ்து பிறக்கப்போகும் சந்ததி அவன் மூலமாக வரவில்லை. **மாறாக, லேயாளின் நான்காவது குமாரனாகிய யூதாவின் மூலமாகவே அந்த ராஜரீக வம்சம் தொடங்கியது.** இந்த வம்சத்தில்தான் தாவீதும், பின்னாளில் கர்த்தராகிய இயேசு தாமே தோன்றினார். மேலும், ஆசாரிய கோத்திரமும் லேயாளின் குமாரனாகிய லேவியிலிருந்தே வந்தது. **லேயாள், யாக்கோபினால் நேசிக்கப்படாமல் இருந்தபோதிலும், அவனுடைய முக்கியமான சில குமாரர்களுக்குத் தாயாகும் பாக்கியத்தைக் கொடுத்து, தேவன் அவளைக் கனப்படுத்தினார்.**



"லேயாள், யாக்கோபினால் நேசிக்கப்படாமல் இருந்த போதிலும், அவனுடைய முக்கியமான சில குமாரர்களுக்குத் தாயாகும் பாக்கியத்தைக் கொடுத்து, தேவன் அவளைக் கனப்படுத்தினார்."

இதற்கிடையில், ராகேலுக்குக் குழந்தைப் பாக்கியம் இல்லை. இது அவளை மிகுந்த மனச்சோர்விற்கும் விரக்திக்கும் உள்ளாக்கியது. **அந்த நாட்களில், ஒரு பெண்ணுக்கு சந்ததி இல்லையென்றால் அது அவளுக்கு ஒரு பெரிய நிந்தையாகக் கருதப்பட்டது.** ஒரு பெண் எவ்வளவு அதிகமாகப் பிள்ளைகளைப் பெற்றெடுக்கிறாளோ, அந்த அளவுக்கு சமுதாயத்தில் அவளுடைய மதிப்பும் உயர்ந்ததாக இருந்தது.

ராகேலின் இந்த விரக்தியைக் கண்ட யாக்கோபுக்குக் கோபம் மூண்டது. தன் அன்பு மட்டுமே அவளுக்குப் போதுமானதாக இருக்க வேண்டும் என்று அவன் நினைத்தான். ஆனால் இதற்கு **முன்னர் சாராள் செய்ததைப் போலவே, ராகேலும் தன் வேலைக்காரியின் மூலமாக யாக்கோபுக்குப் பிள்ளைகள் கிடைக்க வேண்டும் என்று யோசனை சொன்னாள்** (தேவன் அந்தச் செயலை அன்று மட்டுமல்ல, இன்றும் அங்கீகரிப்பதில்லை). இருப்பினும், அவளுடைய இந்தச் செயல் குடும்பத்தில் துன்பத்தையே கொண்டு வந்தது.

யாக்கோபின் வீடு பிள்ளைகளால் நிரம்பியது. ராகேலின் வேலைக்காரி மூலமாக இரண்டு குமாரர்களும், லேயாளின் வேலைக்காரி மூலமாக இரண்டு குமாரர்களும் பிறந்தார்கள். அதன்பிறகு லேயாளுக்கு மேலும் இரண்டு மகன்கள் பிறந்தார்கள்.

பின்பு, **"தேவன் ராகேலை நினைத்தருளி... அவள் கர்ப்பந்தரிக்கச் செய்தார்"** *(ஆதியாகமம் 30:22)*. அவள் ஒரு ஆண்பிள்ளையைப் பெற்றெடுத்து, **அவனுக்கு யோசேப்பு என்று பேரிட்டாள்**. அதன்பின்பு, அவள் **பென்யமீனையும்** பெற்றெடுத்தாள்.

மொத்தத்தில், யாக்கோபுக்குப் பன்னிரண்டு குமாரர்கள் பிறந்தார்கள் – இவர்களிலிருந்தே இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களும், இறுதியாக இஸ்ரவேல் தேசமும் உருவானது.

யாக்கோபின் பிள்ளைகளின் பட்டியல் இதோ:

லேயாளின் பிள்ளைகள்	ராகேலின் வேலைக்காரி பில்காளின் பிள்ளைகள்	லேயாளின் வேலைக்காரி சில்பாளின் பிள்ளைகள்	ராகேலின் பிள்ளைகள்
1. ரூபன்	1. தாண்	1. காத்	1. யோசேப்பு
2. சிமியோன்	2. நப்தலி	2. ஆசேர்	2. பென்யமீன்
3. லேவி			
4. யூதா			
5. இசக்கார்			
6. செபுலோன்			
7. தீனாள் (மகள்)			

யாக்கோபின் குடும்பம் புறப்பட ஆயத்தமாகிறது

இறுதியாக, யாக்கோபு லாபானை விட்டுப் பிரிந்து, **தன் சொந்தக் குடும்பத்திற்கென்று ஒரு வீட்டை உருவாக்கிக் கொள்ளத் துணிந்தபோது,** தங்களை அனுப்பிவிடும்படி லாபானிடம் கேட்டான். அவன் லாபானுக்குப் போதுமான காலம் ஊழியம் செய்திருந்தான். ஆனால் லாபான் அவர்களை அவ்வளவு எளிதாக விட்டுவிடத் தயாராக இல்லை. **கர்த்தர் அவர்களை ஆசீர்வதித்ததையும், யாக்கோபினிமித்தம் தன்னையும் ஆசீர்வதித்ததையும் அவன் கண்கூடாகக் கண்டிருந்தான்;** எனவே அவர்களை அனுப்ப அவனுக்கு விருப்பமில்லை. அவன் யாக்கோபிடம், **"மகனே, அவசரப்பட்டுப் போய்விடாதே! உன்னிமித்தமே நான் ஆசீர்வதிக்கப் பட்டேன். உனக்கு நான் சம்பளத்தை உயர்த்தித் தருகிறேனே?"** என்று கேட்டான்.

மாமனார் லாபான் எப்போது ஒரு ஒப்பந்தம் செய்தாலும், அதில் அவர் மட்டுமே லாபமடைவார் என்பதை யாக்கோபு இந்நேரம் நன்றாகப் புரிந்துகொண்டிருந்தான். **யாக்கோபு அந்தப் பாடத்தை அனுபவபூர்வமாகக் கற்றுக்கொண்டிருந்தான். தன்னுடைய இத்தனை வருட உழைப்பிற்கான பலனாக, தன்னிடம் இரண்டு மனைவிகளும் வீடு நிறைய ஆண் பிள்ளைகளும் மட்டுமே இருக்கிறார்கள், வேறு எந்தச் செல்வமும் தன்னிடம் இல்லை என்று அவன் முறையிட்டான்.** அவன் லாபானிடம், "தேவன் உங்களை ஆசீர்வதித்து, உங்கள் செல்வத்தைப் பெருகப்பண்ணினார், ஆனால் எனக்கென்று எதுவும் இல்லையே!" என்றான். அதற்கு லாபான், "சரி, நாம் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்வோம்" என்றான்.



லாபானுடன் யாக்கோபு செய்த புத்திசாலித்தனமான ஒப்பந்தம்

எப்போதுமே ஒரு சிறந்த விபூகவாதியாகச் செயல்படும் யாக்கோபு, **மந்தையில் புள்ளியும் வரியும் கறுப்புமுள்ள செம்மறியாடுகளையும், வரியும் புள்ளியுமுள்ள வெள்ளாடுகளையும்** பிரித்துவிடுகிறேன். **அவைகள் இனி எனக்குச் சம்பளமாயிருக்கட்டும் என்று லாபானிடம் கேட்டான்.** அவைகளே தனக்குப் போதுமான சம்பளமாயிருக்கட்டும் என்றான். அதாவது ஒரே நிறமான ஆடுகள் லாபானுடையவை, கலப்பு நிறமுள்ள ஆடுகள் யாக்கோபுடையவை.

யாக்கோபு அவனிடம், "**இவைகளை மட்டும் எனக்குத் தாருங்கள், இவைகளே என் சம்பளமாக இருக்கட்டும்**" என்றான். லாபானுக்கு இது மிகவும் லாபகரமான ஓர் ஒப்பந்தமாகத் தோன்றியது. மந்தையின் மீதுள்ள அடையாளங்களே எந்த ஆடுகள் யாருடையது என்பதை எளிதாக தீர்மானிக்கும் என்பதால், லாபான் இதற்குச் சம்மதித்தான். **யாக்கோபு கலப்பு நிறமான ஆடுகளை எடுத்துக்கொண்டதால், ஒரே நிறமானவை மட்டுமே தங்களுக்குள் இணைந்து குட்டிகளைப் போடும், அவையெல்லாம் லாபானைச் சேரும்.** மற்றவை யாக்கோபுக்குச் சொந்தமாகும் என்பதே திட்டம்.

யாக்கோபு மிகவும் சுவாரஸ்யமான ஓர் ஒப்பந்தத்தைச் செய்திருந்தான். லாபான் ஆடுகளை இரண்டு மந்தைகளாகப் பிரித்தான். அந்த இரண்டு மந்தைகளுக்கும் இடையே மூன்று நாள் பிரயாண தூரம் இருக்கும்படி பிரித்து வைத்தான். **லாபானின் குமாரர்கள் ஒரு மந்தையையும், யாக்கோபு மற்ற மந்தையையும் மேய்த்தார்கள். அதன்பிறகு, தன் மந்தையில் புள்ளியும் வரியும் கறுப்புமான ஆடுகள் அதிகமாகப் பிறக்க வேண்டும் என்பதற்காக, தன் அறிவுக்கு எட்டிய ஒரு காரியத்தை யாக்கோபு செய்தான்; அதன்படி அவன் தன் மந்தையைப் பெருகப்பண்ணினான்.**

சுயசார்பு நடுவிலும் யாக்கோபு பெற்ற தேவ கிருபை

யாக்கோபு **மிருகங்களைக் குறித்த தன் சொந்த அறிவினாலோ அல்லது தேவன் அவனுக்குக் கொடுத்த ஞானத்தினாலோ இந்த சாமர்த்தியத்தைக் காட்டினான்.** அவனுக்கு மரபியல் விதிகள் புரியாமல் இருந்திருக்கலாம், ஆனாலும் எது பலன் தரும் என்று அவன் நினைத்தானோ அதைச் செய்தான், தேவன் அவனை ஆசீர்வதித்தார். **யாக்கோபு புத்திசாலியாக இருந்திருக்கலாம் அல்லது வெறும் யூகத்தின் அடிப்படையில் அதைச் செய்திருக்கலாம். ஆயினும் அவனுடைய திட்டத்தின் வெற்றிக்கு முழுக்காரணம் தேவன் மட்டுமே ஆவார்.** யாக்கோபு தந்திரங்கள் நிறைந்தவனாக இருந்தான். தேவன் அவனுடைய தந்திரங்களுக்காக அவனை ஆசீர்வதிக்கவில்லை, மாறாக தம்முடைய கிருபையினாலேயே அவனை ஆசீர்வதித்தார்.

தேவன் யாக்கோபை ஆசீர்வதித்து, **அவனை மிகவும் விருத்தியடையச் செய்தார்.** அவனுக்கு வேலைக்காரர்களும், வேலைக்காரிகளும், ஒட்டகங்களும், கழுதைகளும், திரளான ஆட்டு மந்தைகளும் உண்டாயிற்று. அந்தக் காலத்தில் ஒட்டகங்கள் மிகவும் அரிதானவை, அவை செல்வந்தர்களுக்கு மட்டுமே சொந்தமாக இருக்கும். ஆனால் யாக்கோபிடம் அவை ஏராளமாக இருந்தன. அவன் தன் சொந்த உழைப்பின் மூலமாகவே செல்வந்தனாக மாற தேவன் அனுமதித்தார். **ஒருவேளை யாக்கோபு தேவனுடைய வல்லமையுள்ள கரத்தின் கீழ் தன்னை முழுமையாக ஒப்புக்கொடுத்திருந்தால், தேவன் அவனுக்கு இன்னும் அதிகமாகக் கொடுத்திருப்பார்.** ஆனால் அவனுடைய வாழ்க்கையின் இந்தக் கட்டத்தில், யாக்கோபு தேவனைச் சார்ந்திருப்பதைக் காட்டிலும், தன்னையும் தன் புத்திசாலித்தனத்தையுமே அதிகமாகச் சார்ந்திருந்தான்.



"யாக்கோபு தன் புத்திசாலித்தனத்திலோ அல்லது வெறும் யூகத்தின் அடிப்படையிலோ அதைச் செய்திருக்கலாம். ஆயினும் அவனுடைய திட்டத்தின் வெற்றிக்கு முழுக்காரணம் தேவன் மட்டுமே ஆவார்."



தேவனுடைய மாறாத சத்தியங்கள்

ஆதியாகமம் 30-ம் அதிகாரத்திலிருந்து நமக்கான பாடங்கள்

மனித சுயநம்பிக்கைக்கு மத்தியிலும் தேவனுடைய கிருபை செயல்படுகிறது



யாக்கோபு தந்திரங்களும் சுயபுத்தியும் நிறைந்த ஒரு மனிதனாக இருந்தான். ஆட்டுமந்தைகள் குட்டிபோடும் விஷயத்தில் அவன் சாமர்த்தியமாகச் செயல்பட்டதைப் போல, ஒவ்வொரு சூழ்நிலையையும் தனக்குச் சாதகமாக மாற்றிக்கொள்ளவே அவன் தொடர்ந்து முயற்சி செய்தான். இருப்பினும், உண்மை என்னவென்றால், **தேவன் அவனுடைய தந்திரங்களுக்காக அவனை ஆசீர்வதிக்கவில்லை; மாறாக, அவனிடம் இத்தனை தந்திரங்கள் இருந்தபோதிலும் தம் கிருபையினாலேயே அவனை ஆசீர்வதித்தார். யாக்கோபு அடைந்த மாபெரும் வெற்றியும் செல்வமும் தேவனுடைய கிருபையினாலும், வாக்குத்தத்தங்களினாலும் மட்டுமே அவனுக்குக் கிடைத்தது** ***(எபேசியர் 2:8-9)***. ஒருவேளை, யாக்கோபு தன் சொந்தப் புத்தியைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாக, தேவனுடைய கரத்தின் கீழ் தன்னை முழுமையாகத் தாழ்த்தி ஒப்புக் கொடுத்திருந்தால், தேவன் அவனுக்கு இன்னும் எவ்வளவு அதிகமாகக் கொடுத்திருப்பார்!

சிந்தனைக்கான கேள்விகள்

கேள்வி 1

சுயபுத்தியைச் சார்ந்திருப்பதை குறித்த சிந்தனை: உங்கள் வாழ்க்கையில் தற்போது எந்தெந்தப் பகுதிகளில் தேவனுடைய பராமரிப்பைச் சார்ந்திருப்பதைவிட, உங்கள் சொந்தத் திட்டங்களையோ அல்லது தந்திரங்களையோ நீங்கள் அதிகமாகச் சார்ந்திருக்கிறீர்கள்? நீங்கள் அடையும் வெற்றிகளுக்குத் தேவனுடைய கிருபையே முழுக்காரணம் என்று நீங்கள் உண்மையாகவே நம்புகிறீர்களா? அல்லது, அந்த வெற்றிகளுக்கான பெருமையை நீங்களே எடுத்துக்கொள்கிறீர்களா?

கேள்வி 2

காணப்படாத உண்மைத்தன்மை: லேயாள் யாக்கோபினால் அற்பமாக எண்ணப்பட்டாள், ஆனால் தேவனால் மிகவும் கனப்படுத்தப்பட்டாள். உங்கள் வாழ்க்கையிலும் மற்றவர்கள் உங்களைக் கவனிக்கவில்லை என்றோ அல்லது உங்களை மதிக்கவில்லை என்றோ நீங்கள் உணரும் பகுதிகள் உண்டா? மனிதர்கள் உங்களைக் கவனிக்காவிட்டாலும், தேவன் உங்கள் உண்மைத்தன்மையைக் காண்கிறார், உங்களைக் கனப்படுத்துகிறார் என்று விசுவாசிக்க லேயாளின் கதை உங்களை எவ்வாறு உற்சாகப்படுத்துகிறது?

கேள்வி 3

தேவனுடைய கரத்தில் ஒப்புக்கொடுத்தல்: உங்கள் சொந்தப் பலத்தினால் பிரயாசப்படுவதை நிறுத்திவிட்டு, தேவனுடைய கரத்திற்குள் உங்களை முழுமையாக ஒப்புக்கொடுக்க வேண்டிய ஒரு குறிப்பிட்ட சூழ்நிலை இன்று உங்கள் வாழ்வில் உள்ளதா? அவருடைய கிருபையினால் கிடைக்கும் பராமரிப்பு என்பது நீங்கள் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் அதிகமாகவே இருக்கும் என்று நீங்கள் முழுமையாக விசுவாசிக்கிறீர்களா?


யாக்கோபு
லாபானைவிட்டுப்
புறப்படுதல்
ஆதியாகமம் 31:7-55

யாக்கோபு லாபானைவிட்டுப் புறப்படுதல்

ஜெபத்துடன் தொடங்குங்கள்
வேதபகுதி: ஆதியாகமம் 31:7 - 55
கேளுங்கள் THRU the BIBLE: ஆதியாகமம் 31:7-55

அன்புள்ள பரலோகப் பிதாவே,

எங்களைக் காக்கிறவரும், வாக்குமாறாத உண்மையுள்ள தேவனுமாய் இருக்கிறபடியால் உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் எதிர்ப்பையோ, அநியாயத்தையோ சந்திக்கிறபோது, நீர் எங்கள் உபத்திரவத்தைக் காண்கிறீர் என்றும், எங்களுக்காகக் கிரியை செய்வீர் என்றும் எங்களுக்கு நினைப்பூட்டியருளும். நீர் செயல்படும் வேளைக்காக காத்திருக்கவும், உமது சத்தத்திற்குக் கீழ்ப்படியவும், எங்கள் குறைகளையும் பாரங்களையும் உமது கைகளில் முழுமையாக ஒப்புவிக்கவும் எங்களுக்கு உதவி செய்தருளும்.

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் பிதாவே. ஆமென்.

தேவன் யாக்கோபைப் புறப்படச் சொல்லுகிறார்

ஆதியாகமம் 31:7 - 55

லாபானின் வீட்டாரின் செல்வாக்கு, வளர்ந்துவருகிற தன் குடும்பத்திற்கு நல்லதல்ல என்பதை யாக்கோபு இப்போது உணர்ந்துகொண்டான். **அவனுடைய குமாரர்கள் எதிர்காலத்தில் இஸ்ரவேலின் 12 கோத்திரங்களின் தலைவர்களாக வரப்போகிறவர்கள். ஆகையால், தேவன் அவர்களை அந்தச் சூழ்நிலையிலிருந்து விடுவித்து, அவர் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருந்த தேசத்திற்கு அவர்களைத் திரும்பக் கொண்டுவரக் கிரியை செய்கிறார்.**

இறுதியாக, புறப்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று தேவன் அவனிடம் சொல்லுகிறார். **"உன் பிதாக்களுடைய தேசத்துக்கும் உன் இனத்தாரிடத்துக்கும் திரும்பிப்போ; நான் உன்னோடேகூட இருப்பேன்"** *(ஆதியாகமம் 31:3)* என்றார். **வீட்டில் தன் திட்டங்களைக் குறித்துப் பேசினால் யாராவது கேட்டுவிடுவார்கள் என்று பயந்து,** யாக்கோபு ராகேலையும் லேயாளையும் வயல்வெளிக்கு வரவழைத்துப் பேசுகிறான்.

யாக்கோபின் மந்தைகளும் ஆஸ்தியும் லாபானுடையதைவிட அதிகமாகப் பெருகியதால், லாபானின் முகநாடி யாக்கோபுக்கு விரோதமாக மாறியிருந்தது. **தேவனே தங்களை ஆசீர்வதித்தார்** என்றும், அதனாலேயே லாபானும் அவனுடைய குமாரரும் தன்மேல் மிகவும் பொறாமை கொண்டார்கள் என்றும் யாக்கோபு ராகேலுக்கும் லேயாளுக்கும் விளக்கிக் கூறுகிறான்.

யாக்கோபு இருபது வருஷமாக லாபானிடத்தில் கடினமாக உழைத்தான் (ஆனாலும் லாபான் அவன் சம்பளத்தைப் பத்துமுறை மாற்றினான்!). ஆனால் அவன் கலங்கி, எங்கு செல்வதென்று அறியாமல் திகைத்துப்போய் நின்றபோது, தேவன் அவனுக்காக இடைப்பட்டார்.

பின்பு, தான் புறப்பட்டுப் போவதற்கான உண்மையான காரணத்தை யாக்கோபு பகிர்ந்து கொண்டான். **தேவன் ஒரு சொப்பனத்தில் தன்னிடம் பேசினார் என்றும், மந்தைகள் எப்படி பலுகிப் பெருகும்படி அவர் செய்தார் என்றும் தன் மனைவிகளுக்கு விளக்கிக் கூறினான்.** தேவன் அவனிடம், **"நானே இதைச் செய்தேன்! லாபான் உனக்குச் செய்கிறதையெல்லாம் கண்டேன், நான் உன்னை ஆசீர்வதித்தேன்"** என்று சொன்னார்.



தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களை நினைவுப்படுத்துகிறார்

“பெத்தேலிலே உனக்குத் தரிசனமான தேவன் நானே” என்று, யாக்கோபு தன் வீட்டை விட்டு ஓடிப்போனபோது, பெத்தேலில் தங்கியிருந்த அந்த முதல் இரவில் அவனுக்குத் தரிசனமானதை தேவன் அவனுக்கு நினைவுப்படுத்தினார். “**இப்பொழுது நீ எழுந்து, இந்தத் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, உன் இனத்தாரிருக்கிற தேசத்திற்குத் திரும்பிப்போ என்று சொன்னார்**” *(ஆதியாகமம் 31:13)*. அந்த நேரத்தில் அவனுடைய 11 குமாரர்களும் வளர்ந்து கொண்டிருந்தார்கள். விக்கிரகாராதனை நிறைந்த அந்த வீட்டிலிருந்து அவர்கள் ஏற்கனவே தவறான பழக்கங்களைக் கற்றுக்கொள்ளத் தொடங்கியிருந்ததால், யாக்கோபு ஆரானை விட்டுப் புறப்பட வேண்டும் என்று தேவன் விரும்பினார்.

தங்கள் தகப்பன் தங்களை நியாயமாக நடத்தவில்லை என்பதை உணர்ந்துகொண்ட ராகேலும் லேயாளும் **யாக்கோபின் முடிவுக்கு ஆதரவளித்தார்கள். மேலும் அவர்களுக்கு தந்தையிடமிருந்து எந்தச் சுதந்தரமும் கிடைக்கப்போவதில்லை**. யாக்கோபுக்கு எது சிறந்ததாகத் தோன்றுகிறதோ அதையே செய்யும்படியும், தாங்கள் அவனோடே நிற்பதாகவும் அவர்கள் கூறினார்கள். **ஆகையால் யாக்கோபு அவசரமாகப் புறப்பட ஆயத்தமானான்.** அவன் தன் சகோதரனுக்குத் தப்பி ஓடியபோது எப்படி வீட்டை விட்டுப் புறப்பட்டானோ, அதே விதமாக இதுவும் இருந்தது என்பதை நினைவில்கொள்ளுங்கள். இப்போது அவன் தன் மாமனாரை விட்டுச் செல்கிறான். ஆனால் இம்முறை அவன்மேல் எந்தத் தவறும் இல்லை.

குடும்பத்தாரின் வஞ்சனையும் தேவனின் குறுக்கீடும்

தன் தகப்பனுடைய சுரூபங்களை ராகேல் திருடிக்கொண்டு வந்ததை யாக்கோபு அறியாதிருந்தான். **விக்கிரகாராதனை உள்ள வீட்டில் வளர்ந்தபடியால், ராகேல் தன் தேவர்களைத் தன்னுடனே எடுத்துக்கொண்டுவர முடிவு செய்தாள்.**

லாபான் தன் ஆடுகளை மயிர் கத்தரிக்க வெகுதூரம் செல்லும்வரை காத்திருந்து, அவர்கள் யோர்தான் நதிக்குக் கிழக்கே உள்ள கீலேயாத் மலையை நோக்கி ரகசியமாகப் புறப்பட்டுப் போனார்கள். அவர்கள் வெகு விரைவாக ஒரு நீண்ட தூரத்தைக் கடந்தார்கள். **ஆனால் மூன்றாம் நாளில், யாக்கோபு ஓடிப்போனதை லாபான் அறிந்து, அவர்களைக் கண்டு பிடிக்கத் தீவிரமாகப் புறப்பட்டான்.** யாக்கோபைக் கொன்று, அவனுடைய ஆஸ்திகளையெல்லாம் மீட்டு, தன் இரண்டு மகள்களையும் அவர்கள் பிள்ளைகளையும் திரும்பக் கொண்டுவரும் அளவுக்கு லாபான் கோபமாயிருந்தான். **ஆனால் தேவன் குறுக்கிட்டு இடைப்பட்டார்.**

அன்று இரவில் தேவன் சொப்பனத்தில் லாபானோடே பேசி, **“நீ யாக்கோபோடே நன்மையே அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு” என்றார்.** அதுவரை மிகவும் கோபத்துடன் வந்துகொண்டிருந்த லாபான் இப்போது தன் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டான். லாபான் எவ்வளவு ராஜதந்திரமும் உள்ளவன்! **தன் குடும்பத்தாருக்கு ஒரு சிறந்த வழியனுப்புதல் விருந்தை அளிக்கவிடாமல் செய்ததற்காக யாக்கோபைக் குற்றவாளியாக்கப் பார்த்தான்.** ஒரு பெரிய கொண்டாட்டத்துடன் சந்தோஷமாக வழியனுப்பி வைத்திருக்க விரும்புவதாகக் கூறினான். ஆனால் அவன் வார்த்தைகள் உண்மையானவை அல்ல.

லாபான் தீங்கு செய்ய நினைத்ததையும், யாக்கோபின் தேவன் இரவில் அவனிடம் பேசி, தீங்கு செய்யாதபடி தடுத்ததையும் அவன் ஒப்புக்கொண்டான். அடுத்து, திருடப்பட்ட தேவர்களைக் குறித்துக் கேட்டான். **ராகேல் தேவர்களைத் திருடினாள் என்பது யாக்கோபுக்குத் தெரியாது, ஆகையால் அவன் லாபானை நம்பவில்லை.** லாபானும் யாக்கோபை நம்பவில்லை.

20 ஆண்டுகளாக அவர்கள் ஒருவரையொருவர் நன்றாக அறிந்திருந்தார்கள். லாபான் எல்லாருடைய கூடாரங்களிலும் தேடிப்பார்த்தான், ஆனால் தன் குடும்பச் சுரூபங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ராகேல் அவைகளை ஒட்டகத்தின் சேணத்திலே வைத்து, அதின்மேல் உட்கார்ந்திருந்தாள். லாபான் அவளுடைய கூடாரத்திற்கு வந்தபோது, தனக்கு உடல்நிலை சரியில்லை என்றும், எழுந்திருக்க முடியவில்லை என்றும் கூறினாள். ராகேலும் தன் தகப்பனைப் போலவே தந்திரமும் வஞ்சகமும் உள்ளவளாயிருந்தாள்.

ராகேல் தன் தகப்பனிடமிருந்து குடும்பச் சுரூபங்களை (தெராபீம்களை) எடுத்தது நாம் நினைப்பதைவிட மிகத் தீவிரமான ஒரு காரியமாகும். **குடும்பத்தின் தேவர்களை வைத்திருப்பவர்கள் அக்குடும்பத்தின் தலைவர்களாகக் கருதப்பட்டனர். அதன்படி லாபானுக்குச் சொந்தமான எல்லாவற்றிற்கும் யாக்கோபு சுதந்தரவாளியாக உரிமை கோர முடியும்!** இதனால்தான் லாபான் மிகவும் கலக்கமடைந்தான். யாக்கோபு தன் ஆஸ்தியைச் சுதந்தரிப்பதை அவன் விரும்பவில்லை. யாக்கோபுக்கு ஏற்கனவே அதிகப்படியான செல்வம் கிடைத்துவிட்டதாக அவன் உணர்ந்தான்.





“தேவனோ, லாபான் நினைத்தபடி தீங்குசெய்ய அவனுக்கு இடங்கொடுக்கவில்லை.”

தேவன் புகட்டும் பாடம்:

மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்

லாபானால் அந்தச் சூழ்நிலைகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை, அவை அங்கே எங்கும் இல்லை என்று யாக்கோபுக்கு உறுதியாகத் தெரிந்தது. எனவே யாக்கோபுக்கு இப்போது சிறிது தைரியம் வந்தது. **ஆகையால், தன்னைத் தொடர்ந்து வந்த தன் மாமனாரைக் கடிந்துகொள்ள அவன் விரும்பினான். "நான் செய்த தப்பிதம் என்ன? நான் செய்த துரோகம் என்ன?** நீர் இவ்வளவு கோபத்தோடு என்னைத் தொடர்ந்துவரக் காரணம் என்ன?" என்று அவன் வாதிட்டான்.

யாக்கோபு லாபானிடத்தில் இருபது ஆண்டுகளாக உண்மையாக ஊழியம் செய்து, அவனுடைய மந்தைகளை நன்றாகப் பராமரித்து வந்தபோதிலும், சில நேரங்களில் அவன் அநியாயமாகவும் கடுமையாகவும் நடத்தப்பட்டான். யாக்கோபு தந்திரமுள்ளவன், தான் செய்யும் பாவங்களுக்குத் தண்டனை வராது என்று அவன் நினைத்தான். ஆனால் தேவன் அவனை அப்படியே தப்பிப்போக விடவில்லை. ஏனென்றால், மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் என்பதை தேவன் அவனுக்கு மிகத் தெளிவாக உணர்த்தினார்.

யாக்கோபு தன் வீட்டில் இருந்தபோது தேவனுக்குக் கீழ்ப்படிய மறுத்ததால், அவன் லாபானுக்குக் கீழ்ப்படிய வேண்டியதாயிற்று. யாக்கோபு கண்ணியமான முறையில் ஒரு மனைவியைப் பெற வந்தான், ஆனால் அதற்குப் பதிலாக அவன் ஒரு வேலைக்காரனைப் போல நடத்தப்பட்டான். ஏனென்றால் தேவன் சேஷ்டபுத்திர சுதந்தரத்தை (மூத்தவனுக்கான உரிமையை) மதிக்கிறார்.

யாக்கோபு தன் தகப்பனை வஞ்சித்தான், ஆகையால் அவன் தன் மாமனாரால் வஞ்சிக்கப்பட்டான். இளையவனான யாக்கோபு, மூத்தவனைப் போலவே நடந்துகொண்டான். தான் இளையவளை (ராகேலை) மணக்கப் போகிறோம் என்று அவன் நினைத்திருக்க, அவனுக்கு மூத்தவள் (லேயாள்) கொடுக்கப்பட்டதை அவன் பிறகே அறிந்துகொண்டான். **அவன் சேஷ்டபுத்திர சுதந்தரத்தைப் பெற்றுக்கொண்ட விதத்தில் அவனது சுயநலமான குணம் வெளிப்பட்டது; வெள்ளாட்டுக்குட்டிகளின் தோலினால் தன் கைகளை மூடும்படி அவன் தன் தாய்க்கு இணங்கினான்.** யாக்கோபின் வாழ்க்கையின் பிற்பகுதியில், அவனுடைய சொந்தக் குமாரர்களே அவனை இதேபோன்று வஞ்சித்தார்கள். **அவர்கள் ஒரு வெள்ளாட்டுக்குட்டியை அடித்து, அதின் இரத்தத்திலே யோசேப்பின் பலவருண அங்கியைக் தோய்த்தார்கள்.** யாக்கோபு தகப்பனுக்குப் பிரியமான மகன் என்று சொல்லி, தன் தகப்பனை ஏமாற்றினான். **பின்னர் தனக்குப் பிரியமான மகனான யோசேப்பைக் குறித்து அவன் வஞ்சிக்கப்பட்டான்.** மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.

இறுதியாக, யோக்கோபு, தேவனே தன்னை நியாயந்தீர்க்கிறார் என்ற முடிவுக்கு வந்தான். எனவேதான், "என் தகப்பனுடைய தேவனும் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கு பயந்த தேவனுமாகிய அவர் என்னோடிராமற்போனால், **நீர் இப்பொழுது என்னை வெறுமையாய் அனுப்பிவிட்டிருப்பீர்;** தேவன் என் சிறுமையையும் என் கைப்பிரயாசத்தையும் கண்டு, நேற்று இராத்திரி உம்மைக் கடிந்துகொண்டார்" *(ஆதியாகமம் 31:42)* என்று கூறினான்.

யாக்கோபின் வாழ்க்கையைக் குறித்த முந்தைய பகுதியின் அடிப்படையில், "மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" என்ற வேதபோதனையை விளக்கும் ஒப்பீட்டு அட்டவணை:

யாக்கோபு விதைத்தது (யாக்கோபின் செயல்களும் பாவங்களும்)	யாக்கோபு அறுத்தது (யாக்கோபின் பின்விளைவுகள்)
தன் வீட்டில் **தேவனுக்குக் கீழ்ப்படிய மறுத்தான்.**	**தன் மாமனாகிய லாபானுக்குக் கீழ்ப்படியும்படி கட்டாயப்படுத்தப்பட்டு,** ஒரு வேலைக்காரனைப் போல அநியாயமாக நடத்தப்பட்டான்.
தன் மூத்த சகோதரனுடைய சுதந்தரத்தை எடுத்துக் கொண்டதன் மூலம், **சேஷ்ட புத்திரனுக்குரிய உரிமைகளை அசட்டைபண்ணினான்.**	தேவன் சேஷ்டபுத்திர உரிமையை மதிக்கிறபடியால், அவன் கண்ணியமாக ஒரு மனைவியைப் பெறுவதற்குப் பதிலாக **ஒரு வேலைக்காரனைப் போல ஆக்கப்பட்டான்.**
ஆசீர்வாதத்தைத் திருடிக்கொள்ளத் **தன் தகப்பனை வஞ்சித்தான்.**	**தன் மாமனாராகிய** லாபானால் **வஞ்சிக்கப்பட்டான்.**
இளையவனாயிருந்தும், **மூத்தவனைப் போல நடந்துகொண்டான்.**	இளையவளை (ராகேலை) மணக்கப் போகிறோம் என்று அவன் நினைத்திருக்க, **அவனுக்கு மூத்தவள் (லேயாள்) கொடுக்கப்பட்டாள்.**
தன் தகப்பனை வஞ்சிப்பதற்காகத் தன் கைகளில் **வெள்ளாட்டுக்குட்டிகளின் தோல்களைப் பயன்படுத்தினான்.**	அவனுடைய குமாரர்கள் அவனை வஞ்சிக்க, **ஒரு வெள்ளாட்டுக்குட்டியை அடித்து, அவனுக்குப் பிரியமான குமாரனுடைய (யோசேப்பின்) அங்கியைக் அதின் இரத்தத்திலே தோய்த்தார்கள்.**
தான் தகப்பனுக்குப் பிரியமான குமாரன் என்று சொல்லித் தன் தகப்பனை வஞ்சித்தான்.	**தனக்குப் பிரியமான குமாரனான** யோசேப்பைக் **குறித்துத் தன் சொந்தக் குமாரர்களாலேயே ஏமாற்றப்பட்டான்.**

முடிவில், யாக்கோபு தன் தந்திரத்தினால் தான் செய்யும் பாவத்திற்குத் தப்பிவிடலாம் என்று நினைத்தாலும், தேவன் அவனை அப்படியே தப்பிப்போக விடவில்லை. 20 ஆண்டுகள் உழைப்பிற்குப் பிறகு யாக்கோபு முடிவாக உணர்ந்துகொண்டது என்னவெனில், **தேவனே அவனுடைய உண்மையான நியாயாதிபதியாக இருந்து, அவனுடைய சிறுமையைக் கண்டு, அவனைக் காக்கும்படி இடைப்பட்டார் என்பதேயாகும்.**

இப்போது அவன் லாபானை விட்டுப் புறப்பட ஆயத்தமானான். அவர்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் விடைபெற்றுக்கொண்டு, தங்களுக்குள் ஓர் உடன்படிக்கை செய்தார்கள். யாக்கோபு ஒரு கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தினான்; ஒரு கற்குவியலும் சேர்க்கப்பட்டது, அங்கே ஒரு உடன்படிக்கை செய்யப்பட்டது. **தேவனே தங்களுக்குச் சாட்சி என்று இருவரும் ஒப்புக்கொண்டார்கள்.** "நாம் ஒருவரை ஒருவர் விட்டு மறைந்தபின், ... கர்த்தர் எனக்கும் உனக்கும் நடுநின்று கண்காணிக்கக்கடவர்" *(ஆதியாகமம் 31:49)* என்று அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். சுருக்கமாகச் சொன்னால், இனி ஒருவரிடமிருந்து ஒருவர் திருடுவதை நிறுத்திவிடப்போகும் இரண்டு மனிதர்களுக்கு இடையே செய்யப்பட்ட உடன்படிக்கை இதுவாகும். இதற்குப் பிறகு, அவர்கள் பிரிந்து செல்கிறார்கள். அந்தக் கற்குவியல் மிஸ்பாவிலே லாபானுக்கும் யாக்கோபுக்கும் இடையே ஒரு எல்லையாக நின்றது. இந்த எல்லையைத் தாண்டி ஒருவர் மற்றவருக்குத் தீமைசெய்யும்படி வருவதில்லை என்று இருவரும் வாக்குறுதி அளித்தனர்.

தேவனுடைய மாறாத சத்தியங்கள்

ஆதியாகமம் 31-ம் அதிகாரத்திலிருந்து நமக்கான பாடங்கள்

தேவனே நம்முடைய உன்னதமான பாதுகாவலரும் வாக்குமாறாதவருமாய் இருக்கிறார்

- யாக்கோபிடம் குறைகள் இருந்தாலும், லாபான் அவனை அநியாயமாக நடத்தினபடியால் (அவன் சம்பளத்தைப் பத்து முறை மாற்றினான்), **தேவன் உண்மையுள்ளவராக அவனுக்காக இடைப்பட்டார்** *(2 தெசலோனிக்கேயர் 3:3)*. லாபான் யாக்கோபுக்குத் தீங்குசெய்யும் நோக்கத்துடன் அவனைத் தொடர்ந்து வந்தபோது, தேவன் இரவில் சொப்பனத்தில் லாபானுக்குத் தரிசனமாகி அவனை எச்சரித்து, யாக்கோபைப் பாதுகாத்தார். **"பெத்தேலில் உனக்குத் தரிசனமான தேவன் நானே" என்று தேவன் யாக்கோபுக்கு நினைப்பூட்டினார். குழப்பமான அல்லது பகைமையான சூழ்நிலைகளில் தம்முடைய மக்கள் இருக்கும்போதும், அவர் அவர்களைப் பாதுகாக்கிறார் என்பதையும், அவர் தமது உடன்படிக்கையைக் காத்துக்கொள்ளுகிறார்** *(எபிரெயர் 13:5-6)* **என்பதையும் இதன்மூலம் நிரூபிக்கிறார்.**



- **புதிய ஏற்பாட்டுத் தொடர்பு:** *2 தெசலோனிக்கேயர் 3:3* - "கர்த்தரோ உண்மையுள்ளவர், அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்ளுவார்." *எபிரெயர் 13:5* - "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை."



சிந்தனைக்கான கேள்விகள்

கேள்வி 1

தேவனுடைய பாதுகாப்பைக் குறித்துத் தியானித்தல்: யாக்கோபு லாபானால் அநியாயமாக நடத்தப்பட்டதுபோல, நீங்கள் மற்றவர்களால் அநியாயமாக நடத்தப்படும் போது அல்லது கலக்கமடையும்போது, தேவன் உங்கள் உபத்திரவத்தைக் காண்கிறார் என்றும் அவர் தமது ஏற்றகாலத்தில் உங்களுக்காக இடைப்படுவார் என்றும் நம்புகிறீர்களா? அல்லது, காரியங்களை உங்கள் சொந்த முயற்சியினால் சாதித்துக்கொள்ள முயற்சிக்கிறீர்களா?

கேள்வி 2

மறைக்கப்பட்ட விக்கிரகங்கள்: ராகேல் தன் தகப்பனின் குடும்பச் சுரூபங்களை ரகசியமாகத் தன்னுடன் எடுத்துக்கொண்டாள். தேவனுடனான உங்கள் நடக்கையில், உங்கள் பழைய வாழ்க்கையிலிருந்து எந்தப் பழக்க வழக்கங்களையாவது, ஆசைகளையாவது அல்லது உலகத்தின் சுகபோகங்களையாவது "விக்கிரகங்களாக" நீங்கள் உங்களுக்குள் ரகசியமாகச் சுமந்துகொண்டு வருகிறீர்களா?

கேள்வி 3

விசுவாசத்தினால் பிழைத்தல்: யாக்கோபைப் போலத் தந்திரமாகச் செயல்படுவதை நிறுத்திவிட்டு, அதற்குப் பதிலாக தேவனுடைய வாக்குத்தத்தங்களிலும் அவருடைய வார்த்தையிலும் முழுமையாகச் சார்ந்துகொள்ள வேண்டிய ஏதாவது ஒரு சூழ்நிலை இப்போது உங்கள் வாழ்க்கையில் காணப்படுகிறதா?அது எது?

கேள்வி 4

ஆவியானவரோடு இணைந்து செயல்படுதல்: வெற்றிபெறுவதற்காக உலகத்தின் வழிகளைப் பின்பற்றாமல், தேவனுடைய வார்த்தையின்படி சரியான முடிவுகளை எடுக்க, இந்த வாரத்தில் பரிசுத்த ஆவியானவரின் உதவியை நீங்கள் எப்படிக் கேட்பீர்கள்?


திருப்புமுனை
ஆதியாகமம் 32:1-32

திருப்புமுனை

ஜெபத்துடன் தொடங்குங்கள்
வேதபகுதி: ஆதியாகமம் 32:1-32
கேளுங்கள் THRU the BIBLE: ஆதியாகமம் 32:1-32

அன்புள்ள பரலோகப் பிதாவே,

இந்தத் தியான வேளையில் எங்களுக்கு உதவி செய்யும்படி உம்மை அழைக்கிறோம். எங்கள் சொந்தப் பெலத்தினால் பிரயாசப்படுவதை விட்டுவிட்டு, முற்றிலுமாய் உமக்கு எங்களை ஒப்புக்கொடுக்கக் கிருபை செய்யும். உண்மையான வெற்றி போராடிப் பெறுவதில் அல்ல, தாழ்மையோடு எங்களை ஒப்புக்கொடுத்து உம்மைச் சார்ந்து கொள்வதிலேயே கிடைக்கிறது என்பதை எங்களுக்குப் போதித்தருளும்.

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் பிதாவே. ஆமென்.

தேவனோடனான யாக்கோபின் உறவில் ஒரு திருப்புமுனை

ஆதியாகமம் 32

யாக்கோபு தன் முதிர்வயதிலே தன் வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்தபோது, இந்தக் காலக்கட்டத்தையே **தன் வாழ்வின் உன்னதமான நிலையாக, அதாவது தேவனுடனான தன் உறவில் ஏற்பட்ட திருப்புமுனையாக நினைவுகூர்ந்தான்.** அதுவரைக்கும், யாக்கோபு தேவனுடைய மனுஷனுக்கு ஏற்றவாறு வாழவில்லை. அவன் தேவனைப் பின்பற்றுகிறவன் என்று உலகத்தார் கண்டுகொள்ள முடியாதபடிக்கு, அவன் அவ்வளவு பலவீனமான சாட்சியாகவே இருந்தான்.

யாக்கோபின் இருதயத்தைத் தம்பக்கம் திருப்புவதற்காகத் தேவன் அவனைச் சிட்சிக்க வேண்டியதாயிருந்தது *(எபிரெயர் 12:6)*. இதைக் கற்றுக்கொள்ள யாக்கோபுக்கு இருபது ஆண்டுகள் சென்றன. அதற்காக அவனும் மெய்யாகவே மிகவும் பிரயாசப்பட்டான்.

இப்பொழுதோ யாக்கோபு தேவனுடைய பிரதிநிதியாக இருக்கப்போகிறான். ஆகையால், **அவன் கனிகொடுக்கும்படியாகவும், தமக்கு மெய்யான ஊழியஞ்செய்து சாட்சியாக விளங்கும்படியாகவும்,** தேவன் அவனோடு நேரடியாக இடைபடத் தொடங்கினார்.

தன் சகோதரன் ஏசாவைச் சந்திக்கப் பயந்த யாக்கோபு

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குத் திரும்பிச் செல்லும் வழியில், **யாக்கோபு தேவதூதர்களைச் சந்தித்தான்.** பெத்தேலிலே தான் முன்னரே அவர்களைக் கண்டிருந்ததினால், அவர்கள் யார் என்பதை அவன் நிச்சயமாகவே அறிந்திருப்பான். தன் சொந்த தேசத்தின் எல்லையைக் கடக்கும்போது, தன் சகோதரனான ஏசாவைச் சீக்கிரத்தில் சந்திக்கப் போகிறோம் என்பதை அவன் அறிந்திருந்தான்.

இருபது ஆண்டுகளுக்கு முன் தன் சகோதரன் ஏசாவைக் கடைசியாகப் பார்த்ததை அவன் நினைவுகூர்ந்தான்; அப்பொழுது ஏசா அவன்மேல் மிகுந்த கோபமாயிருந்தான். ஆகையால், இந்த முறை யாக்கோபு தனக்கு முன்னே ஸ்தானாபதிகளை அனுப்பி: **"நீங்கள் என் சகோதரனான ஏசாவினிடத்திற்குப் போகும்போது, அவனை 'என் ஆண்டவனாகிய ஏசா' என்றும், என்னை 'உமது அடியானாகிய யாக்கோபு' என்றும் சொல்லுங்கள்"** என்று கட்டளையிட்டான். யாக்கோபின் சிந்தை தெளிவாகவே மாறியிருந்தது. **அவன் தந்திரமாகச் சுதந்தர உரிமையைப் பெற்றுக்கொண்டு, ஏசாவின் ஆசீர்வாதத்தைத் திருடியிருந்தான்.** யாக்கோபு ஓர் ஏமாற்றுக்காரனாக இருந்தான்; ஆனால் இப்பொழுது அவனுடைய வார்த்தைகள் மாறியிருந்தன. லாபானிடமிருந்து அவன் சில கடினமான பாடங்களைக் கற்றுக்கொண்டிருக்கலாம்.

அந்த ஸ்தானாபதிகள் யாக்கோபினிடத்திற்குத் திரும்பிவந்து: **"நாங்கள் உம்முடைய சகோதரனாகிய ஏசாவினிடத்துக்குப் போய்வந்தோம்; அவரும் நானூறுபேரோடே உம்மை எதிர்கொள்ள வருகிறார் என்றார்கள்"** என்றார்கள்.

ஏசாவின் நோக்கம் என்னவென்று அறியாதிருந்தபடியால், **யாக்கோபு பயந்து மிகவும் வியாகுலப்பட்டான்.** "அவன் என்மேல் கோபமாகவோ, கசப்பாகவோ அல்லது பகையாகவோ இருந்தானா?" என்று அவன் தன் வேலைக்காரர்களைக் கேட்டிருக்கலாம். ஒருவேளை அவர்கள், "இல்லை, நீர் வருவதைக் குறித்து அவர் சந்தோஷமாகவே காணப்பட்டார்" என்று சொல்லியிருந்தாலும், **பழிவாங்குவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்ததென்று ஏசா சந்தோஷப்படுகிறான்** என்று யாக்கோபு தன் மனதிற்குள் நினைத்திருக்கலாம். யாக்கோபு மிகவும் கலங்கினான். **தனக்கு ஆபத்து நேரிடும் என்று அவன் நினைத்ததினால், தன் சகோதரன் ஒரு கூட்டத்தை முறியடித்தாலும் மற்றக் கூட்டம் தப்பிக் கொள்ளும்படியாக, தன்னிடத்திலிருந்த ஜனங்களை இரண்டு பரிவாரமாகப் பிரித்தான்.** பின்பு, அவன் முற்றிலும் மாறுபட்ட ஒரு சிந்தனையின் அடையாளங்களைக் காண்பித்தான்.

"நாம் ஜெபத்திலே நம்முடைய பாரங்களைக் கர்த்தரிடத்தில் கொண்டுபோகிறோம். ஆனால், நாம் ஜெபித்து முடித்த உடனே, ஒவ்வொரு பாரத்தையும் திரும்பவும் நம்முடைய முதுகின்மேல் வைத்துக்கொண்டு, அவைகளோடேகூடப் புறப்பட்டுப் போகிறோம்."

யாக்கோபு உதவிக்கு தேவனைத் தேடுதல்

தன் வியாகுலத்திலே யாக்கோபு தேவனிடத்தில் உதவி கேட்கிறான்

பின்பு யாக்கோபு: **"என் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும், என் தகப்பனாகிய ஈசாக்கின் தேவனுமாய் இருக்கிறவரே: உன் தேசத்துக்கும் உன் இனத்தாரிடத்துக்கும் திரும்பிப்போ, உனக்கு நன்மை செய்வேன் என்று என்னுடனே சொல்லியிருக்கிற கர்த்தாவே, அடியேனுக்கு தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் எல்லா சத்தியத்துக்கும் நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல, நான் கோலும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்துபோனேன்; இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன். என் சகோதரனாகிய ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும், அவன் வந்து என்னையும் பிள்ளைகளையும் தாய்மார்களையும் முறிய அடிப்பான் என்று அவனுக்கு நான் பயந்திருக்கிறேன். "தேவரீரோ: நான் உனக்கு மெய்யாகவே நன்மைசெய்து, உன் சந்ததியை எண்ணிமுடியாத கடற்கரை மணலைப்போல மிகவும் பெருகப்பண்ணுவேன் என்று சொன்னீரே"** என்றான் *(ஆதியாகமம் 32:9-12)*.

தேவன் தன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும், தன் தகப்பனாகிய ஈசாக்கின் தேவனுமாயிருக்கிறபடியால், யாக்கோபு அவரை நோக்கிக் கூப்பிட்டான். **"தேவரீர் காண்பித்த எல்லாத் தயவுக்கும் நான் எவ்வளவும் பாத்திரன் அல்ல"** என்று அவன் தன் வாழ்வில் முதல்முறையாகச் சொல்கிறான்.

தேவனுடைய பார்வையிலே தான் ஒரு பாவி என்பதை அவன் முதன்முறையாக **அறிக்கையிட்டான்.** எந்தவொரு மனிதனும் **இவ்விதமாகத் தேவனை நோக்கித் திரும்ப ஆரம்பிக்கும்போது, தேவன் அவர்களோடு இடைபடுவார்.**

ஏசாவைச் சாந்தப்படுத்துவதற்கான யாக்கோபின் திட்டங்கள்

யாக்கோபுக்கு அந்த இரவு மிகவும் கடினமானதாக இருந்தது. ஏசாவை எப்படிச் சாந்தப்படுத்துவது என்று அவன் திட்டம்பண்ணினான். **வெள்ளாடுகள், செம்மறியாடுகள், ஒட்டகங்கள், மாடுகள், கழுதைகள் என மிருகஜீவன்களைக் கொண்ட மிகவும் தாராளமான ஒரு காணிக்கையை** மூன்று மந்தைகளாகப் பிரித்து அனுப்பத் திட்டமிட்டான். ஏசா யாக்கோபை நோக்கி வரும்போது, அவன் முதல் மந்தையைச் சந்திப்பான்; அப்பொழுது அந்த வேலைக்காரன், **"உம்முடைய சகோதரனாகிய யாக்கோபினிடத்திலிருந்து உமக்கு ஒரு காணிக்கையைக் கொண்டுவருகிறோம்"** என்று சொல்வான். பின்பு ஏசா இன்னும் சற்று தூரம் செல்லும்போது, இரண்டாவது மந்தையையும், அதன்பின்பு மூன்றாவது மந்தையையும் சந்திப்பான். **இவ்விதமாகச் செய்வதின்மூலம், ஏசாவின் பகைமை தணியும் என்று யாக்கோபு நம்பினான்.**

யாக்கோபு தனக்கு உண்டான எல்லாவற்றையும் தன் குடும்பத்தாரையும் யாப்போக்கு ஆற்றைக் கடக்கப்பண்ணினான். ஆனால், தன் சகோதரனான ஏசா வந்து தன்னைக் கொன்றாலும் தன் குடும்பத்தாராவது தப்பிக் கொள்ளும்படிக்கு, **அவன் மாத்திரம் அக்கரையிலே தனித்துத் தங்கியிருந்தான்.**

யாக்கோபு ஜெபம்பண்ணினபோது, "உன் தேசத்துக்குத் திரும்பிப்போ, நான் உன்னைக் காப்பாற்றுவேன் என்று தேவரீர் என்னோடே சொன்னீரே" என்று கர்த்தருக்கு நினைப்பூட்டினான். ஆனால் அவன் தேவனை விசுவாசித்தானா? இல்லை. அவன் செய்த இந்த ஏற்பாடுகள் யாவும், அவன் தேவன்மேல் எவ்வளவும் நம்பிக்கையாயிருக்கவில்லை என்பதையே வெளிப்படுத்தின. நாமும் அநேக வேளைகளில் இதே நிலையில்தான் இருக்கிறோம். நாம் ஜெபத்திலே நம்முடைய பாரங்களைக் கர்த்தரிடத்தில் கொண்டு போகிறோம். ஆனால், நாம் ஜெபித்து முடித்தவுடனே, ஒவ்வொரு பாரத்தையும் திரும்பவும் நம்முடைய முதுகின்மேல் வைத்துக்கொண்டு, அவைகளோடேகூடப் புறப்பட்டுப் போகிறோம். நாம் மெய்யாகவே அவரை விசுவாசிப்பதில்லையல்லவா? நாம் அவரை நம்பவேண்டிய விதமாய் மெய்யாகவே நம்புவதில்லை.



யாக்கோபின் தவறான தெரிந்தெடுப்புகளின் விளைவுகள்

யாக்கோபு தனது வாழ்க்கையின் தவறான தெரிந்தெடுப்புகளைக் குறித்து உணர்வடைந்தான்; அது அவனைப் பயத்தினாலும் சந்தேகத்தினாலும் நிரப்பியது. அவன் ஏசாவுக்குத் தீங்கு செய்திருந்தான். **சேஷ்டபுத்திரபாக உரிமையையோ ஆசீர்வாதத்தையோ அவன் பெற்றுக்கொண்ட விதமாகப் பெற்றுக்கொள்ளும்படி தேவன் அவனுக்கு ஒருபோதும் சொல்லவில்லை.** தேவனே அவைகளை அவனுக்குப் பெற்றுத் தந்திருப்பார். ஆகையால் இப்பொழுது, **யாக்கோபு தனித்துக் காத்திருந்தான்.**

ஆனால், யாக்கோபு தனிமையாக இருக்கவில்லை. அவனுக்குப் பின்னே லாபானும், அவனுக்கு முன்னே அவனுடைய சகோதரனான ஏசாவும் இருந்தனர். **இவர்கள் இருவரிலும் ஒருவருக்கும் யாக்கோபு ஈடானவனல்ல.** அவன் இப்பொழுது **ஓர் இக்கட்டில் மாட்டிக்கொண்டான்**, எந்தப் பக்கம் திரும்புவது என்று அவனுக்குத் தெரியவில்லை. அந்த ராத்திரியிலே அவன் தனித்திருக்க விரும்பியபடியால் தனித்திருந்தானே தவிர, அவன் சண்டையிடும்படி எவரையும் தேடவில்லை.

யாக்கோபோடே போராடினவர் யார்?

ஒரு புருஷன் இராமுழுவதும் யாக்கோபோடே போராடினார் என்று நாம் வாசிக்கிறோம். அவன் அவ்வளவு எளிதாக விட்டுக்கொடுக்கப் போகிறவனல்ல. அந்த ராத்திரியிலே யாக்கோபோடே போராடினவர் யார்? **அவர் மனுஷ உருவெடுப்பதற்கு முன்பாக வெளிப்பட்ட கிறிஸ்துவேயன்றி வேறொருவருமல்ல** (இந்த ராத்திரியைக் குறித்த கூடுதல் விவரங்களுக்கு ஓசியா 12:1-5 வசனங்களையும் காண்க).

அந்த ராத்திரியிலே நடந்தது இதுவே: "யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான்; அப்பொழுது **ஒரு புருஷன் பொழுது விடியுமளவும் அவனுடனே போராடி,** அவனை மேற்கொள்ளாததைக் கண்டு, **அவனுடைய தொடைச்சந்தைத் தொட்டார்; அதினால் அவருடனே போராடுகையில் யாக்கோபின் தொடைச்சந்து சுளுக்கிற்று".** அவர்: **நான் போகட்டும், பொழுது விடிகிறது** என்றார். அதற்கு அவன்: "நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன் என்றான்". அவர்: **"உன் பேர் என்ன"** என்று கேட்டார்; யாக்கோபு என்றான். அப்பொழுது அவர்: **"உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும்; தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே என்றார்"** *(ஆதியாகமம் 32:24-28).*

யாக்கோபு போராடவில்லை. அவன் அந்தப் புருஷனை இறுகப் பற்றிக்கொண்டிருந்தான். **தேவனோடு போராடுவதினாலும் அவரை எதிர்ப்பதினாலும் எதையும் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை யாக்கோபு கண்டுகொண்டான். அவருக்கு முன்பாக நம்மை ஒப்புக் கொடுத்து, அவரைப் பற்றிக்கொள்வதே அவரிடத்திலிருந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளும் ஒரே வழியாகும்.** ஆபிரகாம் அதைக் கற்றுக்கொண்டிருந்தான், அதனால்தான் அவன் தேவனுக்கு "ஆமென்" என்றான். **அவன் தேவனை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்.** ஆபிரகாம் தன் சுயபலத்தின் முடிவுக்கு வந்து, தேவனைப் பற்றிக்கொண்டான்.

நாம் தேவனை நம்பவேண்டிய சூழ்நிலையில் இருக்கும்போது, நாம் என்ன செய்ய வேண்டும் என்பதற்கு இது ஒரு பாடமாக இருக்கிறது. நீங்கள் அவரை உறுதியாகப் பற்றிக்கொள்ள மனதாயிருக்கும்போது, அவர் உங்களுக்கு உதவிசெய்ய அங்கே ஆயத்தமாயிருக்கிறார். தேவனுடைய கரம் அவனை முடமாக்கும் வரைக்கும், யாக்கோபு அவரை எதிர்த்து நின்றான். பின்பு, அவர் யார் என்பதை இறுதியாக உணர்ந்து கொண்ட யாக்கோபு, **அவர் தன்னை ஆசீர்வதிக்கும்வரைக்கும் அவரை விடாமல் பற்றிக் கொண்டான். இதுமுதல் யாக்கோபினிடத்தில் ஒரு மாற்றத்தைக் காண்கிறோம். அவனுடைய இருதயத்தில் ஏற்பட்ட இந்த மாற்றத்தை தெரியம்படுத்தும்படி தேவன், அவனுடைய பேரை இஸ்ரவேல் என்று மாற்றினார். அவன் ஒரு புதிய மனுஷனானான்.**



தேவனுடைய மாறாத சத்தியங்கள்

ஆதியாகமம் 32-ம் அதிகாரத்திலிருந்து நமக்கான பாடங்கள்

1 நாம் பாத்திரவான்கள் அல்ல என்பதை அறிக்கையிடும்போது தேவன் நம்மோடு இடைபடுகிறார்.

- **சத்தியம்:** தேவன் தனக்குக் காண்பித்த "எல்லாத் தயவுக்கும் நான் எவ்வளவும் பாத்திரன் அல்ல" என்று யாக்கோபு தன் வாழ்வில் முதல்முறையாக அறிக்கையிடுகிறான். எந்தவொரு மனுஷனும் தேவனுடைய பார்வையிலே தான் ஒரு பாவி என்ற உணர்வோடு தேவனை நோக்கித் திரும்ப ஆரம்பிக்கும்போது, தேவன் அவனோடு இடைபடுவார்.
- **புதிய ஏற்பாட்டுத் தொடர்பு:** *லூக்கா 18:13-14* ஓர் ஆயக்காரனைப் பற்றிக் கூறுகிறது; அவன் தன் மார்பிலடித்துக்கொண்டு, "தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்றான்; அவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான். தேவன் சுயபலத்தை நம்புகிறவர்களிடத்திலல்ல, தாழ்மையுள்ளவர்களிடத்திலேயே சேருகிறார்.

2 ஆவிக்குரிய வெற்றி போராடுவதினால் அல்ல ஒப்புக்கொடுப்பதினாலேயே வருகிறது.

- **சத்தியம்:** யாக்கோபு இராமுழுவதும் போராடினான். ஆயினும் தேவன் அவனுடைய தொடையின் சந்தைத் தொட்டு அவனை முடமாக்கும் வரைக்கும் அவனால் வெற்றிபெற முடியவில்லை. பின்னர் யாக்கோபு போராடுவதை நிறுத்திவிட்டு அவரைப் பற்றிக்கொள்ள ஆரம்பித்தான். தேவனை எதிர்ப்பதினால் அவரிடத்தில் எதையும் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை அவன் கற்றுக்கொண்டான் - அவரிடத்தில் தன்னை ஒப்புவித்து, அவரைப் பற்றிக்கொள்வதே முன்செல்லும் ஒரே வழியாகும்.
- **புதிய ஏற்பாட்டுத் தொடர்பு:** *யாக்கோபு 4:7-8:* "ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; ... தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்."

3 மெய்யான விசுவாசம் பாரத்தைத் தேவனிடம் விட்டுவிடுகிறது

- **சத்தியம்:** யாக்கோபு பாதுகாப்பிற்காக ஜெபித்து, தேவனுடைய வாக்குத்தத்தங்களை அவருக்கு நினைப்பூட்டினான். ஆனால், பயத்தின் காரணமாக அவன் செய்த முன்னேற்பாடுகள், அவன் மெய்யாகவே தேவனை நம்பவில்லை என்பதையே வெளிப்படுத்தின. நாமும் அநேக வேளைகளில் இதையே செய்கிறோம். நாம் ஜெபிக்கிறோம், ஜெபித்து முடித்தவுடன், நம்முடைய பாரத்தைத் திரும்பவும் நாமே எடுத்துச் சுமந்து கொண்டு போகிறோம்.
- **புதிய ஏற்பாட்டுத் தொடர்பு:** *1 பேதுரு 5:7:* "அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்." *பிலிப்பியர் 4:6-7:* "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப் படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ... தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்."

சிந்தனைக்கான கேள்விகள்

கேள்வி 1

பாத்திரவான் அல்ல என்பதை அறிக்கையிடுதல்: நீங்கள் ஜெபத்திலே தேவனிடத்தில் சேரும்போது, உங்களுடைய சொந்தப் பிரயாசங்களினிமித்தம், அவர் உதவி செய்வதற்கு நீங்கள் தகுதியானவர்கள் என்று எண்ணுகிறீர்களா? அல்லது, அவருடைய இரக்கங்களுக்கு நீங்கள் எவ்வளவும் பாத்திரவான்கள் அல்ல என்பதை உணர்ந்து தாழ்மையான இருதயத்தோடே அவரிடத்தில் வருகிறீர்களா?

கேள்வி 2

ஒப்புக்கொடுத்தலும் போராடுதலும்: யாக்கோபு போராடுவதை நிறுத்திவிட்டு, தேவனையே பற்றிக்கொள்ளும்படிக்கு அவனுடைய தொடைச்சந்து தொடப்பட்டது. உங்கள் சுயபலத்தைச் சார்ந்திருப்பதை நீங்கள் விட்டுவிடும்படிக்கு, உங்கள் வாழ்க்கையில் எவ்விதமான பலவீனத்தை தேவன் உங்களில் பயன்படுத்தக்கூடும்?

கேள்வி 3

பாரத்தை விட்டுவிடுதல்: ஏதோ ஒரு கவலையைக் குறித்து நீங்கள் ஜெபித்து முடித்தபின்பு, எவ்வளவு சீக்கிரமாக அது மீண்டும் உங்கள் நினைவுக்கு வருகிறது? அது உடனடியாகத் திரும்பிவருமானால், நீங்கள் மெய்யாகவே உங்கள் பாரத்தைத் தேவன்மேல் "வைத்துவிட்டீர்களா" அல்லது அதைக் குறித்து அவரிடத்தில் விவரித்துச் சொன்னதோடு மாத்திரம் நிறுத்திவிட்டீர்களா? எனச் சிந்தியுங்கள்.

கேள்வி 4

உங்களுடைய சுயபலத்தினால் நீங்கள் "சரிசெய்ய" முயற்சிக்கிற தற்போதைய ஒரு போராட்டத்தை அல்லது பிரச்சனையைக் குறித்துச் சிந்தித்துப் பாருங்கள். அப்படிப் போராடுவதை விட்டுவிட்டு, அதற்குப் பதிலாக, "தேவனே, இதன் மூலமாக நீர் எனக்கு என்ன கற்றுக்கொடுக்கச் சித்தமாயிருக்கிறீர்?" என்று கேட்டால் அது எப்படி இருக்கும்?

கேள்வி 5

ஜெபித்தபின்பு ஒரு குறிப்பிட்ட கவலை மீண்டும் வந்தால், அந்தப் பிரச்சனையை மீண்டும் ஆராய்ந்து கொண்டிருப்பதற்குப் பதிலாக, தேவனுடைய வாக்குத்தத்தத்திற்காக அவரைத் துதிப்பதற்கான ஒரு நினைப்பூட்டுதலாக அதைக் கருதிப் பழகிக்கொள்ளுங்கள்.


யாக்கோபு ஏசாவைச்
சந்தித்தல்
ஆதியாகமம் 33:1-20

யாக்கோபு ஏசாவைச் சந்தித்தல்

ஜெபத்துடன் தொடங்குங்கள்
வேதபகுதி: ஆதியாகமம் 33:1-20
கேளுங்கள் THRU the BIBLE: ஆதியாகமம் 33:1-20

அன்புள்ள பரலோகப் பிதாவே,

எங்களில் நீர் நடப்பிக்கும் மறுரூபமாக்கும் கிரியையானது உண்மையான மாற்றத்தை உண்டாக்குவதற்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் வாங்குகிறவர்களாய் இராமல் கொடுக்கிறவர்களாகவும், தந்திரமாய் நடக்கிறவர்களாயிராமல் உம்மை நம்புகிறவர்களாகவும் மாறவும் எங்களுக்கு உதவி செய்யும். எந்தெந்த உறவுகளில் ஒப்புரவாகுதல் தேவையாயிருக்கிறதோ, அங்கே எங்கள் இருதயங்களையும் அவர்கள் இருதயங்களையும் இளகப்பண்ணி, உம்முடைய கிருபையினால் ஒரு புதிய தொடக்கத்தை உண்டாகப் பண்ணியருளும்.

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் பிதாவே. ஆமென்.

சகோதரர்கள் மீண்டும் சந்தித்தல்

ஆதியாகமம் 33:1-20

காலைப் பொழுதில், யாக்கோபு தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது, ஏசா 400 பேருடன் வருகிறதைக் கண்டான். அவன் ஒரு நண்பனாக வருகிறானா அல்லது பகைவனாக வருகிறானா என்று யாக்கோபுக்குத் தெரியவில்லை.

ஆனால் அவர்கள் நெருங்கி வந்தபோது, **ஏசா அவனை எதிர்கொண்டு ஓடிவந்து, அவனைக் கட்டிக்கொண்டு முத்தமிட்டான்;** இருவரும் அழுதார்கள். எப்படியென்றாலும் அவர்கள் இரட்டைச் சகோதரர்கள் அல்லவா! **தேவன் நிச்சயம் ஏசாவின் இருதயத்தைத் தொட்டிருக்க வேண்டும்;** ஏனென்றால், இதற்குமுன்பு நாம் அவனைப் பார்த்தபோது, யாக்கோபைக் கொன்றுபோடுவேன் என்று பழிவாங்கும் நோக்கத்தோடு அவன் சபதம் செய்திருந்தான்.

பின்பு யாக்கோபு தன் குடும்பத்தாரை தன் சகோதரனுக்கு அறிமுகப்படுத்தினான். அப்பொழுது யாக்கோபு தனக்கு முன்னாக அனுப்பியிருந்த ஆடுமாடுகளின் மந்தைகளைக் குறித்து ஏசா விசாரித்தான். அதற்கு யாக்கோபு: **"ஏசாவே, அவையெல்லாம் உமக்காகவே!"** என்றான். அதற்கு ஏசா ஒருவேளை சிரித்துக்கொண்டே, **"என் சகோதனே, எனக்குப் போதுமானது இருக்கிறது; உன்னுடையது உன்னிடத்திலேயே இருக்கட்டும்"** என்று பதிலளித்தான்.

"அதற்கு யாக்கோபு: **அப்படி அல்ல, உம்முடைய கண்களில் எனக்குத் தயவு கிடைத்ததே யானால், என் வெகுமதியை என் கையிலிருந்து ஏற்றுக்கொள்ளும்; நீர் என்மேல் பிரியமானீர், நான் உம்முடைய முகத்தைக் கண்டது தேவனுடைய முகத்தைக் கண்டதுபோல இருக்கிறது. தேவன் எனக்கு அநுக்கிரகம் செய்திருக்கிறார்; வேண்டியதெல்லாம் எனக்கு உண்டு; ஆகையால் உமக்குக் கொண்டுவரப்பட்ட என் காணிக்கையை ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லி, அவனை வருந்திக் கேட்டுக்கொண்டான்;** அப்பொழுது அவன் அதை ஏற்றுக் கொண்டான்" *(ஆதியாகமம் 33:10-11).*

"இதுவரைக்கும், சகோதரர்கள் இருவரும் மற்றவரிடமிருந்து எதையாவது பெற்றுக்கொள்ளவே முயற்சி செய்தார்கள். குறிப்பாக யாக்கோபினிடத்தில் இக்காரியத்தை அதிகமாகக் காண்கிறோம். முன்னர், அவன் ஒரு குவளை கூழைக் கொடுத்து சேஷ்டபுத்திரபாகத்தை வாங்கிக்கொண்டான். ஆனால் இப்பொழுதோ, எந்தப் பலனையும் எதிர்பாராமல் தன் ஆடுமாடுகளின் மந்தைகளைத் தன் சகோதரனுக்கு இலவசமாகக் கொடுக்க அவன் மனப்பூர்வமாய் முன்வருகிறான்!"



யாக்கோபின் மறுரூபமாக்கப்பட்ட வாழ்க்கை

என்னே ஒரு மாற்றம்! **இதுவரைக்கும், சகோதரர்கள் இருவரும் மற்றவரிடமிருந்து எதையாவது பெற்றுக்கொள்ளவே முயற்சி செய்தார்கள். யாக்கோபினிடத்தில் இந்தக் காரியம் அதிகமாக இருந்ததைக் காண்கிறோம்.** முன்னர் **அவன் ஒரு குவளைக் கூழைக் கொடுத்து சேஷ்டபுத்திர பாகத்தை வாங்கிக்கொண்டான்; ஆனால் இப்பொழுதோ, எந்தப் பலனையும் எதிர்பாராமல் தன் ஆடுமாடுகளின் மந்தைகளைத் தன் சகோதரனுக்கு இலவசமாகக் கொடுக்க அவன் மனப்பூர்வமாய் முன்வந்தான்!** தன் சகோதரன் தனது காணிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினான். **யாக்கோபின் வாழ்வில் ஓர் ஆழமான மாற்றம் நிகழ்ந்திருந்தது.**

பின்பு ஏசா, தங்களோடு பயணிக்கவும், அவர்களுக்கு வழிகாட்டவும், அவர்களைப் பாதுகாக்கவும் யாக்கோபை அழைத்தான். ஆனால் யாக்கோபு, தன் பிள்ளைகளையும், தன் மந்தைகளிலுள்ள கறவையாடுகளையும் கறவைமாடுகளையும் குறித்துக் கவனமாயிருந்தான். அவர்களால் வேகமாகப் பயணிக்க முடியாது. **"என் சகோதரனே, உமது ஆட்களின் வேகத்திற்கு ஈடாக எங்களால் வர முடியாது. நீர் முன்னே செல்லுங்கள்"** என்றான். ஆகையால் யாக்கோபின் குடும்பத்தாருக்கு உதவ ஏசா சில வேலையாட்களை விட்டுவிட்டு, **ஏதோம் தேசமாகிய** சேயீருக்கு - தெற்கு கானானுக்கு- முன்னே சென்றான். தங்கள் தகப்பனுடைய மரணத்திற்குப் பின்பு, அவன் சேயீர் மலைக்குக் குடிபெயர்ந்தான்; **தேவன் சேயீர் மலையை ஏசாவுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தார்** (உபாகமம் 2:5 -ஐப் பார்க்கவும்).

யாக்கோபின் புதிய வாழ்க்கை

யாக்கோபினிடத்தில் ஒரு பெரிய மாற்றம் உண்டாயிருந்தது. அவனுடைய தந்திரமான திட்டங்களெல்லாம் ஒன்றுமில்லாமல் போனது. யாக்கோபுக்குத் தீங்கு செய்யாதபடி தேவன் லாபானை எச்சரித்திருந்தார்; அதேபோல யாக்கோபோடு ஒப்புரவாகும்படி ஏசாவின் இருதயத்தையும் தேவன் ஆயத்தப்படுத்தியிருந்தார். இப்போது யாக்கோபுக்கு இரண்டு பக்கத்திலும் சமாதானம் கிடைத்தது. தேவன் இவையெல்லாவற்றையும் அவனுக்காகவே ஒழுங்கு செய்திருந்தார். யாக்கோபு தன் சொந்த புத்தியையே சார்ந்திருந்திருந்தால், அவன் ஒருவேளை பயங்கரமான மரணத்தைச் சந்தித்திருக்கக்கூடும்.

பிற்பாடு, யாக்கோபு தன் கடந்த கால வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கும்போது, தேவனுடைய கரத்தைக் கண்டு தேவனுக்கே மகிமையைச் செலுத்துவான். ஆனால் இப்போதைக்கு, விசுவாசத்திலே நடப்பது எப்படி என்பதை யாக்கோபு கற்றுக்கொண்டு வந்தான்.

தன் புதிய இருப்பிடத்தில், தன் முற்பிதாவாகிய ஆபிரகாம் தான் சென்ற இடங்களிலெல்லாம் செய்தது போலவே, யாக்கோபும் ஒரு பலிபீடத்தைக் கட்டினான். **அந்தப் புதிய இடத்திற்கு "ஏல் எலோகே இஸ்ரவேல்" என்று பெயரிட்டான்; அதற்கு "தேவன் இஸ்ரவேலுடைய தேவன்" என்று அர்த்தம்.** யாக்கோபு தன் புதிய பெயரை தேவனுடைய பெயரோடு இணைத்துப் பார்க்கிறான். விசுவாசத்திலே நடக்கக் கற்றுக்கொண்டிருந்த ஒரு மனிதனில் ஏற்பட்ட உண்மையான ஆவிக்குரிய வளர்ச்சியை இது காட்டுகிறது. ஆனாலும், அது ஒரு நிதானமான வளர்ச்சியாகவே இருந்தது.

அவன் விசுவாசத்தில் இன்னும் அதிகமாக வளர வேண்டியதாயிருந்தது. இதனிமித்தம் அவனுடைய குடும்ப வாழ்வில் இன்னும் ஒரு துயரத்தை எதிர்கொள்ளவிருந்தான்.



"தேவனோடுள்ள விசுவாச வாழ்க்கையில் எப்படி அடியெடுத்து வைப்பது என்பதைப் பற்றி யாக்கோபு இப்போது கற்றுக்கொண்டுவந்தான்"



தேவனுடைய மாறாத சத்தியங்கள்

ஆதியாகமம் 33-ம் அதிகாரத்திலிருந்து நமக்கான பாடங்கள்

தேவனுடைய மறுரூபமாக்கும் கிரியை உண்மையான மாற்றத்தை உண்டாக்குகிறது. யாக்கோபு வாங்குவதிலிருந்து கொடுப்பவனாக மாறினான்.

- **சத்தியம்:** யாக்கோபு மற்றவர்களிட மிருந்து பெற்றுக்கொள்வதிலேயே ஆர்வமாயிருந்தான். அவன் ஏசாவிடமிருந்து சேஷ்ட புத்திர பாகத்தை வாங்கிக்கொண்டு, ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டான். தனக்குக் கிடைத்த ஒவ்வொரு வாய்ப்பையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டான். ஆனால் பெனியேலிலே அவன் தேவனைச் சந்தித்த பின்பு, அவனுக்குள் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. தான் ஒருகாலத்தில் ஏமாற்றிய தன் சொந்த சகோதரனுக்கே இப்போது தாராளமாகக் கொடுக்க முன்வந்தான். தேவன் அவனுக்கு இரண்டு பக்கத்திலும் அதாவது அவனுக்குப் பின்னால் லாபானோடும், அவனுக்கு முன்னால் ஏசாவோடும் சமாதானத்தை உண்டாக்கினார். யாக்கோபு தன் சொந்த தந்திரத்தையே சார்ந்திருந்திருந்தால், அவன் ஒரு கொடூரமான மரணத்தைச் சந்தித்திருக்கக்கூடும்.



- **புதிய ஏற்பாட்டு இணைப்பு:** *2 கொரிந்தியர் 5:17* "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின." *எபேசியர் 4:23-24* "உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப் பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்.



சிந்தனைக்கான கேள்விகள்

கேள்வி 1

மறுரூபமாக்கப்பட்டதற்கான அடையாளம்: யாக்கோபு மற்றவர்களிடமிருந்து வாங்குவதிலிருந்து, மற்றவர்களுக்குக் கொடுக்கும் சுபாவத்திற்கு மாறினான். உங்கள் சொந்த வாழ்க்கையில், தேவன் உங்களை மறுரூபமாக்கியிருக்கிறார் என்பதற்கு என்ன உறுதியான ஆதாரத்தைக் காட்ட முடியும்? உங்கள் குணாதிசயத்தில் உண்மையாகவே மாற்றம் ஏற்பட்ட பகுதிகள் எவை? அல்லது "யாக்கோபின் பழைய தந்திரமான சுபாவம்" இன்னும் ஏதேனும் காரியங்களில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றனவா?

கேள்வி 2

தேவன் செய்யும் ஏற்பாடுகளை நம்புதல்: யாக்கோபின் தந்திரமான திட்டங்களினால் ஒருபோதும் சாதிக்க முடியாத ஒப்புரவாகுதலை, தேவன் ஏசாவின் இருதயத்தை இளகப்பண்ணியதன் மூலம் ஏற்படுத்தினார். மற்றவரின் இருதயத்தில் தேவன் கிரியை செய்வார் என்று நம்பாமல், உங்கள் சொந்த பலத்தினாலே சமாதானம் செய்ய முயற்சிக்கும் முறிந்துபோன உறவுகள் உங்கள் வாழ்வில் உண்டா?

கேள்வி 3

யாக்கோபு ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு "தேவன் இஸ்ரவேலுடைய தேவன்" என்று பெயரிட்டான். இது அவனுடைய புதிய அடையாளத்தை மற்றவர்களுக்கு முன்பாக தேவனோடு இணைத்துக் காட்டியது. உங்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சி மெதுவாக நடப்பது போலத் தோன்றினாலும், தேவன் உங்கள் வாழ்வில் செய்த நன்மைகளை மற்றவர்களுக்கு முன்பாக அறிக்கை செய்யும், இந்த வாரத்தில் நீங்கள் எடுக்கப்போகும் சில காரியங்களைக் குறிப்பிடவும்?


தீனாளும் சீகேமியரும்
ஆதியாகமம் 34:1-31

தீனாளும் சீகேமியரும்

ஜெபத்துடன் தொடங்குங்கள்
வேதபகுதி: ஆதியாகமம் 34:1-31
கேளுங்கள் THRU the BIBLE: ஆதியாகமம் 34:1-31

அன்புள்ள பரலோகப் பிதாவே,

நாங்கள் மாம்சத்தின்படி செயல்படாதபடிக்கு எங்களைக் காத்துக் கொள்ளும். எங்களுக்கு அநியாயம் செய்யப்படும்போது, நாங்களே பழிவாங்காமல், உமது நீதியான நியாயத்தீர்ப்பை நம்புவதற்கு எங்களுக்கு உதவிசெய்யும். ஞானத்தோடு வழிநடத்துகிற தைரியத்தையும், பழிவாங்குதலை உமது கரங்களில் ஒப்புவிக்கிற விசுவாசத்தையும் எங்களுக்குத் தந்தருளும்.

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் பிதாவே. ஆமென்.

ஒரு குடும்பத்தின் அவமானம்

ஆதியாகமம் 34:1-31

லாபானின் வீட்டிலிருந்து தன் குடும்பத்தை வெளியே கொண்டுவர தேவன் யாக்கோபை ஏவியதற்கு ஒரு முக்கிய காரணம், அங்கே பிள்ளைகள் சந்திக்க நேரிட்ட தேவபயமற்ற சூழ்நிலையே ஆகும். குடும்பப் பிரச்சினைகள் யாக்கோபுக்குப் புதியதல்ல. ஆபிரகாமின் குடும்பத்திலும், ஈசாக்கின் குடும்பத்திலும் நடந்த பிரச்சினைகளை நாம் பார்த்திருக்கிறோம். யாக்கோபின் குடும்பமும், குறிப்பாக லேயாளின் நான்கு குமாரர்கள் மூலமாக உபத்திரவத்தைச் சந்தித்தது. இதற்குப் பல மனைவிகளைக் கொண்ட குடும்ப அமைப்பு காரணமாக இருக்கலாம். அல்லது யாக்கோபு லேயாளை நேசிக்காமல், அவளுடைய பிள்ளைகளுக்குக் குறைந்த முக்கியத்துவம் அளித்திருக்கலாம். இந்த நான்கு குமாரர்களும் - இந்தச் சம்பவத்தில் வரும் சிமியோன் மற்றும் லேவியும், பிற்காலத்தில் வரும் மூத்த குமாரனான ரூபன் மற்றும் யூதாவும் - தங்கள் வாழ்க்கையில் செய்த வெளிப்படையான பாவத்தினால் மிகவும் மோசமாக மாறினார்கள்.

யாக்கோபு தன் குடும்பத்தோடு கானான் தேசத்தில் குடியேறியபோது, அவர்கள் தங்கள் சொந்தப் பாரம்பரியத்திற்கும் கலாச்சாரத்திற்கும் திரும்புவார்கள் என்று அவன் நம்பினான். ஒருநாள், அவனுடைய குமாரத்தியாகிய தீனாள் அந்த ஊரைச் (சீகேமைச்) சுற்றிப் பார்க்கச் சென்றாள். அப்போது ஏவியனான ஏமோரின் குமாரன் அவளைக் கண்டு, அவளைப் பிடித்துத் தீட்டுப்படுத்தினான். இந்தச் சம்பவத்திற்குப் பின்பு, குற்றவாளியான அந்த வாலிபன் அவளைத் திருமணம் செய்துகொள்ள விரும்பினான்.

அவளுடைய சகோதரர்கள் இதைக் கேள்விப்பட்டபோது, அவர்கள் ஒன்றுகூடி ஆலோசனை செய்தார்கள். அந்த வாலிபனாகிய சீகேமின் தகப்பனான ஏமோர், தன் குமாரனுக்காகத் தீனாளைப் பெண் கேட்கும்படி வந்தான். அவர்கள் ஒருவரோடொருவர் சம்பந்தங்கலந்து ஒரே ஜனமாக மாறும்படியும் (அதன்மூலம் யாக்கோபின் ஆஸ்திகளைச் சுதந்தரித்துக் கொள்ளும்படியும்) தங்கள் குடும்பங்களுக்கு இடையே மற்ற திருமணங்களும் நடைபெற வேண்டும் என்று அவன் ஒரு ஆலோசனையைக் கூறினான்.

அப்படிப் புறஜாதியாரோடு சம்பந்தங்கலப்பது தேவனுடைய பார்வைக்குப் பொல்லாததும் தவறான காரியமுமாக இருந்ததால், யாக்கோபு முன்வந்து தன் குமாரர்களை வழிநடத்தியிருக்க வேண்டும். ஆனால், சீகேமையும் ஏமோரையும் வஞ்சிக்கத் தன் குமாரர்கள் திட்டம் தீட்டியிருந்ததை அவன் அறியாதிருந்தான்.



"எங்கள் சகோதரியை விருத்தசேதனமில்லாத ஒருவனுக்கு நாங்கள் திருமணம் செய்து கொடுக்கக் கூடாது" என்று அவர்கள் வஞ்சகமாய்ச் சொன்னார்கள். (தங்கள் சகோதரிக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் குறித்து அவர்கள் எதுவும் பேசவில்லை). யாக்கோபின் குமாரர்கள் ஒரு நிபந்தனையை விதித்தார்கள். "நீங்களும் எங்களைப்போல விருத்தசேதனம் செய்துகொண்டால், எல்லாம் சரியாகிவிடும்" என்றார்கள். (இது, ஒருவர் சபையில் சேர்ந்து சில சரியான கிறிஸ்தவ வார்த்தைகளைப் பேசினாலே, அவர் ஒரு கிறிஸ்தவர் என்று சொல்வது போலிருக்கிறது. ஆனால் அது உண்மையல்ல. நீங்கள் கிறிஸ்துவுக்குள் விசுவாசம் வைக்கும் போது, உங்களுக்குள் ஒரு மாற்றம் உண்டாகி, நீங்கள் முற்றிலும் புதிய நபராக மாறுவீர்கள்).

எனவே சீகேம், ஏமோர் மற்றும் அந்த ஊர் மனிதர்கள் அனைவரும் விருத்தசேதனம் செய்து கொள்ளச் சம்மதித்தார்கள். அவர்கள் இந்த அறுவை சிகிச்சையினால் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும்போது, தீனாளின் சகோதரர்களாகிய சிமியோனும் லேவியும் பழிவாங்கும் நோக்கத்தோடு அந்த ஊருக்குள் சென்று, அங்கிருந்த ஆண்கள் எல்லாரையும் கொலை செய்தார்கள். பின்பு மற்ற சகோதரர்களும் அவர்களோடு சேர்ந்துகொண்டு, அந்த ஊரின் ஆடுமாடுகளையும், ஆஸ்திகளையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும் சூறையாடிச் சிறைபிடித்துக் கொண்டுவந்தார்கள்.

அவர்கள் வீடு திரும்பியபோது யாக்கோபு அவர்களைப் பார்த்து, "இந்த தேசத்தின் குடிகளுக்கு முன்பாக நீங்கள் என் பேரைக் கெடுத்து, என்னைக் கலங்கப்பண்ணினீர்கள்" என்றான். தனக்கு அவப்பெயரை உண்டாக்கியதற்காக அவன் அவர்களைக் கடிந்து கொண்டானே தவிர, அவர்கள் செய்த கொடிய பாவத்தைக் குறித்து அவன் எதுவும் சொல்லவில்லை. யாக்கோபு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்துகொண்டிருந்தான், ஆனால் அவன் இன்னும் முழுமையாக வளரவில்லை.

அப்போது அவனுடைய குமாரர்கள் தங்களையும் தங்கள் சகோதரியையும் நியாயப்படுத்தி, "எங்கள் சகோதரியை ஒரு வேசியைப்போல நடத்தலாமா? யாராவது ஏதாவது செய்தாக வேண்டுமே!" என்று வாதிட்டார்கள். ஆனால், அவர்கள் எல்லையை மீறிச் செயல்பட்டார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

நாமே பழிவாங்காமல், பழிவாங்குதலைத் தேவனுடைய கரங்களில் விட்டுவிடும்படி அவர் நமக்குக் காட்டும் வழியை இன்று நாம் அறிந்திருக்கிறோம் (ரோமர் 12:19-21 ஐப் பார்க்கவும்). நாம் பழிவாங்க நினைக்கும் அந்த வினாடியிலேயே, நாம் விசுவாசத்தினால் நடப்பதை விட்டுவிட்டோம் என்று அர்த்தம். காரியங்களைத் தேவன் கவனித்துக்கொள்வார் என்று நாம் அவர்மேல் நம்பிக்கை வைக்கவில்லை என்பதையே இது காட்டுகிறது.

சுய நம்பிக்கை வாழ்நாள் முழுவதும் வருத்தத்தை ஏற்படுத்தும்

அவர்களுடைய வாழ்க்கையின் இந்த அதிகாரத்தில் நடந்த துயரமான காரியங்கள் யாவும், யாக்கோபு மாம்சத்தின்படி நடந்ததன் விளைவே ஆகும். பெனியேலில் அவன் தேவனோடு போராடியபோது, தன் சுயபலத்தை நம்பக்கூடாது என்பதைக் கற்றுக்கொண்டான்; ஆனால் தேவனை எப்படி முழுமையாக நம்புவது என்பதை அவன் இன்னும் கற்றுக்கொள்ளவில்லை. அவன் தன் குடும்பத்திற்குத் தேவபக்தியுள்ள ஒரு தலைவனாக இருக்கவில்லை; தன் பதினொரு குமாரர்களையும் சரியாக வழிநடத்தக் கூடிய தகுதியையும் அவன் பெற்றிருக்கவில்லை. இந்தத் துயரமான சம்பவத்திற்குப் பிறகு, யாக்கோபு தன் வாழ்க்கையில் தேவனுடைய கரத்தைக் காணத் தொடங்குகிறான்; அதன்பின்பு, அவன் பல காலத்திற்கு முன்பே எடுத்திருக்க வேண்டிய ஒரு முக்கியமான முடிவை இப்போது எடுக்கிறான்.



"அவர்களுடைய வாழ்க்கையின் இந்த அதிகாரத்தில் நடந்த துயரமான சம்பவங்கள் யாவும், யாக்கோபு மாம்சத்தின்படி நடந்ததன் விளைவே ஆகும்."

சுருக்க அட்டவணை:
யாக்கோபின் மாற்றம்


கொள்கை	மனுஷன் (யாக்கோபு)	புதிய மனுஷன் (இஸ்ரவேல்)	ஏற்பாட்டு கட்டளை
அந்தஸ்து	சுய பலத்தை நம்புதல்	தகுதியற்றவன் / இரக்கத்தைச் சார்தல்	லூக்கா 18:13-14
செயல்படும் விதம்	போராடுதல் / சுயமுயற்சி செய்தல்	பற்றிக்கொள்ளுதல்/ ஒப்புக்கொடுத்தல்	2 கொரிந்தியர் 12:9
நம்பிக்கை	தந்திரமான மாற்றுத் திட்டங்கள்	தேவ வார்த்தையில் இளைப்பாறுதல்	1 பேதுரு 5:7
நியாயம்	மாம்சத்தின்படி பழிவாங்குதல்	தேவகோபாக்கினையை நம்புதல்	ரோமர் 12:19



தேவனுடைய மாறாத சத்தியங்கள்

ஆதியாகமம் 34-ம் அதிகாரத்திலிருந்து நமக்கான பாடங்கள்

சத்தியம்: மாம்சத்தின்படி நடப்பது துயரத்திற்கு வழிவகுக்கும்; பழிவாங்குதல் தேவனுக்கே உரியது.



- **சத்தியம்:**தங்கள் சகோதரிக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக, யாக்கோபின் குமாரர்கள் தங்கள் தகப்பனின் பழைய வழிமுறையான வஞ்சகத்தைப் பயன்படுத்தி ஒரு பட்டணம் முழுவதையும் கொடூரமாகக் கொன்று பழிவாங்கினார்கள். ஆனால், நாம் பழிவாங்குதலைத் தேவனிடத்தில் விட்டுவிட வேண்டும் என்று புதிய ஏற்பாடு தெளிவாகக் கூறுகிறது. நாம் பழிவாங்க முயற்சிக்கும் அந்த வினாடியிலேயே, காரியங்களைத் தேவன் கவனித்துக்கொள்வார் என்று நாம் அவர்மேல் நம்பிக்கை வைக்கவில்லை என்பதை வெளிப் படுத்துகிறோம்; இது நாம் இனி விசுவாசத்தினால் நடக்கவில்லை என்பதையே காட்டுகிறது.



- **புதிய ஏற்பாட்டு இணைப்பு:** ரோமர் 12:19, 21: “பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்... நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு.” கலாத்தியர் 5:16: “பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றமாட்டீர்கள்.”

சிந்தனைக்கான கேள்விகள்

கேள்வி 1

மாம்சமா அல்லது ஆவியா: ஒருவர் உங்களுக்கு அநியாயம் செய்யும்போது, உங்கள் சாட்சியைக் காத்துக்கொள்வது உங்கள் முதல் எண்ணமாக இருக்கிறதா, அல்லது உங்கள் சுயகௌரவத்தைக் காத்துக்கொள்வதா? நீங்களே பழிவாங்குவது, தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பின்மேல் உங்களுக்கு விசுவாசம் இல்லை என்பதை எப்படி வெளிப்படுத்துகிறது?

கேள்வி 2

தலைமைத்துவக் குறைபாடுகள்: நெருக்கடியான நேரத்தில் யாக்கோபு தன் குமாரர்களை வழிநடத்தத் தவறினான். அதின் விளைவுகள் மிகவும் பயங்கரமாக இருந்தன. உங்களுக்குச் சங்கடமாக இருப்பதால், உங்கள் குடும்பத்திலோ அல்லது உறவுகளிலோ நீங்கள் சரியான முறையில் வழிநடத்தத் தயங்கித் தவிர்க்கும் காரியங்கள் உண்டா?

கேள்வி 3

உங்கள் வாழ்க்கையில் “சிமியோன், லேவி” செயல்பட்டதைப்போன்ற தருணம் உண்டா -அதாவது, ஆவிக்குரிய விதத்தில் செயல்படாமல் மாம்சத்தின்படி நீங்கள் நடந்துகொண்ட சூழ்நிலை உண்டா? உங்களுக்கு அநியாயம் செய்த ஒருவரை ஆசீர்வதிக்கவோ அல்லது அவரிடம் அன்பான வார்த்தையைப் பேசவோ முயற்சி செய்யுங்கள்; பதிற்செய்வதைக் கர்த்தருடைய கரங்களில் முழுமையாக ஒப்புவியுங்கள்.

கேள்வி 4

தன் பெயருக்கு ஏற்பட்ட களங்கத்திற்காக யாக்கோபு தன் குமாரர்களைக் கடிந்து கொண்டான்; ஆனால், அவர்கள் செய்த பாவத்தைக் குறித்து அவன் மௌனமாக இருந்தான். எது சத்தியமோ அதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், மற்றவர்களுக்கு முன்பாக எப்படித் தோற்றமளிக்கிறோம் என்பதிலேயே நீங்கள் எங்கே அதிகக் கவனம் செலுத்துகிறீர்கள் என்பதை வெளிப்படுத்தும்படி பரிசுத்த ஆவியானவரிடம் ஜெபியுங்கள்.


தேவனின் அழைப்புக்கு
யாக்கோபின் பதில்
ஆதியாகமம் 35 - 36

தேவனின் அழைப்புக்கு யாக்கோபின் பதில்

ஜெபத்துடன் தொடங்குங்கள்
வேதபகுதி: ஆதியாகமம் 35-36
கேளுங்கள் THRU the BIBLE: ஆதியாகமம் 35:1-29 ஆதியாகமம் 36:1-43

அன்புள்ள பரலோகப் பிதாவே,

உமது வார்த்தையை அமர்ந்து தியானிக்க நீர் எங்களுக்குக் கொடுத்த இந்த வாய்ப்புக்காக உமக்கு ஸ்தோத்திரம். உமது மகத்தான திட்டத்தின் முழுமையான நோக்கத்தை நாங்கள் கண்டுகொள்ள எங்களுக்கு உதவிசெய்யும். எங்களது புரிந்துகொள்ளும் உணர்வை ஆழப்படுத்தி, எங்கள் விசுவாசத்தைப் பலப்படுத்தி, நாங்கள் ஞானத்தோடும் உமது நோக்கத்தோடும் முன்னேறிச் செல்ல எங்களை வழிநடத்தியருளும்.

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் பிதாவே. ஆமென்.

யாக்கோபின் குடும்பம் சந்தித்த துயரமான சம்பவங்களுக்குப் பின்பு, **தேவன் யாக்கோபை பெத்தேலுக்குப் போகும்படி கட்டளையிட்டார்**. அந்த இடத்தின் பெயரைக் கேட்டதுமே, யாக்கோபுக்குப் பல முக்கியமான நினைவுகள் வந்திருக்கும். அவன் வாலிபனாக இருந்தபோது, ஏசாவுக்குத் தப்பித்துத் தன் தாயின் வீட்டைவிட்டு ஓடிப்போன சமயத்தில், **பெத்தேலில்தான் முதன்முதலாக இரவு தூங்கினான்**. அன்று இரவில் ஒரு கல்லைத் தலையணையாய் வைத்துக்கொண்டு தூங்கும்போது, **பூமியிலே வைக்கப்பட்டு வானம் வரைக்கும் எட்டுகிற ஒரு ஏணியையும்,** அதிலே தேவதூதர்கள் ஏறுகிறதையும் இறங்குகிறதையும் அவன் **சொப்பனத்தில் கண்டான்**.

யாக்கோபு தன் குடும்பத்தின் ஆவிக்குரிய தலைவனாகப் பொறுப்பேற்றல்

இப்போது தேவன் யாக்கோபை மீண்டும் பெத்தேலுக்கு அழைத்தார். அவன் இறுதியாகத் **தன் குடும்பத்தில் ஆவிக்குரிய தலைவனாகப் பொறுப்பேற்று** அவர்களை வழிநடத்தத் தொடங்கினான்.



தேவன் யாக்கோபுக்கு மூன்று கட்டளைகளைக் கொடுத்தார்:

முதலாவதாக, **"உங்களிடத்திலிருக்கிற அந்நிய தேவர்களை விலக்கிப்போடுங்கள்"** (ஆதியாகமம் 35:2) என்று கூறப்பட்டது. அவர்களிடம் விக்கிரகங்கள் எப்படி இருந்தன? ஏனெனில், யாக்கோபும், ராகேலும், லேயாளும் லாபானை விட்டு ஓடிவந்தபோது, ராகேல் குடும்பத்தின் விக்கிரகங்களை (சுரூபங்களை) எடுத்துக்கொண்டு வந்திருந்தாள்.

யாக்கோபு ஜீவனுள்ள மெய்யான தேவனை அறிந்திருந்ததால், அவன் அவற்றை முன்பே அப்புறப்படுத்தியிருப்பான் என்று நாம் எளிதாக நினைத்துவிடலாம். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை; இப்போது **அவனுடைய குடும்பத்தினர் அனைவரும் அந்த அந்நிய தேவர்களை வணங்கிக் கொண்டிருந்ததை நாம் பார்க்கிறோம்**. ஆகையால் இப்போது யாக்கோபு, அவர்கள் அவற்றை அகற்றிவிட வேண்டும் என்று கூறுகிறான்.

இரண்டாவதாக, **"உங்களைச் சுத்திகரித்துக்கொள்ளுங்கள்"** என்று தேவன் கூறுகிறார். ஒரு விசுவாசிக்கு, இது தன் வாழ்க்கையிலுள்ள **பாவங்களை அறிக்கையிட்டு விட்டுவிடுவதைக் குறிக்கிறது** (1 யோவான் 1:9 ஐப் பார்க்கவும்). **நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் தேவன் மன்னிப்பார்**

மூன்றாவதாக, **"உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள்"** என்று கூறுகிறார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பழைய வஸ்திரங்களைக் களைந்துபோடுங்கள். வேதத்தில், **வஸ்திரங்கள் என்பது ஒருவருடைய பழக்கவழக்கங்களையும் சுபாவங்களையும் குறிக்கிறது**. ஒரு கால்பந்து வீரர் அணியும் சீருடையானது அவனுடைய அடையாளத்தைக் காட்டுவதுபோல, இது ஒருவரின் பழக்கவழக்கத்தை அடையாளப்படுத்துகிறது.

யாக்கோபு தேவனுக்காக வாழத் தொடங்குதல்

யாக்கோபு பெத்தேலுக்குத் திரும்பிச் சென்ற அந்த நாளிலிருந்து அவன் தேவனுக்காக வாழத் தொடங்கினான். பெத்தேலைக் குறித்து நினைத்தபோது, **தன் ஆபத்துக்காலத்தில் தேவன் தன்னை எப்படிச் சந்தித்தார் என்பதை அவன் நினைவுகூர்ந்தான்.** அவன் வீட்டை விட்டு ஓடிப்போய், தனிமையிலும் வீட்டின் ஏக்கத்திலும் பெத்தேலுக்கு வந்த போது, **அவனுக்கு உண்மையுள்ளவராக இருப்பேன் என்று தேவன் வாக்குத்தத்தம் பண்ணினார்.** இப்போது, பல ஆண்டுகளுக்குப் பிறகு, தேவன் தனக்கு எவ்வளவு உண்மையாக இருந்திருக்கிறார் என்பதை யாக்கோபு உணர்ந்தான். **"நீ ஆரம்பித்த இடத்திற்கே திரும்பிப் போய், அங்கிருந்து மீண்டும் தொடங்கு" என்று தேவன் இப்போது அவனை அழைத்தார்.**

யாக்கோபும் அவனுடைய குடும்பத்தாரும் பெத்தேலுக்கு (இந்த இடத்தின் பழைய பெயர் லூஸ்) **பிரயாணம் செய்தபோது, தேவன் அவர்களைப் பாதுகாத்ததால்** யாரும் அவர்களைப் பின்தொடரவில்லை. அங்கே **அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டி, அந்த இடத்திற்கு ஏல்பெத்தேல் என்று பேரிட்டான்; அதற்கு "தேவனுடைய வீட்டின் தேவன்" என்று பொருள். இது யாக்கோபின் வாழ்க்கையில் ஏற்பட்ட ஆவிக்குரிய வளர்ச்சியை** வெளிப்படுத்துகிறது.

தேவன் தமது வாக்குத்தத்தத்தைப் புதுப்பித்தல்

பல ஆண்டுகளுக்கு முன்பு தேவன் யாக்கோபைச் சந்தித்த அதே இடத்திலேயே, தேவன் மறுபடியும் அவனுக்குத் தரிசனமானார். அந்த ஆண்டுகள் முழுவதும் தேவன் யாக்கோபை உருவாக்கப் பலவிதங்களில் முயற்சி செய்தார்; ஆனால், **லாபானோடு கழித்த அந்த ஆண்டுகள் பல வழிகளில் வீணான ஆண்டுகளாகவே இருந்தன.**

தேவன் அவனை நோக்கி: **"இனி உன் பேர் யாக்கோபு என்னப்படாமல், இஸ்ரவேல் என்று உனக்குப் பேர் வழங்கும் என்று சொல்லி, அவனுக்கு இஸ்ரவேல் என்று பேரிட்டார். பின்னும் தேவன் அவனை நோக்கி: நான் சர்வவல்லமையுள்ள தேவன், நீ பலுகிப் பெருகுவாயாக; ஒரு ஜாதியும் பற்பல ஜாதிகளின் கூட்டங்களும் உன்னிலிருந்து உண்டாகும்; ராஜாக்களும் உன் சந்ததியில் பிறப்பார்கள்"** *(ஆதியாகமம் 35:10-11)* என்றார்.

"நான் சர்வவல்லமையுள்ள தேவன்" - தேவன் ஆபிரகாமுக்குத் தம்மை வெளிப்படுத்திய பொழுதும் இதே பெயரைத்தான் பயன்படுத்தினார்.

"**நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் கொடுத்த தேசத்தை உனக்குக் கொடுப்பேன்; உனக்குப்பின் உன் சந்ததிக்கும் இந்த தேசத்தைக் கொடுப்பேன்**" *(ஆதியாகமம் 35:12)*.

தேவன் இந்த முக்கியமான தேசத்தைக் குறித்து அவனுடைய குடும்பத்திற்கு வாக்குத்தத்தம் செய்வது இது மூன்றாவது முறையாகும் - முதலில் ஆபிரகாமுக்கும், பின்பு ஈசாக்குக்கும், இப்போது யாக்கோபுக்கும் இந்த வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டது. கர்த்தர் இவர்களில் ஒவ்வொருவருக்கும் இதைக் குறித்துக் குறைந்தது இரண்டு அல்லது மூன்று முறையாவது சொல்ல வேண்டியிருந்தது. தேவன் தன்னோடே பேசின இடத்திலே **யாக்கோபு ஒரு கற்தூணை நிறுத்தி,** அதின்மேல் பானபலி வார்த்து, அந்த இடத்திற்குப் பெத்தேல் என்று பேரிட்டான்.

வேதாகமத்தில் **பானபலியைக் குறித்து இங்குதான் முதன்முறையாகச் சொல்லப்பட்டுள்ளது.** லேவியராகமம் ஐந்து விதமான பலிகளைக் குறித்துக் கூறுகிறது, ஆனால் பானபலியைக் குறித்துக் கூறவில்லை. பானபலி மற்ற பலிகளின்மேல் வார்க்கப்பட்டு, ஆவியாக எழும்பும். பவுல் பிலிப்பியருக்கு எழுதும்போது, **தன் ஜீவனும் இப்படியாக ஒரு பானபலியைப்போல வார்க்கப்பட வேண்டும் என்று தான் விரும்புவதாகக் கூறினார்** *(பிலிப்பியர் 2:17)*.

பென்யமீன் பிறந்தான்

யாக்கோபுக்குத் தன் அன்பான மனைவியாகிய ராகேலின் மூலமாக ஏற்கனவே யோசேப்பு என்ற ஒரு குமாரன் இருந்தான். இப்போது அவர்கள் பெத்தேலை விட்டுப் பிரயாணம் செய்தபோது, **ராகேலுக்கு இரண்டாவது குமாரனைப் பெற்றெடுக்கும் பிரசவ வேதனை உண்டாயிற்று.** குழந்தை பிறந்தபோது, **ராகேல் மரிக்கும் தருவாயில் இருந்தாள்.** அவள் அவனுக்குப் பெனோனி என்று பேரிட்டாள்; அதற்கு **"என் துக்கத்தின் மகன்"** என்று அர்த்தம். ஆனால் யாக்கோபு அவனைப் பார்த்து, நான் என் அன்பான ராகேலை இழந்துவிட்டேன், இந்தக் குழந்தை அவளைப் போலவே இருக்கிறான், ஆகையால் **இவனைப் பென்யமீன் என்று அழைப்பேன்** என்றான்; அதற்கு **"என் வலதுகையின் மகன்"** என்று அர்த்தம்.

அந்தச் சிறுவன் ராகேலின் துக்கத்தின் மகனாக இருந்தது உண்மைதான் என்றாலும், யாக்கோபால் அவனைப் பெனோனி என்று அழைக்க முடியவில்லை. அவன் யாக்கோபின் துக்கத்திற்குக் காரணமல்ல; அவன் அவனுடைய வலதுகையின் மகன், **அவனுடைய முதிர்வயதில் அவன் சாய்ந்துகொள்ளும் ஊன்றுகோலாக இருப்பான்.** பிற்காலத்தில் யாக்கோபு அனுபவிக்கப்போகிற மிகுந்த துக்கத்தை நாம் புரிந்துகொள்ள இது உதவுகிறது. இதற்கெல்லாம் மூலகாரணம் யாக்கோபின் பாவமே ஆகும்.

நம்முடைய வாழ்க்கையில் உள்ள தவறுகளை தேவன் ஒருபோதும் அங்கீகரிப்பதில்லை. அதற்கான விளைவுகளிலிருந்து நாம் தப்பித்துக்கொள்ள முடியாது.



இத்தனை ஆண்டுகளாக யாக்கோபின் வாழ்க்கையில் இருந்த ஒரே நல்ல காரியம் **அவன் ராகேல்மேல் வைத்திருந்த அன்பு மட்டுமே என்று சொல்லலாம்.** அவன் அவள்மீது முழுமையான அன்பு வைத்திருந்தமான். அவள் என்ன செய்தாலும் (தன் தகப்பனுடைய சுரூபங்களை வைத்திருந்ததைப்போல) அவன் அதைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டான். அவள் யாக்கோபுக்கு யோசேப்பு என்னும் குமாரனைப் பெற்றெடுத்தாள், இப்போது பென்யமீனைப் பெற்றெடுக்கிறாள். அவனுடைய பிறப்பு அவளுடைய மரணமாயிற்று. இது யாக்கோபுக்கு மிகுந்த மனவேதனையை அளித்தது.

மற்றப் பத்து குமாரர்களாலும் அவனுக்கு எந்தச் சந்தோஷமும் இல்லை. **ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவிகளைக் கொண்டிருப்பது பாவம் என்பதைத் தேவன் அவனுக்கு அநேகமாக ஒவ்வொரு நாளும் நினைப்பூட்டியிருப்பார்.** யோசேப்புக்கு அவனுடைய ஒன்றுவிட்ட சகோதரர்கள் செய்த காரியங்களிலிருந்து இது தெளிவாகத் தெரிகிறது.

யாக்கோபு யோசேப்பு மற்றும் பென்யமீன்மீது அன்புகூர்ந்தான், மற்றக் குமாரர்கள் அவர்கள்மேல் பொறாமைப்பட்டார்கள். அவன் யோசேப்பினிடம் அப்படிப்பட்ட பட்சபாதம் காட்டியிருக்கக் கூடாது. ஏனென்றால், தான் வளரும் பருவத்தில் தன் தகப்பன் தன்னை ஒதுக்கிவைத்தபோது அது எவ்வளவு வேதனையாக இருந்தது என்பதை அவன் அறிந்திருந்தான். அதனால் ஏற்பட்ட பிரச்சினைகளையும் அவன் அறிந்திருந்தான்.

ஈசாக்கின் மரணம்

முற்பிதாவாகிய ஈசாக்கு முதிர்வயதாகி, பூரண ஆயுசுள்ளவனாய் மரித்துப்போனான்; அவனுடைய குமாரராகிய ஏசாவும் யாக்கோபும் அவனை அடக்கம்பண்ணினார்கள். யாக்கோபு அந்தத் தேசத்திற்குத் திரும்பி வந்த பிறகு, இந்தச் சகோதரர்கள் இருவரும் ஒன்றாகச் சேர்ந்திருந்த ஒரே தருணம் இதுவேயாகும்.

ஏசா தன்னை அறிந்துகொள்வதற்கு முன்பே தேவன் அவனை அறிந்திருந்தார்

ஏசாவும் அவனுடைய குடும்பமும் **ஏதோம் தேசமாக மாறினார்கள்;** அவர்கள் சவக்கடலின் தென்கிழக்குப் பகுதியில் குடியேறினார்கள். நாம் அவர்களுடைய பெயர்களைப் பட்டியலிட்டால், அவை இன்று அரேபியப் பாலைவனத்தில் புழக்கத்தில் உள்ள பெயர்களைப் போலவே இருக்கும். அது ஒரு மலைப்பாங்கான பகுதி. **பாறையில் குடையப்பட்ட அதன் தலைநகரமான பெட்ரா இன்று அங்கே நிற்கிறது.** ஏதோமைக் குறித்து ஏசாயா, எரேமியா, எசேக்கியேல் மற்றும் ஒபதியா ஆகிய புத்தகங்களில் கூறப்பட்ட **தீர்க்கதரிசனங்கள் ஆச்சரியப்படத்தக்க வகையில் நிறைவேறியுள்ளன.**

ஏசா கவர்ச்சியான வாலிபனாக இருந்தான், ஆனால் **அவன் மாம்சத்தின்படி நடந்த மனுஷனாக இருந்தான்.** யாக்கோபும் தன் வாழ்வின் பெரும் பகுதியை அப்படியே கழித்தான். ஏசாவை விட்டுவிட்டு யாக்கோபைத் தேவன் தெரிந்துகொண்டதில் தவறு செய்திருப்பாரோ? பார்வைக்கு ஏசா மிகவும் நல்லவனாகத் தெரிந்தான். ஒபதியாவில் உள்ள ஒரு சிறிய தீர்க்கதரிசனம் ஏசாவின் உண்மையான முகத்தை நமக்குக் காட்டுகிறது.

இப்போது, ஒரு சிறிய ஏசா சுமார் 1,00,000 ஏதோமியர்களாகப் பெருகியிருக்கிறான். அவர்களில் ஒவ்வொருவரும் ஒரு சிறிய ஏசாவைப் போன்றவர்கள். அந்த ஜாதியைப் பாருங்கள், ஏசாவிடமிருந்து வந்தது என்னவென்று உங்களுக்குப் புரியும். நாம் என்ன பார்க்கிறோம்? **பெருமை நிறைந்த ஒரு இனம்** *(ஒபதியா 1:3-4)*. **அவர்கள் இருதயத்தின் பெருமை தேவனைச் சாராமல் தன்னிச்சையாக வாழ முடியும் என்ற அகந்தையாகும்.** தங்களுக்குத் தேவன் தேவையில்லை என்று சொல்லும் ஆத்துமாவாகும். இத்தகைய குணமுள்ளவனே ஏசா.

பழைய ஏற்பாட்டின் கடைசிப் புத்தகத்தில் தேவன், **"நான் யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன்"** என்று கூறுகிறார் *(மல்கியா 1:2-3)*. இந்த மனிதர்கள் வாழ்ந்து 1000 ஆண்டுகளுக்கு மேலாகும் வரை தேவன் இதைச் சொல்லவில்லை. **ஆனால் ஆரம்பத்திலேயே ஏசாவின் இருதயத்தைத் தேவன் அறிந்திருந்தார்.** அவர்கள் வரலாறு முழுவதும் எப்படிச் செயல்பட்டார்கள் என்பதைப் பார்த்தால், தேவன் செய்த தெரிந்துகொள்ளுதல் சரியானது என்பது புரியும்.

நாம் ஏசாவையும் அவனுடைய மூன்று மனைவிகளையும் பின்தொடர்ந்தால், அவர்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலிருந்து கானானிலுள்ள சேயீர் தேசத்திற்குச் செல்வதைக் காணலாம். **அங்கே, ஏசாவின் குடும்பம் அமலேக்கை ஏற்றுக்கொண்டது; இதுவே அமலேக்கியரின் தொடக்கமாகும்.** நூற்றாண்டுகள் செல்லச் செல்ல, பாலைவனத்திலிருந்த அந்தக் கோத்திரங்கள் பல திசைகளில் பிரிந்து சென்றன; சிலர் வட ஆப்பிரிக்கா முழுவதும் பரவினார்கள். **அரபு தேசத்து கோத்திரங்கள் அனைத்தும் ஆபிரகாமின் மூலமாக வந்தன. எகிப்தியளான ஆகார் மூலமாகவும்,** சாராள் மரித்தபின்பு அவன் விவாகம்பண்ணின கேத்தூராள் மூலமாகவும் அவர்கள் வந்தார்கள். இந்தக் கோத்திரங்கள் தங்களுக்குள் சம்பந்தங்கலந்து கொண்டார்கள், ஆனாலும் அவர்கள் இஸ்ரவேலர்களைப் போல அதே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே.

இதுவே மத்திய கிழக்குப் பகுதியிலுள்ள மக்களின் குடும்ப வரலாறு. இது வேறு எந்த ஆதாரங்களைக்காட்டிலும் பழமையானது. இன்றைய செய்தித்தாள்களின் தலைப்புச் செய்திகள் வரை அவர்களின் வரலாறு தொடர்கிறது.



தேவனுடைய மாறாத சத்தியங்கள்

ஆதியாகமம் 35-36 அதிகாரங்களிலிருந்து நமக்கான பாடங்கள்

1 பாவத்தைச் சுத்திகரித்தலும் அறிக்கையிடுதலும்:



“உங்களைச் சுத்திகரித்துக்கொள்ளுங்கள்” என்றும், பழைய வஸ்திரங்களை அகற்றிவிடுங்கள் என்றும் யாக்கோபு தன் குடும்பத்தாருக்குக் கொடுத்த கட்டளை, **பாவத்தை விட்டுவிடுவதையும் பழைய பழக்கவழக்கங்களைக் களைந்துபோடுவதையும் அடையாளப்படுத்துகிறது.** பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட இந்தச் சரீரப் பிரகாரமான சுத்திகரிப்பு, **1 யோவான் 1:9**-ல் காணப்படும் ஆவிக்குரிய சத்தியத்தோடு ஒப்பிடப்படுகிறது. புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கு இது உணர்த்தும் பாடம் என்னவென்றால்: **தேவன் நமக்கு மன்னிப்பை வழங்கினாலும், நம்முடைய வாழ்க்கையில் உள்ள பாவங்களை நாமே மனமுவந்து அறிக்கையிட்டு விட்டுவிடுகிற பொறுப்பும் நமக்கு இருக்கிறது.**


2 பானபலியாக வார்க்கப்படும் வாழ்க்கை:



தேவன் தன்னுடனே பேசினதற்குப் பதிலாக, யாக்கோபு ஒரு கற்தூணை நிறுத்தி, அதன்மேல் பானபலி வார்த்தான். **வேதாகமத்தில் பானபலியைக் குறித்து முதன்முறையாக இங்கேதான் சொல்லப்பட்டுள்ளது.** இந்தப் பலியானது வார்க்கப்படும்போது ஆவியாக எழும்பும் ஒரு பலியாகும்.

- இந்தச் சத்தியம் **பிலிப்பியர் 2:17**-ல் உள்ள வார்த்தைகளோடு ஒத்துப் போகிறது. **அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய உன்னதமான ஆவிக்குரிய நோக்கத்தை விவரிக்க இதே உருவகத்தைப் பயன்படுத்தினார்.** அதாவது, **தன் சொந்த ஜீவனும் தேவனுடைய சேவைக்காக முற்றிலும் ஒரு பானபலியைப்போல வார்க்கப்பட** வேண்டும் என்று அவர் விரும்பினார்.

3 உடன்படிக்கையில் தேவன் காட்டும் மாறாத உண்மைத் தன்மையும், கீழ்ப்படிதலுள்ள ஆராதனையின் மூலம் வெளிப்படும் ஒரு விசுவாசியின் ஆவிக்குரிய முதிர்ச்சியும்



- பெத்தேலுக்குத் திரும்பிச் செல்லும்படி தேவன் கொடுத்த அழைப்புக்கு யாக்கோபு கீழ்ப்படிந்தபோது, அவன் **இறுதியாகத் தேவனுக்காக வாழவும் தன் வாழ்க்கையில் ஆவிக்குரிய தலைவனாகப் பொறுப்பேற்கவும் தொடங்கிவிட்டான்** என்பதை வெளிப்படுத்தினான். அவனுடைய கீழ்ப்படிதலுக்குப் பலனாக, தேவன் அவனுக்குத் தரிசனமாகி, அவனுடைய பெயரை இஸ்ரவேல் என்று அதிகாரப்பூர்வமாக மாற்றி, **“நான் சர்வ வல்லமையுள்ள தேவன்”** என்று அறிவித்தார். தேவன் முதன்முதலில் ஆபிரகாமுக்குத் தம்மை வெளிப்படுத்தியபோது பயன்படுத்திய அதே நாமம் இதுவேயாகும் என்பதை ஆதாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இந்தத் தருணத்தில், தேவன் முன்பு ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் வாக்குத்தத்தம் பண்ணிய அதே தேசத்தை யாக்கோபுக்கும் வாக்குத்தத்தம் பண்ணி, **தமது நித்திய உடன்படிக்கையைப் புதுப்பித்தார்.**

- இந்த தெய்வீக வெளிப்பாட்டிற்கு யாக்கோபு அளித்த பதில், அவனுடைய **ஆவிக்குரிய முதிர்ச்சியின் பயணத்தை மிகச் சரியாக விளக்குகிறது.** அவன் சரியான முறையில் பதிலளித்து, **ஒரு பலிபீடத்தைக் கட்டி, அந்த இடத்திற்கு ஏல்பெத்தேல் என்று பேரிட்டான்;** அதற்கு **“தேவனுடைய வீட்டின் தேவன்”** என்று அர்த்தம். அவனுடைய தாத்தாவாகிய ஆபிரகாமைப் போலவே, **சர்வவல்லமையுள்ள தேவன்மீது யாக்கோபு வைத்திருந்த விசுவாசம் அவனுடைய செயல்களின் மூலமாக வெளிப்பட்டது.** தான் ஆரம்பித்த இடத்திற்கே திரும்பிச் செல்லும்படி தேவன் காட்டிய வழியைப் பின்பற்றும் சரியான முடிவை எடுத்ததன் மூலமாகவும், ஆராதனைக்காக ஒரு பலிபீடத்தைக் கட்டியதன் மூலமாகவும், **யாக்கோபின் செயல்கள் அவனுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட உண்மையான ஆவிக்குரிய வளர்ச்சியை வெளிப்படுத்தின.**

சிந்தனைக்கான கேள்விகள்

கேள்வி 1

தேவன் தம்மை “சர்வவல்லமையுள்ள தேவன்” என்று வெளிப்படுத்தி, தேசத்தைக் குறித்த வாக்குத்தத்தத்தைப் புதுப்பித்தபோது, யாக்கோபு தேவனுடைய மாறாத உண்மைத்தன்மையை உணர்ந்து, அந்த இடத்திற்கு “தேவனுடைய வீடு” என்று அர்த்தங்கொள்ளும் ஏல்பெத்தேல் என்று பேரிட்டான்.

உங்கள் சொந்த ஆவிக்குரிய பயணத்தைத் திரும்பிப் பார்க்கும்போது, தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களில் உங்களுக்கு எப்படி உண்மையுள்ளவராக இருந்திருக்கிறார்? மேலும், நீங்கள் முதன்முதலாக அவரோடு நடக்க ஆரம்பித்ததிலிருந்து ஆவிக்குரிய விதத்தில் நீங்கள் எவ்வளவு வளர்ந்திருக்கிறீர்கள் என்பதை வெளிப்படுத்தும் குறிப்பிட்ட தருணங்கள் அல்லது முடிவுகள் யாவை?

கேள்வி 2

யாக்கோபின் ஆவிக்குரிய வளர்ச்சி அவனுடைய நடைமுறைச் செயல்களின் மூலம் வெளிப்பட்டது. அதாவது பெத்தேலுக்குத் திரும்பும்படி தேவன் காட்டிய வழியைக் கீழ்ப்படிந்து, தன் அர்ப்பணிப்பைக் குறிக்கும் வகையில் ஆராதனைக்கென்று ஒரு பலிபீடத்தைக் கட்டினான்.

சர்வவல்லமையுள்ள தேவன்மீது நீங்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு ஆதாரமான செயலாக, உங்கள் வாழ்க்கையில் நீங்கள் கட்டக்கூடிய நடைமுறையான ஒரு “பலிபீடம்” என்ன? உதாரணமாக, ஜெபத்திற்கென்று ஒரு குறிப்பிட்ட நேரத்தையும் இடத்தையும் ஒதுக்குவது, உங்கள் குடும்பத்தில் ஆவிக்குரிய தலைவனாகப் பொறுப்பேற்பது, அல்லது கீழ்ப்படிதலின் ஒரு குறிப்பிட்ட முடிவை எடுப்பது?

கேள்வி 3

விக்கிரகங்களை விலக்கிப்போடுதல்: யாக்கோபு மெய்யான தேவனை அறிந்திருந்தும், தன் குடும்பத்தார் “அந்நிய தேவர்களை” பல ஆண்டுகளாக வைத்திருக்க அனுமதித்திருந்தான். ஆவிக்குரிய தலைவராக நீங்கள் நடப்பதற்கு, உங்கள் வாழ்க்கையிலோ அல்லது வீட்டிலோ நீங்கள் இறுதியாக விலக்கிப்போட வேண்டிய மறைவான விக்கிரகங்கள், சமரசம் செய்யும் காரியங்கள், அல்லது பழைய பழக்கவழக்கங்கள் ஏதேனும் உள்ளனவா?

கேள்வி 4

பெத்தேலுக்குத் திரும்புதல்: யாக்கோபின் ஆபத்துக்காலத்தில் தேவன் அவனைச் சந்தித்துத் தமது உண்மையை நிரூபித்த இடத்திற்குத் திரும்பிச் செல்லும்படி அவனிடம் கூறினார். அதுபோல நீங்கள் திரும்பிப் பார்க்கக்கூடிய உங்களின் “பெத்தேல்” எது? அதாவது, ஒரு கடினமான நேரத்தில் தேவன் உங்களைச் சந்தித்த குறிப்பிட்ட தருணம் எது? அதை நினைத்துப்பார்ப்பது இன்று நீங்கள் “மீண்டும் தேவனுடனான பயணத்தைத் தொடங்குவதற்கு” எவ்வாறு உதவுகிறது?

கேள்வி 5

உங்கள் ஜீவனை வார்த்தல்: யாக்கோபின் பானபலியானது தேவனுக்கு முற்றிலும் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு வாழ்க்கைக்கு முன்மாதிரியாக இருக்கிறது; அப்போஸ்தலனாகிய பவுலும் இதே கருத்தைப் பிரதிபலித்தார். தேவனுடைய நோக்கங்களுக்காக எந்தெந்த வழிகளில் உங்கள் ஜீவனையும், நேரத்தையும், வளங்களையும் ஒரு “பானபலியைப் போல” ஊற்றுகிறீர்கள்?

கேள்வி 6

பெருமைக்காக உங்கள் இருதயத்தைச் சோதித்துப் பார்த்தல்: வெளிப்புறத்திற்கு ஏசா ஒரு கவர்ச்சியான மனுஷனாகத் தெரிந்தாலும், அவனுடைய சந்ததியினர் தாங்கள் தேவனைச் சாராமல் வாழ முடியும் என்று நம்புகிற ஆத்துமாக்களாக, பெருமை நிறைந்த ஒரு இனமாக மாறினார்கள். நீங்கள் தாழ்மையோடு தேவனைச் சார்ந்திருக்காமல், “மாம்சத்தின்படி” செயல்படும் அல்லது தேவனை விட்டுத் தன்னிச்சையாகச் செயல்படும் பகுதிகள் உங்கள் வாழ்க்கையில் ஏதேனும் உள்ளனவா?

THRU the BIBLE

எங்களுடைய வேதாகமம் சார்ந்த வளங்களைச்
செயலிகளின் மூலம் படிப்பதற்குக் கீழ்க்காணும்
QR Code-ஐ Scan செய்யுங்கள்

THRU the BIBLE செயலி மூலம்
200க்கும் மேற்பட்ட மொழிகளில்
கிடைக்கும் ஒலி வடிவ வேதாகம
போதனைகளைப் பதிவிறக்கம் செய்து
கேட்டுப் பயனடையுங்கள்

Visit ttb.bible

எங்கள் வலைத்தளத்தில், "வேதாகம
தோழன்" புத்தகத் தொடரிலுள்ள
வண்ணமயமான மின்னனுப்
புத்தகங்களைக் கண்டு வாசித்துப்
பயனடையுங்கள்

Visit ttbsa.org